பககங்கள்:14+சூரியகாந்தி-4 =18

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2034 மார்கழி 27 ஞாயிற்றுக்கிழமை (11-01-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:46

# ஆறு மாகாண சபைகள் 26ஆம் திகதி கலைப்பு?

## ஜனாதிபதி நடவடிக்கை

கொழும்பு,ஜனவரி11

**தெற்கில் உள்ள ஆறு மாகாண சபைகளையும் இம்மாதம் 26ஆம் திகதி கலைப்பதற்கு ஜனாதிபதி திட்டமிட்டுள்ளார் என இணையத்தளம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.**

மேற்கு, சப்பிரகமுவ, தென், மத்திய, வடமத்தி, ஊவா ஆகிய மாகாண சபைகளுக்கு ஒரே நாளில் தேர்தல்களை நடத்த வசதியாகவே அச் சபைகள் கலைக்கப்படவுள்ளன.

மே மாதத்துக்கு முன் அச்சபைகளுக்கு தேர்தல்களை நடத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் நடந்த கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் இந்த விடயம் ஆராயப்பட்டது.

பிரதமர் தலைமையில் நடந்த இக் கூட்டத்தில் ஒரேநாளில் ஆறு சபைகளுக்குமான தேர்தலை நடத்துவது என முடிவு செய்யப்பட்டது.

இந்த முடிவுக்கு அமையவே ஜனாதிபதி நடவடிக்கை எடுத்துள்ளார் எனக் கூறப்பட்டது.

இக்கூட்டத்தில் எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ, ஜே.வி.பி. குழுத் தலைவர் விமல் வீரவன்ஸ, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், மக்கள் விடுதலை முன்னணித் தலைவர் தினேஷ் குணவர்த்தன ஆகியோர் கலந்துகொண்டனர்.

தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்கவும் இக்கூட்டத்தில் கலந்துகொண்டார்.

(ம-3-5)

## ஜேர்மனிய அமைச்சர் வருகை

கொழும்பு,ஜன.11

ஜேர்மனிய நாட்டு வெளிவிவகார அமைச்சர் எச்.ஈ.கிறிஸ்ரின் முல்லர் மூன்றுநாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு நாளைமறுதினம் இலங்கைக்கு வருகிறார்.

(14ஆம் பக்கம் பார்க்க)

## பேச்சை மீண்டும் ஆரம்பிக்க திரைமறைவில் முயற்சிகள்?

### பொ.ஐ.முன்னணி மேற்கொள்கிறது

கொழும்பு,ஜன.11

இடைநிறுத்தப்பட்ட சமாதான முயற்சிகளை மீண்டும் ஆரம்பிப்பதற்காக விடுதலைப் புலிகளுடன் தொடர்புகளை ஏற்படுத்த பொதுமக்கள் ஐக்கிய முன்னணி திரைமறைவில் முயற்சிகளை மேற்கொண்டுள்ளது என கொழும்புச் செய்திவட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த முயற்சிகளை ஜனாதிபதியின் ஆலோசனையின் பேரில் அவரது நம்பிக்கைக்குரியவரான முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர மேற்கொண்டுள்ளார் என்றும் கூறப்படுகின்றது.

இந்த முயற்சியின் ஓர் அங்கமாக லண்டனில் உள்ள விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கத்துடன் தொடர்புகளை ஏற்படுத்துவதற்காக மங்கள சமரவீர லண்டன் சென்றுள்ளார் என்றும் - செய்தி வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

போர்நிறுத்த உடன்படிக்கையை முன்னெடுத்துச் செல்லல், புலிகளுடன் பேச்சு நடத்தல் ஆகியவற்றை ஜனாதிபதியின் பொறுப்பில் விடுவதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கடந்தவாரம் அறிவித்திருந்ததும் குறிப்பிடத்தக்கது. (ம-3)

## அம்பாறை சொறிகல்முனை கிராமத்தில் முஸ்லிம் குழு வீடுவீடாகத் தேடுதல்

மட்டக்களப்பு,ஜன.11

அம்பாறை மாவட்டத்தில் சொறிகல்முனைக் கிராமத்தில் நேற்றுக் காலை வீடுவீடாகத் தேடுதல் மேற்கொண்ட முஸ்லிம் குழு ஒன்று தமிழ் இளைஞர் ஒருவரைக் கைது செய்து அழைத்துச் சென்றுள்ளது.

இச்சம்பவத்தால் அந்தக் கிராமத்தில் நேற்றுப் பதற்றம் நிலவியது.

முஸ்லிம் இளைஞர் விழிப்புக் குழு என்று கூறிக்கொண்டு இரண்டு வானில் வந்தவர்களே கிராமத்தில் வீடு வீடாகத் தேடுதல் நடத்தினர்.

நல்லரத்தினம் சிவகுமார் என்ற தமிழ் இளைஞனைக் கைதுசெய்த அந்தக் குழுவினர், அவரைத் தம்மோடு அழைத்துச் சென்றனர்.

சவளக்கடைச் சந்தியில் நேற்று முற்பகல் 10மணிமுதல் பிற்பகல் வரை காணப்பட்ட அந்த முஸ்லிம் இளைஞர் குழுவினர் சொறிகல்முனைக் கிராமத்தில் வாழும் தமிழ் கிராமவாசிகளை விசாரணை செய்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக விடுதலைப் புலிகளின் வீரமுனைப் பிரிவுப் பொறுப்பாளர் புலிவண்ணன், சமாதானக் குழுவின் தலைவர் ஐ.எம். இப்ராமின்னின் கவனத்துக்குக் கொண்டு வந்தார்.

காணாமற்போன தமிழ் இளைஞன் சிவகுமாரை கல்முனைப் பொலீஸில் ஒப்படைக்கும்படி அவர் முஸ்லிம் இளைஞர்களிடம் கேட்டுக்கொண்டார்.

இதையடுத்து முஸ்லிம் இளைஞர் குழுவால் பிரஸ்தாப தமிழ் இளைஞன் கல்முனைப் பொலீஸில் ஒப்படைக்கப்பட்டார். பொலீஸார் அவரை விடுதலை செய்தனர். (ம-3)

## சு.கட்சிப் பிரதிநிதிகளை சந்திக்கிறார் ஜனாதிபதி

### அரசியல் நிலைவரம் பற்றி அறிவதற்காக

கொழும்பு,ஜன.11

தற்போதைய அரசியல் நிலைவரம் குறித்து அறிவதற்காக ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களையும், அமைப்பாளர்களையும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சந்திக்க ஆரம்பித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் ஜே.வி.பிக்கும் இடையில் கூட்டணி அமைக்க எடுக்கும் முயற்சிகளை கட்சியின் 50 நாடாளுமன்ற உறுப்பினர்கள் எதிர்த்து வருகின்றனர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியை நலிவுறச்செய்து அதனை ஓரம்கட்டி தமது திட்டத்தை நிறைவேற்ற ஜே.வி.பி. முனைகிறது என்று அவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இந்நிலையில், இக்கூட்டணி தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் கருத்துக்கேட்பதற்காக அவர்களை ஜனாதிபதி சந்தித்து வருகின்றார்.

இந்தச் சந்திப்பை அடுத்தே ஜனாதிபதி சு.கட்சி, ஜே.வி.பி. கூட்டணி குறித்து முடிவுசெய்வார் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஜனாதிபதி மாளிகையில் முதலாவது சந்திப்பு சப்பிரகமுவ, வடமத்திய மாகாண நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் இடம்பெற்றது என்றும்-

அடுத்த சந்திப்பு நாளை ஊவா மற்றும் மத்திய மாகாண எம்.பிக்களுடன் இடம்பெறும் என்றும் - கட்சியின் செயலாலர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார். (ம-3-5)

## சூட்டுக் காயங்களுடன் சடலம் மட்டுவில் பகுதியில் நேற்று மீட்பு!

தென்மராட்சி,ஜன.11

மட்டுவில் கல்வயல் ஜயனார் கோயிலுக்குச் சமீபமாக 30 வயது மதிக்கத்தக்க இளைஞர் ஒருவரின் சடலம் நேற்றுப்பகல் சூட்டுக்காயங்களுடன் மீட்கப்பட்டுள்ளது.

பொதுமக்களின் தகவலை அடுத்து பகல் 11.30 மணியளவில் சாவகச்சேரிப் பொலீஸார் சடலத்தை மீட்டனர்.

மரண விசாரணைக்காக சடலம் பொலீஸாரால் நேற்றுப் பிற்பகல் 3.30 மணியளவில் யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது.

சாவகச்சேரி நீதிவான் பா.சுப்பிரமணியம் சம்பவ இடத்திற்கு இன்று காலை நேரில் சென்று பார்வையிடுவதுடன், யாழ். ஆஸ்பத்திரியில் மரண விசாரணைகளை நடத்துவார்.

உயிரிழந்தவர் யார் என்று நேற்றிரவுவரை அடையாளம் காணப்படவில்லை. (ம3-7-117)

## கொழும்பில் புதிய பாதுகாப்பு நடைமுறைகள்

கொழும்பு,ஜன.11

கொழும்புத் தலைநகர் பகுதிகளில் புதிய பாதுகாப்பு நடைமுறைகளைக் கொண்டுவரவுள்ளதாக பொலீஸ்மா அதிபர் இந்திரா டி சில்வா தெரிவித்துள்ளார்.

பாதாள உலகக் கோஷ்டி உறுப்பினர் தம்மிக அமரசிங்க சுட்டுக் கொல்லப்பட்டதன் பின்னர் கொழும்பின் பாதுகாப்பு நிலைமைகளின் அவசியத்தைக் கருத்திற்கொண்டே தான் இவ்வாறு புதியநடைமுறைகளைக் கொண்டுவரவுள்ளார் என்று அவர் தெரிவித்தார்.

இதற்கென விசேட பொலீஸ் நிலையங்களும் அமைக்கப்படவுள்ளன. பிரத்தியேகமாக அமைக்கப்பட்ட வாகன அணிகள் மூலம் நடமாடும் பொலீஸ் நிலையங்கள் கொழும்பின் முக்கிய சந்திகளில் அமைக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்த நடமாடும் பொலீஸ் நிலையங்களில் மக்கள் தமது முறைப்பாடுகளைச் செய்து கொள்ளலாம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ம-5)

## தமிழாராய்ச்சி மாநாட்டில் பலியானோருக்கு நேற்று இரு தனித்தனி அஞ்சலி நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஜன.11

தமிழாராய்ச்சி மாநாட்டில் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வுகள் நேற்றுக்காலையும் மாலையும் தனித்தனிக் குழுக்களால் நடத்தப்பட்டன.

முற்றவெளியில் உள்ள உயிரிழந்தோரின் நினைவாலயத்தில் இந்த நிகழ்வுகள் இடம்பெற்றன.

முற்பகல் 10.30 மணிமுதல் 11.30 மணிவரை யாழ். நல்லூர் கோட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் புனரமைப்புக் குழுவின் ஏற்பாட்டில் நினைவு நிகழ்வுகள் இடம்பெற்றன.

இந்நிகழ்வில் விடுதலைப் புலிகளின் பிரமுகர்கள், தமிழ்க் கூட்டமைப்புப் பிரமுகர்கள், பொதுமக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

நிகழ்வுகளைத் தொடர்ந்து அந்தப் பகுதியில் ஒலிபெருக்கி மூலம் எழுச்சிப் பாடல்கள் ஒலிபரப்பப்பட்டுக்கொண்டிருந்தன. மாலை 4 மணியளவில் அங்கு வந்த பொலீஸார் ஒலிபெருக்கி பாவனைக்கு பெறப்பட்ட அனுமதிக்கான கால அவகாசம் முடிவடைந்துவிட்டது எனத் தெரிவித்தனர். (14ஆம் பக்கம் பார்க்க)

## தனியார் பஸ் உரிமையாளர் வேலை நிறுத்தம்

யாழ்.மாவட்ட தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தினர் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை ஒருநாள் அடையாள வேலைநிறுத்தம் மேற்கொளவதென முடிவுசெய்துள்ளனர்.

அரசினால் நடைமுறைப்படுத்தப் பட்டுவரும் 'வற்'வரி முறையை நீக்கக் கோரி நாடு தழுவிய ரீதியில் நடத்தப்பட்டு வரும் வேலைநிறுத்தத்திற்கு ஆதரவு தெரிவித்தே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)

## சுவீடன் எம்.பிக்கள் தமிழ்ச்செல்வனுடன் பேச்சு!

கிளிநொச்சி,ஜன.11

வன்னிக்கு நாளை வருகைதரும் சுவீடன் நாடாளுமன்ற உறுப்பினர் குழு விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனை கிளிநொச்சியில் சந்தித்துக் கலந்துரையாடுவர்.

யுனிசெவ் அமைப்பின் ஏற்பாட்டில் வரும் இவர்கள், சுவீடன் உதவியுடன் அந்த அமைப்பு வன்னியில் மேற்கொள்ளும் திட்டங்களையும் பார்வையிடுவர்.

## கண்காணிப்புக் குழுவினது நடவடிக்கையில் மாற்றமில்லை

### அதன் உபதலைவர் தெரிவிப்பு

கொழும்பு,ஜன.11

யுத்தநிறுத்த உடன்பாட்டில் இருந்து விலகுவதாகப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அறிவித்தபோதும், யுத்தநிறுத்தம் தொடர்பான தமது நடவடிக்கைகளில் மாற்றம் ஏதும் ஏற்படவில்லை என்று யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் உப - தலைவர் ஹப்ரப் ஹொக்லண்ட் கூறியுள்ளார்.

கடந்த புதனன்று பிரதமர் விடுத்த அறிவிப்பில், யுத்தநிறுத்த உடன்பாட்டில் இருந்து தாம் விலகிவிட்டதாகத் தெரிவித்திருந்தார்.

இதுகுறித்துக் கேட்டபோதே ஹொக்லண்ட் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"யுத்தநிறுத்தம் தொடர்பாக எமது நடவடிக்கைகளில் எவ்வித மாற்றமும இல்லை. தமக்குப் புதுவித அறிவுறுத்தல்கள் ஏதும் கிடைக்கவில்லை" என்று அவர் கூறினார்.

பிரதமரின் அறிவிப்பு முறைப்படியானதா என்பது குறித்துக் கருத்துக் கூற அவர் மறுத்துவிட்டார். (ம-3-து)

## தைப் பொங்கலுக்கு புதுநெல் கிடைக்குமா?

### விவசாயிகள் கவலை

யாழ்ப்பாணத்தில் இம்முறை பருவ மழை பொய்த்துப் போனதால் பொங்கலுக்கு புதுநெல் கிடைக்காது என விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

இந்த வருடம் தேவையான நேரத்தில் மழை கிடைக்காத காரணத்தால் பெருமளவு நெற்பயிர்கள் அழியும் நிலையை எதிர்நோக்கியுள்ளன. விவசாயிகள் தைப் பொங்கலுக்கு புதுநெல் எடுத்து பொங்குவதே வழமையாகும்.

தற்போது வயல்களில் நெற் பயிர்கள் கதிர் வெளிவந்த நிலையில் இருக்கின்றபோதும், அவை முற்றுவதற்கு போதிய தண்ணீர் இல்லாமல் காயும் நிலை ஏற்பட்டுள்ளது. இதனால், நெல் மணிகள் உருவாவதற்குப பதிலாக சப்பி நெல்லே உருவாகும் என விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

ஏற்கனவே குடாநாட்டில் 20 வீதமான வயல்களில் நெற்பயிர்கள் அழிந்து போயுள்ளன. இந்நிலையில் தைப் பொங்கலுக்கும் புது நெல் எடுத்து பொங்க முடியாதது குறித்து விவசாயிகள் ஆழ்ந்த கவலை தெரிவித்துள்ளனர். கடந்த வருடம் இதற்கு மாறாக நல்ல விளைச்சல் கிடைத்தது என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# சதாமுக்கு போர்க்கைதி அந்தஸ்து!

வாஷிங்ரன்,ஜன.11

ஈராக்கின் முன்னாள் அதிபரும் தற்போது அமெரிக்காவிடம் கைதியாக இருப்பவருமான சதாம் ஹுசைனுக்கு போர்க்காலக் கைதி என்கினற அந்தஸ்து வழங்கப்படும் என அமெரிக்கா தெரிவித்துள்ளது.

அமெரிக்க இராணுவ தலைமையகமரீன பென்ரகனின் அதிகாரிகள் இந்தத் தகவலை நேற்று வெளியிட்டனர்.

இந்த அறிவிப்பை அடுத்து சதாமைப் பார்வையிடுவதற்த தம்மை அனுமதிக்கவேண்டும் என செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவினர் ஈராக்கிலுள்ள அமெரிக்க அதிகாரிகளிடம் கேட்டுள்ளனர்.

ஈராக்கில் போர் முடிவுக்கு வந்த பின்னர் தலைமறைவாக இருந்த சதாம், கடந்த டிசெம்பர் 13ஆம் திகதி அமெரிக்கப் படையினரால் கைதுசெய்யப்பட்டார்.

ஜெனீவா சட்ட திட்டங்களுக்கு அமைய ஒரு போர்க்கைதிக்குரிய அனைத்து உரிமைகளும் சதாமுக்கு வழங்கப்படும் என பென்ரகன் அதிகாரிகள் தெரிவித்தனர். பழைய எதிரி இராணுவப் படைகளின் தலைவர் என்கின்ற ரீதியிலேயே சதாமுக்கு போர்க்கைதி அந்தஸ்து வழங்கப்படும் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர். செஞ்சிலுவைச் சர்தேசக் குழு இந்த அறிவிப்பை "நீதியானதும் ஏற்கக்கூடியதும்" என்று தெரிவித்துள்ளது.

சர்வதேசப் பார்வையாளர்களின் பங்கேற்புடன் சதாம் ஹுசைன் பார்வைக்கு உட்படுத்தப்படுவார் என்று சி.பி.எஸ். தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில் அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் கொலின் பவல் தெரிவித்தார்.

"எங்கள் காவலில் உள்ள கைதிகளின் அடிப்படை உரிமைகள் பாதிக்கப்படும் விதத்தில் அவர்களை நடத்த மாட்டோம். போர்க்கைதிகள் தொடர்பான சர்வதேச விதிமுறைகளையும் மீறமாட்டோம்.

"சதாம் ஹுசைன் மீதான விசாரணையில் ஈராக்கியர்கள் முழு அளவில் பங்கேற்கவேண்டும் என அமெரிக்கா விரும்புகிறது. கொடுங்கோல் ஆட்சி நடத்திய சர்வாதிகாரி சதாமை ஈராக்கில் அமையும் புதிய அரசு எவ்வாறு கையாள்கிறது என்பதைப் பொறுத்தே அதன் நம்பகத்தன்மை மதிப்பிடப்படும்" - என்றார் கொலின் பவல்.


இதேவேளை -

இரகசிய இடத்தில் வைத்து அமெரிக்க அதிகாரிகள் சதாமிடம் தொடர்ந்து விசாரணைகளை நடத்திவருகின்றனர்.

தனது பதவிக்காலத்தில் குவிதது வைத்த சொத்துக்களை எங்கே பதுக்கினார் என்ற விவரத்தை அவர் அமெரிக்க அதிகாரிகளிடம் தெரிவித்துள்ளார் எனக் கூறப்படுகிறது.

பேரழிவு ஆயுதங்கள் தொடர்பான ஆவணங்கள் சில கைப்பற்றப்பட்டுள்ளன. அவற்றில் உள்ள இரகசியக் குறியீடுகள் என்ன என்பது பற்றி கருத்து வெளியிட சதாம் பிடிவாதமாக மறுத்துவிட்டார் என்றும் அதிகாரிகள் கூறுகின்றனர்.

பேரழிவு ஆயுதங்கள் எதனையும ஈராக் தயாரிக்கவில்லை என்று அவர் திட்டவட்டமாகத் தெரிவித்துவருகிறார். அவரிடமிருந்து உண்மைகளை வரவழைக்க வேறு வழிகளைக் கையாளலாமா என்று அமெரிக்கா ஆலோசித்து வருகிறது. (ம)



## ஈராக்கில் குண்டுத் தாக்குதல்: 6 பேர் பலி!

பக்தாத்,ஜன.11

ஈராக்கின் வஹூபா நகரில் உள்ள மசூதி அருகே குண்டுவெடித்ததில் 6பேர் உடல் சிதறிப் பலியாகினர்; 40 இற்கும் அதிகமானோர் காயமடைந்தனர். அவர்களில் பலரது உடல் நிலை கவலைக்கிடமாக உள்ளது.

எரிவாயு சிலிண்டரிற்குள் வெடிமருந்தைச் செலுத்தி அதனை வெடிக்க வைத்ததாக கூறப்பட்டது.

பலியானவர்கள் மற்றும் காயமடைந்தவர்கள் அனைவரும் ஷியா பிரிவு முஸ்லிம்கள் எனவும் சுனி பிரிவு முஸ்லிம்களே இந்தத் தாக்குதலை நடத்தினார்கள் என்றும் கூறப்படுகிறது. ஏற்கனவே கடந்த ஒகஸ்ட் மாதம் நஜாப் நகரில் சுனி பிரிவினர் மசூதி ஒன்றில் நடத்திய தாக்குதலில் 40 பேர் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## காற்சட்டைப் பையிலிருந்த செல்போன் திடீரென வெடித்துச் சிதறியது!

ஹனோய்,ஜன.11

காற்சட்டைப் பையில் வைத்திருந்த நொக்கியா செல்போன் திடீரென வெடித்தது. இச்சம்பவம் வியட்னாமின் தனாங் மாகாண நகரில் நடந்தது.

வியட்நாம் அரசின் நிதித்துறையின் கணக்குப் பிரிவில் பணியாற்றி வரும் ஒருவர் தமது நீளக் காற்சட்டைப் பையில் நொக்கியா 8310 செல்போனை வைத்திருந்தார்.

அந்தச் செல்போன் திடீரென வெடித்தது. எனினும், அந்த நபருக்கு காயம் ஏதும் ஏற்படவில்லை.

வெடித்த செல்போனை எடுத்துப் பார்த்தபோது அதன் மேல் இருந்த உறை ஆள்காட்டி விரல் அளவுக்கு கருகியிருந்தது.

செல்போன் முழுவதுமாக செயலிழந்திருந்தது. அதன் ஸ்கிரீனில் எந்தத் தகவல்களும் வரவில்லை என்று அதை வைத்திருந்த நபர் கூறினார்.

இதேபோன்று கடந்த மாதம் இதே மொடல் செல்போனில் ஒருவர் பேசிக் கொண்டிருக்கையில் அது வெடித்துச் சிதறியதில் வியட்நாமின் ஹோசிமின் நகரில் ஒருவரது முகத்தில் பலத்த காயம் ஏற்பட்டது.

இதுபோன்று செல்போன் வெடிப்பதற்கு அதில் போடப்பட்டிருந்த மின்னியல் பற்றரிகளே காரணம். செல்போனில் எந்தவிதக் கோளாறும் இருக்க வாய்ப்பில்லை என்று செல்போன் நிறுவனம் தெரிவித்துள்ளது. (ம)

## செவ்வாயின் தட்பவெப்பநிலை விவரம் அனுப்புகிறது ஸ்பிரிட்

நியூயோர்க்,ஜன.11

செவ்வாய்க்கிரகத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை தரையிறங்கிய ஸ்பிரிட் ரோவர் அங்குள்ள தட்பவெப்ப நிலை தொடர்பான தகவல்களை பூமிக்கு அனுப்பத் தொடங்கியுள்ளது. இத்தகவலை நாஸா விஞ்ஞானிகள் தெரிவித்தனர்.

செவ்வாய்க்கிரகத்தில் இரவைவிட பகலில் குளிர் அதிகமாக உள்ளது என்று ஸ்பிரிட் ரோவர் அனுப்பும் தட்ப வெப்பநிலை தொடர்பான தகவல்களைச் சேகரிக்கும் விஞ்ஞானி பீல் கிறிஸ்டினன்ட் தெரிவித்துள்ளார்.

செவ்வாயில் அதிகளவிலான வெப்பம் 5 டிகிரி செல்சியஸாகவும் குறைந்தளது வெப்பநிலை -15 டிகிரி செல்சியஸாகவும் உள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை -

ரோவரின் அடியில் சிக்கிக் கொண்ட காற்றுப் பைகளை அதிலிருந்து பிரிப்பதற்காக அதனை மெதுவாக நகர்த்தும் விஞ்ஞானிகளின் முயற்சி தோல்வியடைந்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (ம)

## இடதுசாரி தீவிரவாதிகள் தாக்குதலில் 8 பேர் பலி!




மணிலா,ஜன.11

பிலிப்பைன்ஸ் தலைநகர் மணிலாவிலுள்ள மின் உற்பத்தி நிலையம் ஒன்றின் மீது இடதுசாரி தீவிரவாதிகள் நேற்று நடத்திய தாக்குதலில் மூன்று படையினர் உட்பட எட்டுப் பேர் கொல்லப்பட்டனர். மேலும் 7 படையினர் காயமடைந்தனர்.

இந்தத் தாக்குதலில் தொலைத் தொடர்புக் கோபுரம் ஒன்று தீப்பற்றி எரிந்தது. மின் உற்பத்தி நிலையமும் சேதமடைந்தது. புதிய மக்கள் இராணுவம் என்ற அமைப்பே இந்தத் தாக்குதலை நடத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இடதுசாரி நாடு ஒன்றை அமைப்பதற்காக இந்த அமைப்பு போராடி வருகிறது. அமெரிக்க எதிர்ப்பையும் கடுமையாகக் கொண்டு செயற்பட்டு வருகிறது.

எதிர்வரும் மே மாதத்தில் தேர்தலைச் சந்திக்கவுள்ள ஜனாதிபதி குளோறியா அரோயாவுக்கு எச்சரிக்கை விடுக்கும் வகையில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்று பிலிப்பைன்ஸ் இடதுசாரிக் கட்சிகளின் பேச்சாளர் றோசல் தெரிவித்தார்.

இந்தப் பகுதியில் (தாக்குதல் நடந்த இடம்) இராணுவத்தினர் மேற கொள்ளும் மனித உரிமைகள் துஷ்பிரயோகங்களுக்கு கிடைத்த தண்டனையே. அவர்கள் மீதான தாக்குதல் என்றும் அவர் தெரிவித்தார். (ம)

## இந்திய - பாக். வெளியுறவுச் செயலர்கள் பெப்ரவரியில் மூன்று சுற்றுப் பேச்சுக்கள்

இஸ்லாமாபாத்,ஜன.11

காஷ்மீர் உட்பட அனைத்துப் பிரச்சினைகளிலும் படிப்படியான முன்னேற்றம் காண்பதற்காக அடுத்த மாதம் இந்தியா - பாகிஸ்தான் வெளியுறவுத்துறைச் செயலாளர்கள் 3 சுற்றுப்பேச்சுக்களை நடத்துவர் என்று பாகிஸ்தான் அதிபர் முஷாரப் சனிக்கிழமை தெரிவித்தார்.

பிரதமர் வாஜ்பாயுடன் நடந்த சந்திப்புக் குறித்து ஆக்கிரமிப்பு காஷ்மீர் தலைவர்களுக்கு முஷாரப் விளக்கினார். அது பற்றிய செய்தியை இஸ்லாமாபாத்தில் இருந்து வெளியாகும் 'டான்' பத்திரிகை வெளியிட்டுள்ளது.

அச்செய்தியில் கூறப்பட்டுள்ளதாவது:-

காஷ்மீர் பிரச்சினைத் தீர்வுக்கு கட்டுப்பாட்டு எல்லைக்கோட்டை நிரந்தர எல்லையாக இஸ்லாமாபாத் ஏற்றுக் கொள்ளாது.

கட்டுப்பாட்டு எல்லைக்கோட்டை எல்லையாக நாங்கள் கடந்த காலங்களில் ஏற்றுக்கொண்டதில்லை. எதிர்காலத்திலும் இந்நிலையில் மாற்றமில்லை.

பெப்ரவரியில் நடைபெறும் வெளியுறவுச் செயலர்கள் பேச்சுக்களைத் தொடர்ந்து அதிகாரிகள் நிலையில் பல்வேறு குழுக்கள் நியமிக்கப்படும்.

வர்த்தகம், இரு நாட்டு மக்களிடையே நேரடித் தொடர்பு உட்பட பல்வேறு அம்சங்கள் குறித்து அதிகாரிகள் குழுக்கள் பேச்சு நடத்தும் என்று முஷாரப் தெரிவித்ததாக அந்த பத்திரிகை செய்தி கூறுகிறது. (ம)



ஈராக்கில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதலில் சேதமடைந்த வாகனம் ஒன்றை சோதனையிடும் அமெரிக்கச் சிப்பாய்கள்

## கூட்டுப்படையினர் தாக்குதலில் ஈராக்கியர் அறுவர் உயிரிழப்பு!

பக்தாத்,ஜன.11

ஈராக்கின் தெற்கு நகரான அமராவில் வேலையற்றோர் நடத்திய ஆர்ப்பாட்டத்தின் மீது ஈராக்கியப் பொலீஸாரும் கூட்டுப்படையினரும் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் குறைந்தது ஆறுபேர் உயிரிழந்தனர். மேலும் பலர் காயமடைந்தனர்.

கூட்டுப்படையினர் இந்த களேபரம் நிகழ்ந்ததை உறுதிப்படுத்தினர். எனினும் ஒருவரே அதில் உயிரிழந்தார் என அவர்கள் கூறினர்.

கிரனேட்டை வீசுவதற்கு முற்பட்ட ஒருவரையே தாம் சுட்டுக்கொன்றதாக அமெரிக்க இராணுவ பேச்சாளர் தெரிவித்தார். ஆனால் இதனை ஆர்ப்பாட்டக்காரர்கள் மறுத்துள்ளனர்.

## அமெரிக்க குடியுரிமை சட்டத்தில் விரைவில் மாற்றங்கள் வரும்

அமெரிக்கக் குடியுரிமைச் சட்டத்தில் விரைவில் பெரும் மாற்றங்கள் வரும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி அமெரிக்கர்கள் செய்ய முடியாத வேலைக்கு வெளிநாட்டுத் தொழிலாளர்களை பணிக்கு அமர்த்திக்கொள்ளமுடியும். அதற்காகத் தற்காலிகத் தொழிலாளர் திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது.

உலக அரங்கில்

தற்காலிகத் தொழிலாளர்களாக நியமிக்கப்படுவோர் அமெரிக்காவில் மூன்று ஆண்டுகள் தங்கிப் பணிபுரிய குடியுரிமை அனுமதி வழங்கப்படும். பின்னர் அதை வைத்து அவர்கள் நிரந்தரக் குடியுரிமைக்கு விண்ணப்பிக்கலாம்.

அதிபர் புஷ்ஷின் இந்தத் திட்டத்துக்கு அமெரிக்க செனட் அனுமதியளித்தால் 'கிறீன்காட்' எனப்படும் நிரந்தரக் குடியுரிமை அட்டை வெளிநாட்டுத் தொழிலாளர்களுக்கும் வழங்கப்படும்.

அமெரிக்காவில் தற்போது சட்டவிரோதமாகத் தங்கியுள்ள 80 லட்சம் ஊழியர்களுக்கு இது வரப்பிரசாதமாக அமையும் எனக் கூறப்படுகிறது. இந்தத் திட்டத்தின் கீழ் சட்டவிரோதத் தொழிலாளர்கள் குறிப்பிட்ட கட்டணத்தைச் செலுத்திவிட்டு தாம் தற்போது பணிபுரியும் நிறுவனங்களிலேயே பணியாற்றமுடியும்.

அமெரிக்க குடிமக்களுக்கு பாதிப்பு ஏற்படுத்தாத வகையில் - மனிதாபிமான அடிப்படையில் - குடியுரிமைச் சட்டத்தை மாற்றி அமைக்கவேண்டும் அவவாறு மாற்றி அமைக்கப்படும் குடியுரிமைச் சட்டம் அமெரிக்கர்களின் முன்னேற்றத்துக்குத் தடைக்கல்லாக இருக்கக்கூடாது என்று அதிபர் புஷ் தெரிவித்துள்ளார்.

## பிரான்ஸ் பத்திரிகையாளர் இருவருக்கு பாகிஸ்தானில் சிறை!

இஸ்லாமாபாத்,ஜன.11

விஸா தொடர்பான முறைகேடுகளுக்கான பிரான்ஸ் நாட்டு பத்திரிகையாளர்கள் இருவருக்கு பாகிஸ்தான் நீதிமன்றம் ஆறு மாத சிறைத் தண்டனை விதித்துள்ளது.

எல்.எக்ஸ்பிரஸ் சஞ்சிகையின் செய்தியாளர் மார்க் எப்ஸ்ரின் மற்றும் புகைப்படப்பிடிப்பாளர் ஜீன் பவுல் ஆகியோரே சிறையில் அடைக்கப்பட்டவர்கள் என்று பாகிஸ்தான் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இவர்கள் விஸா விதிமுறைகளுக்கு மாறாக தென்மேற்கு மாகாணத்தின் எல்லையோரக் கிராமங்களுக்கு அனுமதியின்றிச் சென்றிருந்தனர். இந்தக் கிராமங்கள் ஆப்கானிஸ்தான் எல்லையில் அமைந்துள்ளன. அவர்களது விஸா இஸ்லாமாபாத், லாகூர், கராச்சி ஆகிய நகரங்களுக்கு அவர்கள் செல்வதற்கு மட்டுமே அனுமதிக்கின்றது என்று பொலீஸார் தெரிவித்தனர். நீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்பை எதிர்த்து பத்திரிகையாளர்களின் சட்டத்தரணிகள் மேன்முறையீடு செய்யவுள்ளனர்.



சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட பத்திரிகையாளர்கள்

யாழ்ப்பாண



| | | | |
|---|---|---|---|
| செவ். | ரா. | | சனி |
| வெ. | இராசிச் சக்கரம் | | |
| | | | வி சந் |
| சூ.▲ புத | | கே. | |

# இந்த வார இராசி பலன்

## 11.01.2004 – 17.01.2004

### மாற்றம்:

மகம் நட்சத்திரம், சந்திரன் சிங்க ராசியில் நிற்கும். வெள்ளி, கும்ப ராசியில் மாறும்.

பூனைக்கு மணி கட்டுவது யார்? அரசியலில் தடுமாற்ற காலம். உலகம் அரசிடம் தர்மம் பேசி நியாயம் கேட்கும் இந்தியா நட்பு நாடிவரும். இந்தியாவில் அரசியல் சலசலப்பு. எதிர்க்கட்சிகள் திட்டமிட்டுச் செல்வாக்குத் தேட முற்படுவர். மத்திய கிழக்கில் அபகரிப்பு நிலை தோன்றும். ஈராக் நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியுறும். மேற்குநாடுகள் அதிகாரம் செலுததும். இந்து, அரேபியக்கடல் பிராந்திய நாடுகளில் காற்றழுத்தத்தால் சீதோஷ்ண நிலை மாறுபடும் எனக் கிரகநிலைகள் காட்டுகின்றன.

### மேடம்

இலட்சியங்கள் பணத்தின் முன் நிற்க முடியாமல் இருக்கின்றது. வாழ்க்கைச் செலவுகள்கூட சமாளிக்கமுடியாத வருமானச் சுருக்கம் உங்களை வேதனைப் படச் செய்யும். ஆயினும் பணவரவு புதிய முறையில் வரும். சகோதர உதவிகள் கொடுக்கும். மாமன் வழியினர்கள் நன்மை செய்வார்கள். புதிய நண்பர்கள் உதவி செய்து தருவார்கள். காயங்கள் வரும். ஆலயச் செலவுகள் அதிகரிக்கும். தொழில் சிறக்கவழி ஏற்படும்.

*அதிர்ஷ்டநாள்கள்:* திங்கள், புதன்.

### இடபம்

உயிர், உடம்பு, உணர்வுகளால் மனிதன் அசைந்து அனுபவப்படுவது இயற்கையின் விளையாட்டு. அப்பலனைக் கிரகங்கள் காட்டும். அதில் ஆயுள் காரனான சனீஸ்வரன் பொருள்ஸ்தானத்தில் உங்களுக்கு நிற்பதனால் பொருள் ரீதியில் வாக்குக்கலக்கம் ஏற்படும். குடும்பத்தில் சகோதரம், பிள்ளைகளின், கல்வி, திருமணத்திற்காக ஓடியாடித் திரிவீர்கள். தூரதேசச் செய்திகள் மகிழ்ச்சி தரும். பொருள் வரவையும் கொடுக்கலாம். சளித் தொல்லை, கால் உளைவு கொடுக்கும். வியாபாரிகளுக்கு மாற்றங்கள் நன்மையைத் தரும்.

*அதிர்ஷ்டநாள்:* புதன்.

### மிதுனம்

கலகம் பிறந்து நியாயம் பிறக்கும். தொழில்ஸ்தானத்தில் வீண்பழி கேட்பீர்கள். சூரியன், செவ்வாய் பார்வையால் குடும்பத்தில் எதிர்ப்பாலாருடன் மோதல், அவர்களுக்கு உடல் நிலைப்பாதிப்பு, வைத்தியச் செலவு அதிகரிக்கும். சளித்தொல்லை வரும். அடிக்கடி கருத்து மோதலால் யோசனை கொடுக்கும். தலைவருத்தம், கால் உளைவு கொடுக்கும். இனஜன உதவி, நண்பர்களின் உதவிகள் கிடைக்கும். அரச உதவி கிடைக்கும். அளவறிந்து எதிலும் செயற்படுவீர்கள். செய்தித்துறை, அசசுத்துறை, போக்குவரத்துத்துறையினர் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்:* புதன்

### கடகம்

தொழில்ஸ்தானத்தில் மேலதிகாரிகளின் ஒத்துழைப்பு இருக்கும். குரு - சந்திரன் சேர்ந்து இருப்பதால் பொருள் வரவு அதிகரிக்கும். மாதா வழியினருடன் முறுகல் நிலை ஏற்படும். வீட்டுச் செலவுகள், வாகனத்தின் விபத்து செலவு, கைகால் தாக்கம் என்பன கொடுக்கும். சளித் தொல்லை அடிக்கடி மனமாற்றம், தொழிலில் புதிய திட்டமிட்டு முன்னேற வாய்ப்பு ஏற்படும். விவசாயம், வியாபாரம் செய்ய வழி உண்டு. பிரயாண வாய்ப்பு நன்மை தரும்.

*அதிர்ஷ்டநாள்:* புதன்.

### சிங்கம்

ஊக்கமாகச் செயற்படுங்கள். பல சந்தர்ப்பங்கள் வந்து போகும். பெரியவர்கள் உதவி செய்வார்கள். நண்பர்கள் பணச் செலவைத் தருவார்கள். கடன்கேட்டு பயத்தை உண்டாக்குவார்கள். அடிக்கடி குழப்பம் அடைவீர்கள். வீடு, வாகனச் செலவுகள் அதிகரிக்கும். வசதிகளை செய்வீர்கள். தூரத்திலிருக்கும் உறவினர்கள் உதவி செய்வார்கள். தாரத்தின் வழியில் உதவி உண்டு. பேசசுவரும். காட்சி இருக்காது. சளி, கைகால் பிடிப்பு வரும். தூரத்துப பரயாணங்களை ஒத்திப் போடுங்கள் குரு, வியாபாரம் செய்பவர்கள் நன்மைகள் அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்:* புதன்.

### கன்னி

தொழில்ஸ்தானத்தில் மேலதிகாரிகள் கோவிப்பர். எதிர்ப்பாலார்கள் புறம் கூறுவர். அடிக்கடி குடும்பத்தில் கருத்து வேற்றுமை ஏற்படும். நீங்களும் கோவிப்பீர்கள். செவ்வாய்த் தாக்கம் ஆலயம் சென்று அர்ச்சனை செய்யுங்கள். அல்லது அடிகாயம் வரலாம். வீடுமனைச் சிறப்பு. பிரயாணங்களைத் தவிர்க்கவும். சளி, விறைப்பு, தலை வருத்தம் வந்து போகும். ஆசிரியர், சந்தைத் தொழில் செய்பவர்கள், பத்திரிகைத் தொழில் செய்பவர்கள் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்:* திங்கள், புதன்.

### துலாம்

எனக்கு எல்லாம் தெரியும் என அடிக்கடி சொல்லுவீர்கள். புதிய தட்டங்கள் நன்மை தரும். தூரத்திலிருந்து செய்திகள வரும். புதிய நன்மைகள், நண்பர்களின் உதவிகள் கிடைக்கும். கருத்துவேற்றுமை அதிகரிக்கும். பொருள் வரவு மந்தமாகும். கொடுத்தது வராது. காணி பூமியில் பிரச்சினை வந்து கோடு வரை செல்ல ஒரு யோசனை வரும். சட்டம், நீதிக்காக கோட்டில் போராடுவீர்கள். அயலவர் குறை கூறுவர். கால்நோ, நெஞ்சுவலி வர இடமுண்டு. வியாபாரிகள், சட்டத்த ரணிகள், காவல் துறையினர் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்:* திங்கள், புதன்.

### விருச்சிகம்

வாக்குத் தானத்தில் சூரியன் - புதன் சேர்ந்து இருந்து சனி பார்ப்பதனால் தொழில்ஸ்தானத்தில் மாற்றம் ஏற்படும். எதிர்ப்பாலார் நன்மை செய்வர். வருவாய் அதிகரித்தல், விசாரணை வரும். பிரயாணம் தடைப்படும். இடைக்கிடை போட்டிகளைச் சமாளிக்க வேண்டி வரலாம். கால் உளைவு, தொண்டைநோ, காயங்கள் வர இடம் உண்டு. வியாபாரிகள், இரும்பு, ஹோட்டல போக்குவரத்துத் துறையினர்கள் நன்மை அடைவார்கள். ஆலய தரிசனம் நன்மையை ஏற்படுத்தும்.

*அதிர்ஷ்டநாள்கள்:* திங்கள், புதன்.

### தனுசு

திட்டமிட்டது மந்தமாகும். தொழில்ஸதானத்தில் மேலதிகாரிகள் தொல்லை தருவர். அன்னியர் உதவுவர். இனஜனம், நண்பர்கள் தொல்லை தருவர். தேவையற்ற செயலால் உங்களுக்கு குடும்பத்தில் எதிர்புக் குரல் வலுக்கும். பிரயாணங்களைத் தவிர்க்கவும். பொருள் வரவு சுமாராக இருக்கும். வாகனச் செலவு அதிகரிக்கும். இந்த வாரம் புதிய திட்டங்களைச் செய்யாமல் இருப்பது நன்மை தரும்.

*அதிர்ஷ்டநாள்கள்:* திங்கள், புதன்.

### மகரம்

திட்டமிட்டுச் செயற்படுவீர்கள. குடும்பத்தினரின் முன்னேற்றத்திற்காக ஓடியாடித்திரிவீர்கள். பொருள் வரவு பாதிக்கப்படும். சகோதரர்களுடன் பொருள் ரீதியில் மனக்கசப்பு வரும். கால் உளைவு, நோ கொடுக்கும். பிரயாணங்கள் நன்மை தரும். கொடுத்தது வராது. புதியநட்பு மனஆறுதலைத்தரும். மருந்து, இரும்புத் துறையினர்கள் நன்மை அடைவார்கள். போக்குவரத்தில் இழப்பு வரும். ஆலயதரிசனம் நன்மை தரும்.

*அதிர்ஷ்டநாள்:* திங்கள்.

### கும்பம்

தொழில்ஸ்தானத்தில் பல திட்டம், புதிய வரவு, பொருள் சிறப்பு கொடுக்கும். மறைமுக எதிரிகள் உங்களைக் கண்டு பயந்து விலகுவர். பிறரின் கடும் சொற்களுக்கு பதிலடி கொடுப்பீர்கள். குடும்பப் பாசம் மேலிடும். பிள்ளைகளின் கல்விநிலை உயரும். நண்பர்கள் உதவி செய்து தருவார்கள். வாகனச்செலவு அதிகரிக்கும். கால்நோ, சலவியாதி, தலைப்பாரம், சளித்தொல்லை தரும். இடமாற்றங்களைத் தவிர்க்கப் பாருங்கள்.

*அதிர்ஷ்டநாள்:* திங்கள்.

### மீனம்

தொழில் ஸ்தானத்தில் எதிர்ப்புக்கள் வரும். ஆனால் சமாளித்து விடுவீர்கள். திட்டமிட்டுச் செயற்படுங்கள். போக்குவரத்தில் அவதானமாக இருங்கள். வீடு, மனை வாகனச் செலவுகள் அதிகரிக்கும். வாகதுக்கலகம் ஏற்படலாம். உங்களுக்கு வெற்றிவரும். குடும்பத்தில் பிள்ளைகளின் சிறப்பு மனநிறைவைத் தரும். பணவரவு அதிகரிக்கும். கால் உளைவு, சளித்தொல்லை, சலவருத்தங்கள் வரும். சாப்பாட்டில் நிதானமாக இருக்கவும். பிரயாணங்களைத் தவிர்க்கவும். வியாபாரிகளுக்கு நன்மைகள் அதிகரிக்கும்.

*அதிர்ஷ்டநாள்:* திங்கள்.

**மகாதேவா ஜோதிடம்**



நேற்று யாழ். முற்றவெளியில் இடம் பெற்ற தமிழாராய்ச்சி மாநாட்டு படுகொலைகளின் முப்பதாவது ஆண்டு நினைவு நிகழ்வுப் பொதுச் சுடரை மேஜர் ரஞ்சனின் தந்தையார் ஏற்றிவைப்பதையும் நினைவுத் தூபிக்கான மலர் மாலையினை ஈ.பி.ஆர்.எல்.எவ். சுரேஷ்அணியின் உறுப்பினர் ரமேஷ் அணிவிப்பதையும், இந்நிகழ்வில் கலந்துகொண்ட குருமுதல்வர் அருட்திரு ஜே.நீக்கிலஸ், அருட்திரு எஸ்.சகாயநாதன், அரசியல்துறை யாழ்.மாவட்ட துணைப்பொறுப்பாளர் செம்மணன், யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ் தேசிய எழுச்சிப் பேரவையின் செயலாளர் சூ.சொலமன்சிறில், ரெலோ முதல்வர் ஸ்ரீகாந்தா தேசிய எழுச்சிப் பேரவையின் கொள்கை முன்னெடுப்புச் செயலாளர் மா.க.ஈழவேந்தன் ஆகியோரையும், நிகழ்வில் கலந்து கொண்ட பொது மக்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

*( படங்கள்: அலுவலகப் படப்பிடிப்பாளர்)*



நான்காவது தமிழாராய்ச்சி மாநாட்டின்போது உயிரிழந்தவர்களின் நினைவாக புளொட், ஈ.பி.டி.பி., ஈ.பி.ஆர்.எல்.எவ். (வரதர் அணி) ஆகியன நேற்று மாலை முற்றவெளியில் உள்ள நினைவாலயத்தில் நடத்திய அஞ்சலி நிகழ்வின்போது எடுக்கப்பட்ட படங்கள்.

*(படங்கள்:அலுவலகப் படப்பிடிப்பாளர்)*

## ஆலயங்கள், பாடசாலைகளுக்கு மரக்கன்றுகள் வழங்க ஏற்பாடு

யாழ்ப்பாணம்,ஜன.11

யாழ்.குடாநாட்டில் உள்ள பாடசாலைகள் மற்றும் ஆலயங்களுக்கு வனவளத் திணைக்களத்தின் யாழ்.அலுவலகத்தினால் மரக்கன்றுகள் இலவசமாக வழங்கப்படவுள்ளன.

மேற்படி திணைக்களத்தின் யாழ்.அலுவலக அதிகாரி மு.பிரபாகரன் இதனைத் தெரிவித்தார்.

பாடசாலைகள் மற்றும் ஆலய நிர்வாகத்தினர் உரிய அத்தாட்சிக் கடிதத்துடன், யாழ்.செயலகத்துக்கு முன்பாகவுள்ள எமது வனவளத் திணைக்களத்தின் அலுவலகத்திற்குச் சமுகமளித்து மரக்கன்றுகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

குடாநாட்டில் உள்ள பாடசாலைகள் மற்றும் இந்து, கிறிஸ்தவ ஆலயங்கள் ஒவ்வொன்றுக்கும் தலா 25 மரக்கன்றுகள் வழங்கப்படும்.

மரவேம்பு, தேக்கு போன்ற மரங்களே இவ்வாறு வழங்கப்படவுள்ளன என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இத்திட்டத்தின் கீழ் வழங்குவதற்கு 6ஆயிரத்து 500 மரங்கள் யாழ். அலுவலகத்துக்குக் கிடைத்துள்ளன என்றும் அவா தெரிவித்தார். (எ-7)


உதய சூரியன் போல் நிச்சயமான தரச்சிறப்புக்கான SLS சின்னம்
SLS 1247
இலங்கையில் "ப்ளென்டட்" சீமெந்து அறிமுகம் செய்யப்படுவதை வரவேற்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். ஹினோடே போசோலானாவின் முன்னோடி அறிமுகத்தின் மூலம் டோக்கியோ சீமெந்து நிறுவனம் அதன் புதுமை படைக்கும் ஆற்றலை மீண்டும் வெளிப்படுத்தியுள்ளது. புதிய படைப்புத் தரச்சிறப்பிலும் சுற்றாடல் பாதுகாப்பு ரீதியிலும் இலங்கையின் உற்பத்தித் தராதர நியமங்களுக்கு அமைவானதாக உள்ளது.
தொழில் வாய்ப்புக்களை உருவாக்கி, இந்த நாட்டின் பொருளாதாரத்தை முன்னேற்றப் பாதையில் இட்டுச்செல்வதில் டோக்கியோ சீமெந்து நிறுவனம் தீவிரமாகப் பங்கெடுப்பதும் எனக்கு மகிழ்ச்சியைத் தருகின்றது.
இக் கம்பனி தனது சகல முயற்சிகளிலும் வெற்றியீட்டி, மென்மேலும் பலமடைய வேண்டுமென வாழ்த்துகின்றேன்.
கௌரவ அமைச்சர் ரவி கருணாநாயக்க வர்த்தக பாவனையாளர் அலுவல்கள் அமைச்சு
Q&E Advertising
HINODE POZZOLANA
PORTLAND POZZOLANA CEMENT
CONFORMS TO SRI LANKA STANDARD
SLS 1247
FUJI CEMENT CO. (LANKA) LTD.
Producers of MITSUI CEMENT
இலங்கையின் கட்டட நிர்மாணத் துறையில் புரட்சியை ஏற்படுத்தி, கொங்கிறீட் கலவைக்கான மகாசக்தியை வழங்கும் ஹினோடே போசோலானா சீமெந்து இலங்கைக் கட்டளைகள் பணியகம் வழங்கும் SLS தரச்சிறப்புச் சான்றிதழைப் பெற்றுள்ளது.
இந்த வெற்றிச் சாதனையை ஈட்டுவதற்கு உதவியாக இருந்த அனைத்துப் பாவனையாளர்களுக்கும், எங்கள் விசுவாசம் மிக்க விற்பனைப் பிரதிநிதிகளுக்கும் எமது மனமுவந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.
ஹினோடே போசோலானா
கொங்கிறீட் என்றால் ஹினோடே போசோலானா
டோக்கியோ சீமெந்துக் கூட்டு நிறுவனம்

யாழ்ப்பாணம்



# தமிழர் படுகொலைக்குக் காரணமான துரையப்பா பெயரில் நகரில் மைதானமா?

## உடன் பெயரை மாற்றக் கோருகின்றார் ஸ்ரீகாந்தா

யாழ்ப்பாணம்,ஜன.11

தமிழாராய்ச்சி மாநாட்டில் படுகொலைகள் இடம்பெறக் காரணமாயிருந்த முன்னாள் யாழ். நகர மேயர் அல்பிரட் துரையப்பாவின் பெயரில் அமைந்துள்ள துரையப்பா விளையாட்டரங்கின் பெயர் மாற்றியமைக்கப்படவேண்டும்.

இவ்வாறு நேற்று யாழ். நல்லூர் கோட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் ஏற்பாட்டில் நடைபெற்ற தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலைகளின் 30 ஆவது ஆண்டு நினைவுதின நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய ரெலோ முதல்வர் என்.ஸ்ரீகாந்தா தெரிவித்தார்.

நினைவுதின நிகழ்வுகள் நேற்றுக்காலை 9.30 மணிக்கு யாழ். முற்றவெளியில் உள்ள நினைவுத்தூபியடிவில் நடைபெற்றன. இதில் பொதுச்சுடரை மேஜர் ரஞ்சனின் தந்தையார் ஏற்றிவைத்தார். தொடர்ந்து நினைவுத்தூபிகளுக்கான சுடர்கள் ஏற்றிவைக்கப்பட்டன. இதனையடுத்து, நினைவுத்தூபிகளுக்கு மலரஞ்சலி செலுத்தப்பட்டது. இந்நிகழ்வில் நூற்றுக்குமேற்பட்டோர் கலந்துகொண்டனர்.

தொடர்ந்து மனித உரிமைகளுக்கும், அபிவிருத்திக்குமான தமிழ்பேசும் மக்களின் அமையத்தின் இணைப்பாளர் சீ.வி.கே. சிவஞானம் தலைமையில் நிகழ்வு நடைபெற்றது.

இதில் தொடர்நது உரைநிகழ்த்திய ஸ்ரீகாந்தா தமதுரையில்:-

தமிழாராய்ச்சி மாநாட்டைக் குழப்புவதற்கான திட்டங்களைத தீட்டிவிட்டு துரையப்பா தமிழ்நாட்டுக்குச் சுற்றுலா சென்றுவிட்டார். எனினும், அவரது இந்த நடவடிக்கைக்கான வெகுமதி 1975 ஆம் ஆண்டு ஜூலை மாதம் வழங்கப்பட்டது. இதற்காகத் தலைவா பிரபாகரனுக்கு நான் நன்றி கூறுகிறேன்.

1998 ஆம் ஆண்டு நல்லூரில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் நான் உரையாற்றினேன். அப்போது தமிழர்களின் படுகொலைகளுக்குக் காரணமாக இருந்த துரையப்பாவின் பெயரால் அமைந்துள்ள விளையாட்டரங்கின் பெயரை மாற்றவேண்டுமென நான் கோரியிருந்தேன். எனினும், அப்போது யாழ். மாநகரசபையில ஆட்சியில் இருந்த தமிழர் விடுதலைக்கூட்டணியால் எதுவும்செய்ய முடியாது போய்விட்டது.

மீண்டும் ஒரு உள்ளூராட்சித் தேர்தல் வந்து அதில் தெரிவு செய்யப்படும் மக்கள் பிரதிநிதிகள் இதைக் கட்டாயம் செய்ய வேண்டும். அது செய்யப்படுமென நான் நம்புகிறேன்.

இப்போது இங்கு ஒரு கலாசாரப் புரட்சியை ஏற்படுத்தவேண்டிய பொறுப்பு விடுதலைப் புலிகளுக்கு உண்டு. ஏனெனில், இங்கே கலாசாரச்சீரழிவுகள் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன. சில திட்டமிட்ட தீயசக்திகள் இதனைச் செய்துகொண்டிருக்கின்றன. இதைத் தடுத்து நிறுத்தவேண்டியநிலை இப்போது ஏற்பட்டுள்ளது - என்றார்.

யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ் தமதுரையில்:-

இலங்கை சுதந்திரத்துக்கு முன்னரோ அல்லது பின்னரோ தமிழர்கள் தமிழர்களாகவும், சிங்களவர் சிங்களவர்களாகவும், முஸ்லிம்கள் முஸ்லிம்களாகவும், வாழ்ந்தனரே தவிர இலங்கையா என்றொரு இனம் வாழ்ந்ததாகத் தெரியவில்லை. இதற்குக் காரணம் பெரும்பான்மை, சிறுபான்மையை அங்கீகரிக்காமை தான் காரணம். தமிழர்கள் எந்த வடிவத்தில் போராடினாலும், சிங்களவர் அதனை ஒடுக்கவே முயற்சிக்கின்றார்கள்.

யாழ்ப்பாணம் என்றால் உலகம் முழுவதுமே தெரிந்தஇடம். இதனால், இதனை அழித்துவிட பெரும்பான்மை இனத்தவர்கள் அன்று பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டனர். இதனால், எமது தமிழ் இளைஞர்கள் பல வடிவங்களில் போராடவேண்டிய நிலை ஏற்பட்டது. முன்னர் தமிழர்களுக்கு அரசியல் தெரியாது. போராடத்தான் தெரியும் என்றார்கள். ஆனால், இப்போது அரசியலிலும் நாம் சமமாகிவிட்டோம். இதனால், ஸ்ரீலங்கா அரசின் தலைமைகள் தற்போது திணறுகின்றன - என்றார்.

யாழ். மாவட்ட அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் செம்மணன் தமதுரையில்:-

எமது ஆயுதப் போராட்டத்திற்கு வலுச்சேர்க்கும் நிகழ்வாக இந்தத் தமிழாராய்ச்சி மாநாடு நடைபெற்றது. தமிழ் இளைஞர்கள் ஆயுதப் போராட்டத்தில் இணைவதற்கும் இந்த மாநாட்டில் இடம்பெற்ற படுகொலைகள் வழிவகுத்தன. நாம் பல விட்டுக்கொடுப்புக்களை செய்த பின்னும் எமது உரிமைகளை வழங்குவதற்கும் சிங்கள தலைமைகள் மறுத்து வருகின்றன. இது எமக்குப் புதிய விடயமல்ல. எமது உரிமைகளை எவரும் தரப்போவதில்லை என்பது எமக்குப் புரிந்துவிட்டது. கடந்தகால வரலாற்றில் நாம் இதை நன்குணர்ந்துள்ளோம் - என்றார். (எ-8-30)

---

# உதயன்

## இலவு காத்த கிளியின் நிலையில் மக்கள்

நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடி மோசமான பொருளாதாரச் சிக்கலாக வெடிக்கும் ஆபத்தை உருவாக்கியிருக்கின்றது என்று எதிர்வு கூறல் - அபாய எச்சரிக்கை - வெளிப்படுத்தப்பட்டிருக் கிறது.

அரசும் - புலிகளும் யுத்தநிறுத்தம் செய்து, சமாதான வழிக்குத் திரும்புவதற்கு இணக்கம் தெரிவித்து, அமைதியைக் கடைப்பிடிக்கத் தொடங்கி இரண்டு ஆண்டுகளாகி விட்டன.

இந்த அமைதிநிலையின் நேரடிப்பயனை தென்னிலங்கை மக்கள் ஓரளவு அனுபவித்தாலும் வடக்கு - கிழக்கு - தமிழர் தாயகத்தில் - வசிக்கும் தமிழர்களுக்கு அவை கிட்டவில்லை. யுத்தத்தின் நேரடி இறுக்கத்திலிருந்து விடுபடும் வாய்ப்பு அவர்களுக்குக் கிடைத்த போதிலும் சமாதானத்தின் - அமைதியின் - நேரடிநன்மை அவர்களுக்குக் கிட்டவில்லை.

ஆனால், அமைதி நிலைமையின் பொருளாதாரப் பயனைப்பெறும் வாய்ப்போ தென்னிலங்கை மக்கள், வடக்கு - கிழக்குத் தமிழர்கள் ஆகிய இருதரப்பினருக்குமே கிட்டவில்லை. அதை எதிர்பார்த்து அவர்கள் கடந்த இரண்டு வருடங்களாகக் காத்திருக்க வேண்டியிருந்தது.

ஏற்கனவே, கடந்த ஒரு தசாப்தகாலமாக போர் வெறிக் கொள்கையைக் கடைப்பிடித்து வந்த சந்திரிகாவின அரசுகள், போர்முனைப்போடு அளவுக்கு வீஞ்சும் விதத்தில் - வாங்கிக்குவித்த ஆயுதங்களுக்கான வெளிநாட்டுக் கடனை மீளச்செலுத்த வேண்டியிருப்பதாலும் -

ஒருபுறம் யுத்தநிறுத்தம், சமாதான முயற்சிகள், அமைதி நடவடிக்கைகள் என்று ஈடுபட்டுக்கொண்டு மறுபுறத்தில் போராயுதங்களை வாங்கிக் குவிக்கும் விதத்திலான தற்போதைய அரசின் இரட்டை வேடக் கொள்கைப் போக்கினாலும் -

அமைதி நிலையின் பொருளாதாரப் பயனை நாட்டு மக்கள் அடையமுடியாது இதுவரை காத்திருந்தனர்.

மழை நின்றும் தூவானம் விடாதது போல, யுத்தம் நிறுத்தப்பட்டும் யுத்தத்தின் பெயரிலான செலவுகள் தொடர்ந்து கொண்டிருந்ததால் பொருளாதாரப் பயனை - பலனை - நாடும் மக்களும் எட்டமுடியாதிருந்தது.

இரண்டு வருடங்கள் கழித்து இப்போதாவது நிலைமை சீரடையும் வாய்ப்புக்கிட்டும் என்ற நம்பிக்கை மக்கள் மனதில் இருந்தது.

ஆனால், 'கைக்கு எட்டியது வாய்க்கு எட்டாதது' போல 'இலவு காத்த கிளி' போல எல்லாம் புஸ்வாணமாகிப போகும் சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவினால் ஏற்படுத்தப்பட்ட அரசியல், அரசமைப்பு நெருக்கடி காரணமாக அமைதிமுயற்சிகள் ஸ்தம்பித்துப் போய் இருக்கின்றன. அதுமட்டுமல்ல. சமாதான நடவடிக்கைகள் தடைப்பட்டு எதிர்காலம் சந்தேகத்துக்குரியதாகியுள்ள காரணத்தால் வெளிநாட்டு உதவிகள் கிடைப்பதும் கேள்விக் குறியாகி விட்டது.

இதனால் பெருமளவிலான சர்வதேச நிதி உதவிகளை எதிர்பார்த்து, அவற்றின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட இவ்வாண்டுக்கான வரவு - செலவுத் திட்டமும் 'கட்டையில் ஏறும் நிலை' ஏற்பட்டிருப்பதாக அபாயச்சங்கு ஒலிக்கப்பட்டிருக்கின்றது.

வரவு - செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்டுள்ள சம்பள உயர்வு, ஓய்வூதிய அதிகரிப்பு, வரிச்சலுகைகள் போன்றவற்றை வழங்கமுடியுமா என்ற கேள்வியும் எழுந்துள்ளன.

ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையிலான அதிகாரஇழுபறியால் சமாதான முயற்சிகள் அந்தரத்தில் தொங்கி நிற்கின்றன. அனுசரணைப் பணிக்கு வந்த நோர்வேயும் மூடை, முடிச்சுகளைக் கட்டிக்கொண்டு புறப்பட்டுவிட்டது. இதனால் உறுதியளிக்கப்பட்ட வெளிநாட்டு உதவிகள் 'கோவிந்தா' ஆகும் சூழ்நிலை.

டோக்கியோவில் நடைபெற்ற உதவியளிக்கும் நாடுகளின் மாநாட்டில் யாரும் எதிர்பாராத விதத்தில் 45 ஆயிரம் கோடி ரூபா நிதி உதவிக்கு உறுதியளிக்கப்பட்டது. ஆனால், சமாதான முயற்சிகளின் முன்னேற்றத்தின் அடிப்படையிலேயே இந்த உதவிகள் வழங்கப்படும் என்று நிபந்தனையும் விதிக்கப்பட்டிருந்தது.

நிபந்தனையில் கூறப்பட்ட விடயம் நிறைவேற்றப்படாமல் தடைப்பட்டிருப்பதால் நிதி உதவிகளும் தடைப்படும் ஆபத்து ஏற்பட்டுள்ளது. நிதி உதவிகள் தடைப்பட்டால் அதன் அடிப்படையில் - அந்த நிதி உதவியை பெரும் வரவாகக்கொண்டு - தயாரிக்கப்பட்ட வரவு, செலவுத் திட்டமும் குழம்பிப்போகும் நெருக்கடி நிலைமை ஏற்பட்டிருக்கின்றது.

இவ்வளவு குழப்பத்துக்கும் - மக்கள் ஆவலோடு எதிர்பார்த்த விடயங்கள் நிறைவேறாமல் பொய்த்து போன நிலைமை ஏற்பட்டதற்கு - இந்த நாட்டின் தலைவி விவேகம் இன்றி எடுத்த நடவடிக்கைகளே காரணம் என்பது தான் மனவருத்தத்துக்குரியது.

அவர் தனது போக்கை மாற்றும்வரை - அவரது ஆட்சிக்காலத்தில் இந்த நாட்டுக்கு விமோசனம் இல்லை என்பது மட்டும் உறுதி.

---

# கடும் மழை, பலத்த காற்றினால் சேதமடைந்த வீடுகளுக்கு நஷ்டஈடு

## சமூக நலன்புரி அமைச்சு வழங்கியது

குடாநாட்டில் கடும் மழையினாலும், பலத்த காற்றினாலும் வீடுகள் சேதமடைந்த 506 குடும்பங்களுக்கு அண்மையில் நஷ்டஈடுகள் வழங்கப்பட்டன.

இதற்கான நிதியினை சமூக நலன்புரி அமைச்சு வழங்கியிருநதது. இதனை அடுத்து யாழ். செயலகத்தினால் நஷ்டஈடுகள் வழங்கப்பட்டுள்ளன.

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 34 குடும்பங்களுக்கும், பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் 20 குடும்பங்களுக்கும், யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவில் 13 குடும்பங்களுக்கும்-

ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பிரிவில் 119 குடும்பங்களுக்கும், காரைநகர் உதவி அரச அதிபர் பிரிவில் 40 குடும்பங்களுக்கும், சங்கானை பிரதேசசெயலர் பிரிவில் 67 குடும்பங்களுக்கும் -

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 78 குடும்பங்களுக்கும், நெடுந்தீவு உதவி அரச அதிபர் பிரிவில் 19 குடும்பங்களுக்கும், உடுவில் பிரதேச செயலர் பிரிவில் 12 குடும்பங்களுக்கும்-

தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் 53 குடும்பங்களுக்கும், சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவில் 08 குடும்பங்களுக்கும், நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் 04 குடும்பங்களுக்கும், கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் 39 குடும்பங்களுக்கும் நஷ்டஈடுகள் வழங்கப்பட்டுள்ளன. (எ-10-76)

---

# சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றினால் கடந்த வருடம் ரூபா 26 லட்சம் அறவீடு

தென்மராட்சி,ஜன.11

சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றில் கடந்த வருடம் மட்டும் 26 லட்சத்து மூவாயிரத்து 41 ரூபா அறவிடப்பட்டுள்ளது.

கடந்த ஜனவரி தொடக்கம் டிசெம்பர் வரையான காலப் பகுதியில் நீதிமன்றில் நடைபெற்ற வழக்குகள் மூலம் இத் தொகை அறவிடப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டது.

தண்டப்பணம், பிணை வைப்புகள், நானாவித வைப்புகள், பிரதிபண்ணல் கட்டணம் ஆகியவை மூலம் இத்தொகை அறவிடப்பட்டதாகவும் -

இத்தொகையிலிருந்து சாவகச்சேரி பிரதேசசபை, சாவகச்சேரி நகரசபை ஆகியவற்றுக்கு ஒருலட்சத்து 76 ஆயிரத்து 858 ரூபா வழங்கப்பட்டுள்ளதாகவும் - தெரிவிக்கப்பட்டது. (எ-117)

---

### நாளை

மார்கழி 28
திங்கட்கிழமை
(12.01.2004)
திதி:பஞ்சமி
முன்னிரவு 11.09வரை.
நட்சத்திரம்:பூரம்
முன்னிரவு 10.08 வரை
சுபநேரம்:12.33-2.03
ராகுகாலம்:08.03-09.33
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

வெற்றிபெற வேண்டும் என்பது என் நோக்கமல்ல! ஆனால நன்றி விசுவாசமாய் இருக்க வேண்டியது என் கடமை.

---

# சமூகசேவை அலுவலர்கள் ஜனவரி முதல் இடமாற்றம்

கொக்குவில்,ஜன.11

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ள பிரதேச செயலகங்கள் மற்றும் உதவி அரச அதிபர் பணிமனைகளில் கடமையாற்றும் சமூகசேவை அலுவலர்கள் வருடாந்த இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இந்த இடமாற்றங்கள் கடந்த முதலாம்திகதி முதல் நடைமுறைக்கு வந்துள்ளதாக மாகாண சமூகசேவைகள் திணைக்களப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

இடமாற்றம் செய்யப்பட்ட சமூகசேவை அலுவலர்களின் பெயர்விவரம் வருமாறு:-

ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்தைச் சேர்ந்த ரி.கிருபாகரன் மருதங்கேணி பிரதேச செயலகத்திற்கும், மருதங்கேணி பிரதேச செயலகத்தைச் சேர்ந்த என்.திருலிங்கநாதன் திருகோணமலை பிரதேச செயலகத்திற்கும், திருகோணமலை பிரதேச செயலகத்தைச் சேர்ந்த என்.இராஜமனோகரன் கந்தளாய் பிரதேச செயலகத்திற்கும் -

மூதூர் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த கே.சிதம்பரநாதன் பூநகரி பிரதேச செயலகத்திற்கும், தம்பலகாமம் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த எஸ்.வரதபாஸ்கரன் நெடுந்தீவு பிரதேசசெயலகத்திற்கும், பளைப்பிரதேச செயலகத்தைச் சேர்ந்த அலுவலர் வி.சண்முகநாதன் ஒட்டிசுட்டான் பிரதேச செயலகத்திற்கும்-

செட்டிகுளம் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த வி.அருந்தவராஜா சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்துக்கும், நெடுங்கேணி பிரதேச செயலகத்தைச் சேர்ந்த என்.புரட்சிதாசன் செட்டிகுளம் பிரதேச செயலகத்திற்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

எனினும், நல்லூர் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த கே.சண்முகலிங்கம் ஒரு வருடத்திற்கு ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்தில் பதில் கடமையாற்றுவார் என்றும் - சமூகசேவைத் திணைக்களப்பணிப்பாளர் அறிவித்துள்ளார். (எ-76)

---

# சாவகச்சேரி நவீன சந்தை முன்பாக சைக்கிள்களை நிறுத்தவேண்டாம்!

## பொலீஸ் நிலைய அதிகாரி அறிவுறுத்து

தென்மராட்சி,ஜன.11

ஏ-9 வீதியில் வாகனங்களின் போக்குவரத்து அதிகரித்துள்ளதால் சாவகச்சேரி நவீனசந்தை முன்பாக வீதியோரமாகவும், விறாந்தையிலும் சைக்கிள்களை நிறுத்தவேண்டாமென சாவகச்சேரிப் பொலீஸ்நிலைய குற்றத்தடுப்புப் பிரிவு அறிவுறுத்தல் விடுத்துள்ளது. சந்தையின் உட்புறம் இரண்டு துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளதாகவும் -

இந்தப் பாதுகாப்பு நிலையங்களில மோட்டார் சைக்கிள்கள், துவிச்சக்கர வண்டிகளை நிறுத்தி போக்குவரத்து நெருக்கடியினை தவிர்க்க பொதுமக்கள் ஒத்துழைக்கவேண்டும் என்றும் - பொலீஸார் கேட்டுள்ளனர்.

இந்த அறிவுறுத்தலை மீறி அப்பகுதியில் விடப்படும் சைக்கிள்கள் பொலீஸ் நிலையத்திற்கு எடுத்துச்செல்லப்படுமென குற்றத்தடுப்புப்பிரிவு பொறுப்பதிகாரி அறிவித்துள்ளார்.(எ-117)

---

# ஆங்கிலம் கற்பித்தல் குறித்து குறுகிய காலப் பயிற்சிகள்

## வடமராட்சி வலயத்தில் ஏற்பாடு

வடமராட்சி கிழக்கு,ஜன.11

ஆரம்பப்பிரிவு வகுப்புகளில் ஆங்கிலப்பாடம் கற்பிக்க விரும்புகின்ற ஆசிரியர்களுக்கு குறுகியகாலப் பயிற்சியினை வழங்குவதற்கு வடமராட்சி வலயக்கல்வி அலுவலகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

ஆங்கில ஆசிரியர்களின் பற்றாக்குறையினை உடனடியாக நிவர்த்தி செய்ய முடியாதுள்ளமையினால் ஆங்கில ஆசிரியர் நியமனம் பெறாத ஆசிரியர்களுக்கு இந்தப் பயிற்சி வழங்கப்படவுள்ளது.

இவ்வாறு பயிற்சி வழங்கப்படும் ஆசிரியர்கள் தரம் 1 தொடக்கம் தரம் 5 வரையிலான ஆரம்ப வகுப்புகளில் கற்பித்தல் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படுவர் என்று தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையில் - மேற்படி பயிற்சிக்கென ஒவ்வொரு பாடசாலைகளிலிருந்தும் தலா இரு ஆசிரியர்களை சிபார்சு செய்யுமாறு வடமராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் தி.செல்வரத்தினம் பாடசாலை அதிபர்களைக் கேட்டுள்ளார். (எ-182)

# மலையக ஆசிரியர் வெற்றிடங்களுக்கு இம்மாத இறுதியில் விண்ணப்பங்கள்

## போட்டிப் பரீட்சை மூலமே தெரிவுகள்

கொழும்பு,ஜன.11

மலையக தமிழ்ப் பாடசாலைகளில் ஏற்பட்டுள்ள ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கான விண்ணப்பங்கள் இம்மாதக் கடைசி வாரத்தில் கோரப்படும். போட்டிப்பரீட்சையின் மூலமே தேர்வுகள் இடம்பெறும்.

முதல்கட்டமாக ஊவா, சப்பிரகமுவ மற்றும் மத்திய மாகாணம் ஆகியவற்றிலேயே விண்ணப்பங்கள் கோரப்படவுள்ளன.

இப்பிரதேசங்களில் உள்ள தமிழ் பாடசாலைகளில் காணப்படும் வெற்றிடங்கள், தேவையான ஆசிரியர்கள் (பாடவாரியாக) ஆகிய விவரங்கள் கல்வி அமைச்சின் பெருந்தோட்டப் பாடசாலைகளுக்குப் பொறுப்பான பணிப்பாளரினால் திரட்டப்பட்டன. இந்த விவரங்களின் அடிப்படையில் ஜி.சீ.ஈ. உயர்தரத்தில் சித்தியடைந்தவர்கள் ஆசிரியர் சேவைக்குச் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர்.

விண்ணப்பங்கள் மாவட்ட ரீதியாகக் கோரப்படவுள்ளதால், பின்தங்கிய பிரதேசங்களில் இருந்தும் பலர் தெரிவுசெய்யப்படும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

தெரிவுகள் போட்டிப் பரீட்சையின் மூலம் நடைபெறவுள்ளதால் திறமையானவர்களைத் தெரிவு செய்ய முடியும் என்று கல்வி அமைச்சின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் கூறினார்.

நீங்கள்,
நீரிழிவு நோயினால் அவதிப்படுகிறீர்களா? இதோ உடன் நிவாரணி

"மதுமேகரணி"
"MADHUMEAHAHARANEE"

இந்த மருந்தின் பலாபலனை குறுகிய காலத்தில அறிந்துகொள்ளலாம்.
உங்கள் அண்மையில் உள்ள சித்தஆயுர்வேத டாக்டரிடம் ஆலோசித்து பாவிக்கவும்.
இது ஓர் அரச ஆயுர்வேத மருந்துக் கூட்டுத்தாபனத் தயாரிப்பு
யாழ்.குடாநாட்டின் அனைத்து பார்மஸிகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

வடமாகாண ஏகவிநியோகஸ்தர்கள
சிவா நறுமணப்பூங்கா
288. ஆஸ்பத்திரி வீதி. யாழ்ப்பாணம.

SRI LANKA AYURVEDIC-CORPORATION
PO BOX 20 NAWINNA
MAHARAGAMA.

(32387) குறிப்பு: சத்திரச்சந்திக்கு அருகில் (21-19-26)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



பிறப்பு 08 - 04 - 1912

இறப்பு 12 - 12 - 2003

திருமதி
**சின்னம்மா விநாசித்தம்பி**

ஆகிவிட்டதோ முப்பத்தொரு நாள் அம்மா எமைப்பிரிந்து!
ஆயிரம் ஆண்டுகள் ஆனாலும் மாறுமோ எம் துயர்?
ஆறுமா எம் காயங்கள்?

இன்று (11.01.2004) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் இடம்பெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

வி.அரசரத்தினம் (மகன்).

மீசாலை கிழக்கு,
மீசாலை.

(27006)(18-21-19-26)

## முதலாம் ஆண்டு நினைவலைகள்



மலர்வு 10 - 10 - 1935

உதிர்வு 23 - 12 - 2002

திருமதி
**தம்பிப்பிள்ளை இராசமணி**

திதி: 2004.01.11

எம் அதிபர் வரதராஜா முத்தின் விளைநிலமே
முத்தில் முகம் பார்த்தால் முன்னாடி உம்முகம்தான்
வற்றும் கடலும் உண்டு வற்றா வளநதிநீர்
நித்தம் நினைக்கின்றோம் நீங்கா நினைவோடு.....

The Express Institute
Irupalai, kopay.

அன்புடன் நினைவு கூரும்:
ஆசிரியர்கள்,அலுவலகஆளணியினர்,
மாணவர்கள்.

(27000)

## அதிபர்கள் கூட்டம்

கொழும்பு,ஜன.11

நாட்டில் உள்ள அரச அதிபர்களுக்கான கூட்டம் ஒன்று நாளை மறுதினம செவ்வாய்க்கிழமை கண்டியில் நடத்தப்படவிருக்கின்றது.

உள்நாட்டலுவல்கள் அமைச்சின ஏற்பாட்டில் இடம்பெறும் இந்தக் கூட்டத்தில் புதிய சட்டங்கள் குறித்து விளக்கமளிக்கப்படும். (ம-3)

## கலாசார விழா

யாழ்ப்பாணம்,ஜன.11

வலிகாமம் வடக்கு கலாசாரப் பேரவை வருடாந்த கலைவிழாவினை எதிர்வரும் 17ஆம் திகதி பிற்பகல் 2.30 மணிக்கு அளவெட்டி சிறிசுப்பிரமணிய சுவாமிகள் ஞாபகார்த்த கலாசார நிலையத்தில் நடத்தவுள்ளது.

அளவெட்டி, இளவாலை, துன்னாலை ஆகிய கிராமங்களை ஒன்றிணைத்து நிகழ்வை நடாத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இக்கலாசார விழாவில் மூன்று கிராமங்களிலும் உள்ள ஒன்பது கலைஞர்களை கௌரவிப்பதற்கான ஏற்பாட்டினை கலாசார நிலையம் மேற்கொண்டுள்ளது. (ம-6)

## மழைவேண்டி விசேட ஆராதனை

தெல்லிப்பழை,ஜன.11

சுன்னாகம், கந்தரோடை மேற்கு ஞானவைரவர் சனசமூக நிலையத்தினர் கடந்த-வியாழக்கிழமை இரவு மழைவேண்டி விசேட ஆராதனை நடத்தியதுடன் கொடும்பாவியும் எரித்தனர்.

இம்முறை பருவமழை பெய்யாமையால் கந்தரோடைப் பகுதி விவசாயிகள் எதிர்நோக்கியுள்ள அபாயத்திலிருந்து விடுபடும் முகமாக நடத்தப்பட்ட இவ்விசேட ஆராதனை மாலை 7 மணிமுதல் அதிகாலை ஒரு மணிவரை நடைபெற்றது. இதில் நூற்றுக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர். (ம-8-150)

## சீருடைக்கான பதிவை மேற்கொள்ளப் பணிப்பு

இவ்வருடம் பாடசாலைகளில் சேர்க்கப்பட்ட தரம் 1 மாணவர்களுக்கான சீருடைத்துணிகளைப் பெறுவதற்கு பெற்றோர் இம்மாதம் 16ஆம் திகதிக்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்ளுமாறு நல்லூர் உதவிப் பிரதேச செயலர் கேட்டுள்ளார்.

தரம் 1 மாணவர்கள் கற்கும் பாடசாலை அதிபரிடம் சீருடைத் துணி விண்ணப்பத்தில் கையொப்பத்தைப் பெற்று அதை தமது பகுதிக் கிராம சேவையாளரிடம் குறிப்பிட்ட திகதிக்கு முன்னர் ஒப்படைக்கு மாறும் பிரதேச செயலர் கேட்டுள்ளார்.(ம-86)

## மாட்சியுரை நிகழ்வு

வலிகாமம் தெற்கு,ஜன.11

மயிலணி கந்தசுவாமி கோவில் பிரதமகுரு அமரர் ச.வரதராஜேஸ்வரக்குருக்களின் "மாட்சியுரை" நிகழ்வு எதிர்வரும் 16 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு கந்தசுவாமி கோவில் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஆலய அறங்காவலர் சபையினரால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள இந்நிகழ்வுக்கு திருமதி மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலம் தலைமை வகிப்பார்.

சர்வதேச இந்துமத குருபீடாதிபதி சிவஸ்ரீ.ஐ.மகேஸ்வர சிவாச்சாரியார், தெல்லிப்பழை துர்க்கையம்மன் தேவஸ்தான பிரதமகுரு சிவஸ்ரீ. இ.சுந்தரேஸ்வரக்குருக்கள், இணுவில் தர்மசாஸ்தா குருகுல அதிபர் சிவஸ்ரீ.தா. மகாதேவகுருக்கள், மாவை ஆதீனம் சிவஸ்ரீ. து.ஷண்முகநாதக்குருக்கள், சுன்னாகம் கதிரமலை சிவன் தேவஸ்தான பிரதம குரு நா.சோமாஸ்கந்தக்குருக்கள் ஆகியோர் அமரர் வரதராஜேஸ்வரக்குருக்கள் பற்றிய மாட்சியுரைகளை வழங்குவர். (எ-152)

SKY COMPUTER SYSTEMS

MS Office — Visual Basic
Auto Cad — Photo Shop
Hard Ware — Page maker
Quick Books — Corel Draw
Accounting — Advanced Excel

Note:
1.மாணவர்கள் ஒவ்வொருவரும தனித்தனியான முறையில் கவனிக்கப்படுவர்.
2.உங்களுக்கு வசதியான நேரத்தைத் தேர்நதெடுத்துக் கொள்ளலாம்.
*சான்றிதழ்கள் யாவும் கொழும்பு தலைமைக் காரியாலயத்திலிருந்து பெற்றுத்தரப்படும். ரூ.15.000/= இலிருந்து கணனிகளைப் பெற்றுக்கொள்ளலாம்.
மொனிட்டர் 15" - 6000/=
* ஆறுமாதகால உத்தரவாதத்துடன் கொள்வனவு செய்பவர்களுக்கு 15 நாள் இலவசப் பயிற்சி.

Petm IV 1800MHZ
Computer with Multi media
(Intel or Motherboard) 56,500/=

SKY COMPUTER SYSTEMS
109, Kandy Road, Chundikuli, Jaffna
(கச்சேரிக்கு அருகில்). ☎ 0777283654.
Today You Learn
Tomorrow you lead.

நீங்கள் பீனிசம், பீனிச வாய்வு, இளநரை, தலையிடி, தலைப்பாரம், மூக்கினால இரத்தம் வடிதல், காதடைப்பு, கண்மங்கல் என்பவற்றால் அவதிப்படுகிறீர்களா?

இதோ பாவியுங்கள்!

கண்ணுக்குக் குளிர்ச்சியும் முகத்திற்கு அழகும் உண்டாக்கி கூந்தலை நீளமாகவும், கறுப்பாகவும், அழகாகவும் வளரச் செய்யும் சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட

சித்தாரா பொன்னாங்காணி தைலம்

யாழ்.குடாநாட்டின் அனைத்து பார்மஸிகளிலும், கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

Manufactured By:
SITHARA PRODUCTS
Puttalam Road,
Chilaw.
(Reg.No.:-6382)AR/PR/No.-228

யாழ்.மாவட்ட
ஏக விநியோகஸ்தர்:-
சிவா நறுமணப் பூங்கா
இல. 288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பேசி இல.-021-222-2567
(குறிப்பு:- சத்திரச்சந்திக்கு அண்மையில்) (சி-32386)

## 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**வல்லிபுரம் இராசமணி**
(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

தோற்றம் 27-03-1924

மறைவு 13-01-1993

திதி: 11-01-2004

ஆண்டுகள் பல சென்றாலும்
ஆறிடுமோ எம் நெஞ்சம்!
ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

126/4, கோயில் வீதி,
யாழ்ப்பாணம்.

- குடும்பத்தினர்.

(27007) (14)

## ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம் 25 - 03 - 1941



மறைவு 23 - 12 - 2002

**திருமதி பரமேஸ்வரி அருளானந்தம்**

திதி: 11.01.2004

நேசமுடன் கரம்பிடித்த
நினதன்புக் கணவனையும்
பாசமுடன் வளர்த்த மகன்
மருமகள் பேரர்களையும்
ஆசையுடன் அருகிருந்த
உடன் பிறப்பு அனைவரையும்
சோகத்தில் ஆழ்த்திச் சென்று
ஓராண்டு ஆகியதே....

எஸ். அருளானந்தம (கணவர்),
பிடாரி கோயிலடி,
ஆனைக்கோட்டை. (21-19-26)

கொட்லீன் (மகன்).
செல்வவாமினி (மருமகள்).
திசான், நிக்கேஸ் - பேரப்பிள்ளைகள்
(லண்டன்).

(26955)

## 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

வீரப்பிறப்பு 25 - 01 - 1972



வீரச்சாவு 11 - 01 - 2000

**போர்க்குயில் மேஜர் மாதவன்**
**கந்தையா மனோரஞ்சன்**
(நாவற்காடு - வரணி)

உன் உறவுகளை விட்டு
தாயகத்தை மீட்டிட தளராத
உறுதியுடன் போரிட்ட - மாதவனே!
உன் ஆசைமுகம் கண்டு
நான்கு ஆண்டுகள் ஆகியும் - என்றும்
மறவாத உன் நினைவோடு!

இந்நாளில் வீரச்சாவடைந்த சகல மாவீரர்களையும் நினைவுகூருகின்றோம்.

வரணி. (26907) (14-21-19-26) - குடும்பத்தினர்.

# எண்கணித ஜோதிடம் - 2004

## எண் - 9

9,18,27 திகதிகளில் பிறந்த நீங்கள் நல்லவர்கள், ஆனால் சின்னச் சின்ன விஷயத்திற்குப் போய் கோபப் படுவீர்கள். கோபமும், குழப்பமும் முன்னேற்றத்திற்கு தடைக்கல்லாகும் என்பதை நீங்கள் உணர வேண்டும். சாந்தமும், பக்தியும் வளர்ச்சிக்கு ஊட்டச்சத்து என்பதை நீங்கள் புரிந்துகொள்ளவேண்டும். எது எப்படிப்போனாலும் நீங்கள் காரியத்தில் கண்ணாக இருந்து முன்னேறி விடுவீர்கள். உழைப்பு மனிதர்களை உதாசீனப்படுத்துவதில்லை. ஆனால், மனிதர்கள் தான் உழைப்பை மதிப்பதில்லை. இதைக்கொஞ்சம் சிந்தித்துப் பாருங்கள்.

சில நேரங்களில் உண்மைக்குப் புறம்பான காரியங்களில் இறங்கிச் சிக்கிக் கொண்டு அதிலிருந்து போராடி வெளிவருவீர்கள். ஒருவரைப் பிடிக்காவிட்டால் ஒதுங்கி விடுவீர்கள். எப்படிப்பட்ட பெரியாள்களையும் நல்ல கருத்துக்களைச் சொல்லி மடக்கிவிடுவீர்கள்.

வேலைகளை உடனே முடிக்க முடியவில்லையே என்ற ஏக்கம் இருக்கும். பணம் இருந்தாலும் இல்லாவிட்டாலும் உங்கள் தெம்பு குறையாது. சில நேரங்களில் முரட்டுத் தனமாகக் காணப்படுவீர். மற்ற சில நேரங்களில் குழந்தை போன்ற மனதுடையவர்களாக இருப்பீர். சிக்கனமும், தாராளமும் உங்கள் வாழ்க்கையில் கலந்து காணப்படும். வறுமையும், செழுமையும் மனித வாழ்க்கையில் இரு துருவங்கள் என்று கூறுவீர்கள். உங்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளைச் சமாளிப்பதற்காக போராடிக் கொண்டே இருப்பீர்கள். உங்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளைச் சமாளிப்பதற்காக போராடிக் கொண்டே இருப்பீர்கள். சுதந்திரப் பிரியரான நீங்கள் யாரிடமும் போய்க் கை கட்டி நிற்கக் கூடாது என்று எண்ணுவீர்கள்.

அவ்வப்போது மனதில் தோன்றிய கருத்துக்களைத் துடுக்காக வெளியிடுவதால் சிலருடைய எதிர்ப்பு உருவாகும். மனதில் ஒன்றை வைத்துக் கொண்டு வெளியில் ஒன்று பேசமாட்டீர்கள். சில நேரங்களில் மௌனம் சாதிப்பீர்கள். எல்லோரையும் அன்புடன் நேசிப்பதால் மற்றவர்கள் உங்களை நல்லவர் என்று போற்றுவர். அவ்வப்போது ஏற்படும் குழப்பங்கள், குடும்பச் சிக்கல்கள் நீங்க தியானப்பயிற்சி செய்யவேண்டும். பொதுவாக உங்களுக்கு இந்த ஆண்டு சுமாரான நன்மை அளிக்கும். அதேநேரத்தில் எண் சோதிடப்படி முறைப்படி பெயரை அதிர்ஷ்ட எண்ணில் அமைத்துக் கொண்டாலும் கையெழுத்தை சிறப்பாக அமைத்துக் கொண்டாலும் முன்னேற்றம் கூடிக் கொண்டே செல்லும்.

தொடர்ந்து எதையும் நம்பிக்கையுடன் செய்தால் வெற்றி பெற முடியும் என்ற தத்துவத்தை அடிக்கடி நினைத்துப் பார்பீர்கள்.

தூண்டிலில் உணவு இருந்தால் மீன் சிக்கும். நம்பிக்கையோடு உழைத்தால் வெற்றிகிட்டும் என்ற தத்துவத்தை நீங்கள் உணர்ந்து பார்ப்பீர். ஒருவரின் பெயரும், அவனைப் பற்றிய நினைவும் அவன் செயலில் இருக்கிறது என்று கூறுவீர்கள்.

பொதுவாக நீங்கள் ஒரு தத்துவமேதை. எங்கு சென்றாலும் உங்கள் தனித்தன்மையானது மாறாது. நேர்மை, நீதி உங்களுக்குப் பிடித்தமானவைகள். பனை மரத்தின் கீழ் நின்று பாலைக்குடித்தாலும் மற்றவர்களுக்கு கள்ளாகத் தோன்றும். நீங்கள் உண்மையாக இருந்த போதிலும், சந்தர்ப்ப சூழ்நிலை மற்றவர் கண்ணுக்குக் கெட்டவர்களாகக் காட்டும்.

செய்யும் தொழிலை தெய்வமாக மதிக்கும் உங்களுக்குக் கடமையைச் சரிவரச் செய்வது ரொம்பப் பிடிக்கும். புதுமையும், எளிமையும் கலந்து வாழ ஆசைப்படுவீர்கள். விஞ்ஞானக் கருவிகள், அதை இயக்குதல் உங்களுக்கு மிகவும் பிடித்தமானவை. பசி, பட்டினி என்று இருப்பவர்களுக்கு உணவு கொடுக்க வேண்டும் என்று விரும்புவீர்கள். பக்தியை விட ஞானம்தான் உங்களுக்கு ரொம்பப் பிடிக்கும் சரியான ஆதாரங்கள் இல்லாத எந்த விஷயத்தையும் ஒத்துக் கொள்ளமாட்டீர்கள். எதையும் உடனே நம்பமாட்டீர்கள். அப்படி நம்பி விட்டால் முழுமையாக நம்புவீர்கள். உங்களுக்கு ரொம்பப் பிடித்தவைகளான ஒழுக்கம், புதுக்கவிதைகள், புதுக்கருத்துக்கள் போன்றவை உங்கள் மனதைக் கவரும்.

மற்றவர்களுக்கு உதவி, ஒத்தாசை செய்து நல்லவராகவும், வல்லவராகவும் வாழ ஆசைப்படுவீர்கள். அடிக்கடி உங்கள் உடல் தகராறு செய்யும். உஷ்ணத்தால் கொஞ்சம் பாதிக்கும். சிந்தனை அதிகம் கொண்ட உங்களுக்கு 'டென்ஷன்' அதிகம் காணப்படும். குளிரைக் கூடத் தாங்கி விடுவீர்கள். ஆனால் வெயிலைத் தாங்க முடியாது. உடல்வாகு உங்களுக்கு அழகாக இருக்கும். சாப்பாட்டில் கொஞ்சம் அலர்ஜி வர வாய்ப்பு இருப்பதால் ஒத்துக் கொள்ளாத சில சாப்பாட்டுப் பொருள்களை கண்டறிந்து ஒதுக்கிவிட வேண்டும்.

அடிக்கடி மிளகு கசாயம் அருந்தி வந்தால் உடலில் உள்ள விஷத்தன்மையை எடுத்து விடும். காரம் உங்களுக்கு ஒத்துக் கொள்ளாது. முட்டை, இறைச்சி இவைகளைச் சாப்பிடுபவர்கள் அதை விட்டுவிட வேண்டும். வயிற்றில், வாயில். அடிக்கடி புண் ஏற்பட வாய்ப்பிருப்பதால் மணத்தக்காளிக் கீரை, அகத்திக்கீரை சாப்பிடுவது நல்லது. வாரம் இரு முறை வாழைப்பூ வாங்கி வந்து கூட்டு செய்து சாப்பிட்டு வந்தால் வயிற்று நோயைப் போக்கும்.

உங்கள் அசாத்திய குணத்தால் முடியாது என்பது கூட முடிந்து விடலாம். வெளிநாட்டில் இருந்து நல்ல செய்திகள் வரும். காதல் கண்சிமிட்டும். அரசாங்க வேலை பார்ப்பவர்களுக்கு மேலதிகாரிகளின் அழுத்தம் இருக்கும். புதுப்புதுச் செலவுகள் வந்து உங்கள் பையைக் காலி செய்யும். சிலர் பொறாமைப்பட்டாலும் பலர் உங்கள் நல்லகுணத்திற்கு ஒத்துழைப்பாக நிற்பர். கடுமையான முயற்சியால் வீடு, வாகனம், நிலம் வாங்கிச் சேர்ப்பீர்கள். அவ்வப்போது பயணங்கள் செய்ய வேண்டியிருக்கும். இழுபறியாகக் கிடந்த சுபகாரியங்கள் உடனடியாக சரிவரும்.

கடன் தொல்லையிலிருந்து விடுபடுவீர்கள். புதிய திட்டம் நடைமுறைக்கு வரும்.

### நோய்

உங்கள் மனம் சில நேரங்களில் குழம்பும். அந்த நேரத்தில் இறைவனை நினைக்க வேண்டும். நரம்பு சம்பந்தமாக பிரச்சினை வந்து நீங்கும். கால்வலி, இடுப்பு வலி தோன்றி சரியாகும்.

### மாணவர்களுக்கு

இந்த ஆண்டு கல்வியில் கொஞ்சம் கவனம் தேவை. அதிக உழைப்பால் நல்ல மதிப்பெண்களை பெற முடியும். என்ற நம்பிக்கை வேண்டும். மேற் கல்வி கற்க வாய்ப்பு உண்டு. உங்கள் பிரச்சினைக்குத் தீர்வு காண சரியான படி அதிர்ஷ்டகரமான கையெழுத்து அமைக்க வேண்டும்.

### மாதப் பலன்கள்.

*ஜனவரி:* பணம் பலவழிகளில் வந்து சேரும். கொடுக்கல் வாங்கல் சிறப்பாக இருக்கும். எடுத்த காரியங்களை தாம்தாம் என்று செய்து முடிப்பீர். பிணைக் கையெழுத்துப் போடக் கூடாது. பல நாள் எதிர்பார்த்திருந்த காரியங்கள் திடீரென கைகூடி விடும். தொழில் படிப்படியாக முன்னேற்றப்பாதையில் செல்லும். தோல் வியாதி, நெஞ்சுக்கரிப்பு, அஜீரணக்கோளாறு அவ்வப்போது வந்து நீங்கும். வெளிநாட்டுப் பயணம் செய்வீர்கள். எதிர்ப்பு ஒழியும். புதிய பொருள் வாங்கிச் சேர்ப்பீர்கள். வியாபாரம், ஒப்பந்தம், தரகு இவற்றால் அதிக லாபம் பெறுவீர்கள். சுபகாரியம் கைகூடும். போட்டிகளையும் எதிர்ப்புக்களையும் கடந்து முன்னேற்றப்பாதையில் செல்வீர்கள்.

*பெப்பிரவரி:* எடுத்த காரியம் படிப்படியாக நடந்து கொண்டே வரும். பணம் பல வழியில் வரும். சளித்தொந்தரவு காணப்படும். வெளியூர், வெளிநாட்டுப் பணயங்கள் செய்வீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். தேவையில்லாத வாக்குவாதம் செய்ய நேரும். தேவையில்லாத குழப்பம் மனதை வாட்டும். கனவுகள் மனதை வாட்டும். நீண்ட நாள் பிரச்சினை முற்றுப்பெறும். வாழ்கைத் துணைவரிடம் எதிர்ப்புகள் காணப்படும். உல்லாசப் பயணம் செய்வீர். தலையில் அரிப்புக் காணப்படும். முடி உதிரும். புதிய தொழில் செய்யத் திட்டம் போடுவீர்கள். வாகனத்தால் செலவு உண்டு. பெண்களாக இருந்தால் கர்ப்பப் பையில் பிரச்சினை தேன்றி மறையும்.

*மார்ச்:* நல்ல வாய்ப்புகள் வந்து உங்களை மகிழச் செய்யும். எதிர்பாராத வகையில் பணம் வரும். நல்ல மனிதர் உதவியும் ஒத்துழைப்பும் கிடைக்கும். திடீர் பயம் ஏற்படும். எடுத்த வேலைகள் தாமதம் இல்லாது முடியும். சுபகாரியச் செலவு ஏற்படும். உல்லாசப் பயணம், உல்லாசச் செலவு அவ்வப்போது உண்டு. முடியுமா? முடியாதா? என்ற விஷயம் கூட முடிந்து விடும். செய்யும் தொழில் படிப்படியாக உயரும். கல்வியில் உயர்வு, மேலதிகாரியின் ஆதரவு உங்கள் மனதிற்கு தெம்பளிக்கும். உத்தியோக உயர்வுண்டு. குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். வெளிநாட்டுப் பயணம் செய்ய வாய்ப்புண்டு. புகழேணியில் ஏறுவீர்கள். உஷ்ண வியாதிகள் வந்து நீங்கும். சுபகாரியம் கைகூடும்.

*ஏப்ரல்:* திடீரெனத் தோன்றும் முரட்டுக் குணம் பிரச்சினையை உருவாக்கும். வாய் நிதானம், கைநிதானம் தேவை. எதிர்பாராத பயம், தேவையில்லாத அலைச்சல் ஏற்படும். உருண்டு, புரண்டு எந்தக் காரியத்தையும் செய்ய முடியும். எவ்வளவு பணம் வந்தாலும் வெயிலில் பட்ட பனிக்கட்டி போல் கரைந்து விடும். காரணமில்லாமல் மனப்பயம் வாட்டும். சொத்துக்கள் வாங்க விற்க சிறப்பாக இருக்கும். எதையும் சமாளிக்கும் ஆற்றலும், அறிவும் படைத்த உங்களுக்கு பல மனிதர் ஆதரவு கிடைக்கும். இதுவரை தாமதித்த காரியம் மாதக் கடைசியில் முடியும். கொடுக்கல், வாங்கல், சுபகாரியத் திட்டம், வீடு, வாகனம் செயற்கை திருப்தியாக இருக்கும். கடன் பளு குறையும்.

*மே:* எதிர்பாராத நன்மைகள் நடக்கும். வம்பு வழக்கு வந்து நீங்கும். பயணத்தில் கவனம் தேவை. தொழிலில் ஏற்பட்ட தடைகள் நீங்கி முன்னேறிச் செல்வீர்கள். பணம் பல வழிகளில் வந்து பாக்கெட்டை நிரப்பும். செய்யும் தொழில் ஆமை வேகத்தில் செல்லும். செலவை மட்டுப்படுத்த முடியாது திடீர் பயணங்கள் செய்வீர்கள். சொத்துக்கள் வாங்க விற்க இழுபறியாக இருக்கும். எந்தப் பழக்கத்திலும் மாட்டிக் கொள்ளக் கூடாது. வாய்நிதானம், கைநிதானம் தேவை.

நண்பர்களால் தண்டச் செலவு ஏற்படும். கனவுத் தொந்தரவு ஏற்படும். உடலில் உஷ்ண வியாதி வந்து நீங்கும். மறதி அடிக்கடி காணப்படும். வீடாப்பிடியாக எதையும் செய்து முடிப்பீர்கள். பெண்களாக இருந்தால் ஆண்களாலும், ஆண்களாக இருந்தால் பெண்களாலும் மனவேதனைப்படுவர்.

*ஜூன்:* புதுப் புதுக் கருத்துக்கள் தேன்றிக் கொண்டிருக்கும். தேவையில்லாத விஷயத்தில் போய் ரென்சனாகி விடுவீர்கள். வாய்ப்பேச்சில் வீரரான உங்களுக்கு உள்மனதில் சிறு குழுப்பம் இருக்கும். திடீர் கனவு உங்கள் மனதைக் கெடுக்கும். எதிர்பாராத பணவரவு உங்கள் மனதிற்கு மகிழ்ச்சி ஊட்டும். செய்யும் தொழிலில் போராடி முன்னேறுவீர்கள். மற்றவர்களிடம் சிறிது கருத்து வேறுபாடு வந்து நீங்கும். வாய்நிதானம் தேவை. கடும் முயற்சியால் காரியங்களைச் சாதிப்பீர். கல்வியில் உயர்வும், உத்தியோகத்தில் மேலதிகாரிகளின் அழுத்தமும் இருக்கும். நினைவாற்றல் குறையும். உங்களைச் சிலர் ஏமாற்றப் பார்ப்பர். வாகனத்தால் செலவு ஏற்படும்.

*ஜூலை:* எதிர்பாராத பயணங்கள் மேற்கொள்ள நேரும். புதிய வாய்ப்புக்கள் வந்து வாயிற்கதவைத் தட்டும். எதிர்பாராத காரியம் கைகூடும். எதிர்பாராத பண வரவும் வரும். சுப காரியம் நடக்கும். சொத்துக்கள் வாங்க விற்க சிறப்பாக இருக்கும். தாமதித்த காரியம் கைகூடி விடும். எதையோ இழந்தது போன்று அடிக்கடி குழம்புவீர்கள். திடீர் பயணம் செய்வீர். மகான்களின் சந்திப்பும் நல்ல கருத்துக்களைக் கேட்பதாலும் பெரிய மனிதர் ஆதரவு உங்கள் பகுதியை உயர்த்தும். காமம் கூடும். பாராட்டும் மதிப்பும் கூடிக் கொண்டே இருக்கும். உங்களுக்கு ஒருவர் காதல் வலை வீசுவார் . கனவுத் தொல்லை இருக்கும். சிறுநீர் சம்பந்தமான வியாதி வந்து நீங்கும்.

*ஓகஸ்ட்:* எதிலும் அவசரப்படுவீர்கள். நீங்கள் செய்யும் தொழிலில் அதிக லாபம் சம்பாதிப்பீர்கள். போட்டிகளையும் எதிர்ப்புகளையும் சமாளித்து முன்னேற்றப் பாதையில் செல்வீர்கள். முடியுமோ, முடியாதோ என்ற காரியம் கூட முடிந்து விடும். கனவுத் தொல்லை இருக்கும். திடீர் பயணம் செய்வீர்கள். உங்களை நேசித்த ஒருவரை பிரிய நேரிடும். எதையும் தாங்கும் இதயம் கொண்ட உங்களுக்கு பல நல்ல மனிதர் நட்புக் கிடைக்கும். சமூக சேவை, சமூக சீர்திருத்தம் செய்ய ஆசைப்படுவீர்கள். இதனால் கெட்ட பெயரும் கிடைக்கும். தரகு, ஒப்பந்தம், கொடுக்கல் வாங்கல் வியாபாரம் இதனால் சிலர் அதிக இலாபம் பெறுவர். கால்வலி, பல்வலி, கழுத்து வலி வந்து நீங்கும்.

*செப்ரெம்பர்:* புதிய சிந்தனைகள் நல்ல கருத்துக்கள் மனதில்அவலம் வரும். உதவும் குணம் படைத்த உங்களுக்கு மக்கள் ஆதரவும், புகழும் கூடும். பிரச்சினைகள் தேன்றினாலும் சூரியனைக் கண்ட பனிபோல் மறையும். ஜீரணக் கோளாறு, நெஞ்சுக்கரித்தல் அவ்வப்போது தோன்றி மறையும். திடீரென மனதில் சோகம் குடி கொள்ளும். கெட்டவைகளைக் கழித்து நல்லவைகளைப் பெருக்குவீர்கள். எதிர்பாராத நன்மைகள் நடக்கும். காதல மலரும். எதையோ இழந்தது போன்று மனம் தவிக்கும். சொத்துக்கள் வாங்க விற்க சிறப்பாக இருக்கும். உத்தியோகத்தில் சில பிரச்சினைகள் தேன்றி மறையும். ஆடை ஆபரணங்கள் வாங்குவீர்கள் , வெளியூர் பயணம் செய்வீர், குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும்.

*ஒக்ரோபர்:* எதையும் செய்து முடிக்க முடியும் என்ற தன்னம்பிக்கை பிறக்கும். சில பொறாண்மைக்காரர்கள் தேன்றினாலும் உங்களை ஒன்றும் செய்யமுடியாது. அடிக்கடி ஏற்படும் சோம்பல் உங்கள் உயர்வுக்குத் தடைக்கல்லாக இருக்கும். தொழில் பல தடைகளைத்தாண்டி முன்னேற்றப்பாதையில்செல்லும். வெளிநாட்டுப் பயணங்கள் வெற்றி பெறும். புதிய திட்டங்கள் நல்ல வாய்ப்புகள் வந்து உங்கள் வாயிற் கதவைத் தட்டும். வீடாப்பிடியாக எதையும் சாதிப்பீர். தன்னம்பிக்கை பிறக்கும். பணம் பல வழிகளில் வரும். புதிய சொத்துக்கள் சேரும். நல்ல செய்திகள் வரும். தோல் வியாதி இடுப்பு வலி வந்து நீங்கும்.

*நவம்பர்:* தேவையில்லாத பதற்றமும், குழப்பமும் அடிக்கடி உங்களைத் தொந்தரவு செய்யும். சில விஷயங்களை மனதில் போட்டு தனிமையில் குழப்பிக் கொண்டிருப்பீர்கள். உருண்டு புரண்டு எடுத்த காரியத்தை முடிப்பீர்கள். சுப காரியங்கள் நடக்கும். வெளியூர், வெளிநாட்டுப் பயணங்கள் செய்வீர்கள். எதிர்பார்த்த காரியங்கள் நடக்காதிருந்தால் எதிர்பாராத நன்மைகள் நடந்து உங்களை மகிழ்ச்சி செய்யும். புதிய பொருள் வாங்கிச் சேர்ப்பீர். குடும்பத்தில் அவ்வப்போது வாக்குவாதம் இருக்கும். கொடுக்கல் வாங்கல் இழுபறியாக இருக்கும். ஒப்பந்தம் தரகு ஏஜென்சி இவற்றால்அதிக லாபம் கிடைக்கும்.

மகான்களின் சந்திப்பு மனதிற்கு இதமளிக்கும்.

*டிசெம்பர்:* தாமதமாகிக் கொண்டிருந்த காரியம் கைகூடும். பெரிய மனிதர் ஆதரவு உங்கள் தகுதியை உயர்த்தும். சுபகாரிய திட்டங்கள் போடுவீர்கள். சொத்துக்கள் வாங்க விற்க சிறப்பாக இருக்கும். நோய் நீங்கும். கல்வியில் உயர்வு, கல்வி உத்தியோகத்தில் மேன்மை, தொழிலில் முன்னேற்றம் பெறுவீர்கள். எதையும் ஆராய்ந்து செய்யும் நீங்கள் திடீரென பதற்றமாகி விடுவீர்கள். ஜீரணக் குறைவால் வாயுத் தொல்லை அவ்வப்போது வந்து மறையும். பக்தி , தியானம் இவற்றில் மனம நாடிச் செல்லும். புதிய கூட்டாளிகள் தொழில் செய்ய ஊக்குவிப்பர்கள். குடும்பத்தில் மகிழ்சி நிலவும். வெளிநாட்டுத் தொடர்பு திடீர் நன்மைகள் நடக்கும்.

திருமணம் தடைப்பட்டவர்களுக்கு தடை நீங்கிவிடும்.

*(முற்றும்)*

# சுயநலமின்றி பிறருக்காக வாழ்வோம்!

"கோதுமை மணி மண்ணில் விழுந்து மடியாவிட்டால் அது அப்படியே இருக்கும். அது மடிந்தால்தான் மிகுந்த விளைச்சலை அளிக்கும்" (யோவா 12:24)

யூதரல்லாத கிரேக்கர் சிலரும் யேசுவைக் காணவிருப்புகின்றார்கள். இயேசுவோடு தங்கி அவரது சீடராக விரும்புகின்றார்கள். தமது இந்த விருப்பத்தை இயேசுவின் சீடருள் ஒருவரான பிலிப்புவிடம் தெரிவிக்கின்றார்கள். இது பிலிப்புவிற்கு ஒரு பிரச்சினையாகவே இருந்தது. இயேசுவின் சீடர்கள் நாம் பன்னிரண்டு பேர், சிறிய குழுமம், ஒரே இனம், ஒன்றாக இருந்தோம். சந்தோஷமாக இருக்கின்றோம். இச்சிறிய குழுமத்தில் வேறு இனத்தவர்களாகிய இவர்களை எவ்வாறு சேர்ப்பது. இது மிகவும் கடினமான ஒன்றாக இருந்தது. இயேசுவின் சீடர்கள் வேறு சிலருக்கும் இதே பிரச்சினையே இருந்தது. எனவே, சீடர்கள் தம் தலைவரான இயேசுவிடம் இந்தப் பிரச்சினையை எடுத்துச் செல்கின்றார்கள.

இயேசுவிடம் சென்று பிரச்சினையை விளக்கிக் கூறியபோது இயேசுவும், அதே பிரச்சினையால் சோதிக்கப்படுகின்றார். இயேசுவிற்கு கூட இந்தப்பிரச்சினைக்கு என்ன பதில் அளிப்பது என்று தெரியாமல் தடுமாறி கலக்கமுறுகின்றார். சோதனை

## ஞாயிறு நற்பிரசாதம்

அவரை ஆட்கொளகின்றது. தந்தையே இந்த சோதனையில் இருந்து என்னைத் தப்புவிக்கும்படி வேண்டுமளவிற்கு இயேசு சோதனைக்கு உட்படுத்தப்படுகின்றார்.

இறுதியில் இந்நேரம் வரை நான் வாழ்ந்தது இதற்காகத்தானே என்று உணர்ந்து சீடர்களுக்கு பதில் கூறாமல இப்பொழுதே இந்த உலகு தீர்ப்புக்குள்ளாகின்றது. இந்த உலகின் தலைவன் வெளியே துரத்தப்படுவான். நான் மண்ணிலிருந்து உயர்த்தப்படும்போது அனைவரையும் என்பால் ஈர்த்துக்கொள்வேன் என்று பதில் கூறி முடிக்கின்றார்.

நாம் இன்றும், யூதர்களின் மனநிலையிலேயே வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். எமக்கு நன்மை தருபவை என்று நாம் நினைத்துக்கொள்ளும் எத்தனையோ சிறிய வட்டங்களுக்குள எம்மை அடக்கி தன்னலம் தலைக்கேறி சுயநலப்பேய் பிடித்தவர்களாக, மனித மாண்பின் மகத்துவம் தெரிந்தும் அதை மதிக்கத் தெரியாதவர்களாக வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்.

**இராசநாயகம் அ.ம.தி**

நான், எனது, என்னுடையது, எனக்கு என்றும் எனது கோயில், எனது பங்கு, எனது சாதி, எனது மதம், எனது இனம், எனது நாடு என்னும் குறுகிய வட்டங்களுக்குள் வாழ்ந்து கொண்டு எத்தனை எத்தனை அநீதிகளையும் அக்கிரமங்களையும் மற்றவர்களுக்கு விளைவிக்கின்றோம். இந்தச்சிறிய வட்டங்கள் அனைத்தும் உடைக்கப்பட வேண்டும் நொறுக்கப்பட வேண்டும். ★

## பண்ணிசைப் போட்டி

யாழ்சைவ பரிபாலன சபையினால் வருடம் தோறும் புண்ணிய நாச்சியாம்மையார் குருபூசை தினத்தை முன்னிட்டு நடத்தப்படும் பண்ணிசைப போட்டிக்கான விண்ணப்பங்கள் கோரப பட்டுள்ளன.

தரம் 3தொடக்கம் தரம் 11வரையிலான வகுப்புக்களைச் சேர்ந்த மாணவர்கள் இந்தப் போட்டிகளில் பங்குபற்ற முடியும்.

போட்டிகள் அடுத்த மாதம் 8ஆம் திகதி வண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தில் நடைபெறும் என்றும்-

போட்டிகளில் பங்கு கொள்ள விரும்புவோர் எதிர்வரும் 20ஆம் திகதிக்கு முன்னர் தமது விண்ணப்பங்களை அனுப்பி வைக்க வேண்டும என்றும்-

சைவ பரிபாலன சபையின் தலைவரும்,சபையின் பரீட்சைச் செயலாளருமான சைவப்புலவர் வ.கந்தசாமி அறிவித்துள்ளார். (எ)

## இந்தச் சிறுமிக்கு உதவுங்களேன்



தமது இருதயத்தில் உண்டாகிய துவாரம் காரணமாக, பத்து வயதுச் சிறுமி ஒருவர் கடந்த மூன்று வருடங்களாக மிகவும் அவதிப்படுகிறாா். யாழ்ப்பாணம், கொட்டடி, 32, சிவன பண்ணை வீதியைச் சேர்ந்த தேவமலர் சத்தியசீலன் என்ற சிறுமியே இருதயநோயால் பாதிப்புற்றுள்ளவர் ஆவார்.

உரிய வேளையில் சிகிச்சைபெறாததால் இவரது உடல் நிலை நாளாந்தம் மோசடைந்து வருவதாகச் சொல்லப்படுகிறது. இச்சிறுமிக்கு உடனடியாகச் சத்திரசிகிச்சை செய்யவேண்டும் என்று கொழும்பு அப்பலோ வைத்தியசாலை டாக்டர்கள் கடந்த நவம்பர் மாதத்தில் தெரிவித்திருந்தனர்.

சிறுமி தேவமலர் தந்தையை இழந்து தமது பேரனின் பராமரிப்பில் உள்ளார். சத்திரசிகிச்சைக்குத் தேவையான மூன்று லட்சம் ரூபாவைப் பெறுவதற்கான பொருளாதாரவளம் இச்சிறுமியின் குடும்பத்தினரிடம் இல்லை. பரோபகாரிகள் பலரும் செய்த உதவியினால் இதுவரை 98 ஆயிரம் ரூபா பணம் சேர்ந்துள்ளது.

மிகுதிப் பணத்தையும் உங்களைப் போன்ற இரக்க சிந்தனை உள்ள நல்லன்பர்களிடம் இருந்தே, வறுமையில் வாடும் சிறுமியின் குடும்பத்தினர் எதிர்பார்க்கின்றனர்.

எங்கள் சமூகத்தின் இளம்சந்ததியைச் சேர்ந்த செல்வி தேவமலருக்கு உதவி, அவரது பெயரில் யாழ்ப்பாணம் தேசியசேமிப்பு வங்கியில் தொடங்கப்பட்டுள்ளன. இல. 1.0006 - 50-54745 (ஹப்பன் சிறுவர் கணக்கில்) உங்கள் பங்களிப்பை வைப்பிலிடுமாறு குடும்பத்தினர் மிகவும் விநயத்துடன் வேண்டுதல் விடுத்துள்ளனர். சிறுமியின் உயிரைக் காப்பதற்கு உதவிப் புண்ணியம் சேருங்கள்.

## மீன் வகைகள் கொள்வனவு

ஐஸ்ஸில் இடப்பட்ட

- அறக்குளா மீன்
- பாரை மீன்
- சூரன் மீன்
- முரல் மீன்
- கீரி மீன்

முதலான மீன் வகைகள் கொள்வனவு செய்யப்படும்.

வழங்க விரும்புவோர் முகவர் மூலமாகத் தொடர்பு கொள்ளலாம்.

விக்கிரமரட்ண ரேட்ஸ் (பிறைவேற்) லமிட்டெட்
காங்கேசன்துறை வீதி,
(லங்கா பெற்றோல் நிரப்பு நிலையம் முன்பாக) சுன்னாகம்.

☛ விவரம் தேவைப்படின் 0777 748098, 0602 21 2824 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொள்ளவும்.

(27039) (11-16-18)

## தெய்வீக தொண்டனை பாராட்டி வாழ்த்துகிறோம்



புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும் 24A, வளாக வீதி, திருநெல்வேலியில வசிப்பவருமான வட பிரதேச இந்துப் பேரவைத் தலைவரும் தீவக லயன்ஸ்கழக அங்கத்துவ பணியாளரும் இலங்கை முதலுதவிச்சங்க உபசெயலாளரும் எயிட்ஸ், காசநோய் தடுப்புச்சங்க உறுப்பினரும் ஆகிய

**உயர்திரு. சு.நித்தியானந்தன்**


(நியூ கல்யாணி ஜுவலர்ஸ் உரிமையாளர்) அவர்கள்

யாழ்.நீதிமன்றில் மேலதிக நீதிவான் திருமதி S.நந்தசேகரன் முன்னிலையில் அகில இலங்கைக்குமான சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்ததையிட்டு அவரைப் பாராட்டுவதோடு, நல்லூர் உற்சவகாலத்தில் தேரடி அறுபத்து மூன்று நாயன்மார் மண்டபத்தில் இருபத்த ஐந்து நாள்களும் இவருடைய தலைமையில் வட பிரதேச இந்துப்பேரவையினால் நடத்தப்பட்ட தெய்வீக சொற்பொழிவுகளில் பெரும் அறிஞர்களையும், பேராசிரியர்களையெல்லாம் அழைத்து எங்களுக்கு முருகனுடைய பக்தியையும் அருளையும் தந்து எங்களையெல்லாம் தெய்வீகத்தில் ஆழ்த்திய பெரும் பக்திமானை நாங்கள் இரு கரங்கூப்பி வணங்கி பாராட்டி வாழ்த்தி மேன்மேலும் இருவருடைய தெய்வீகம் வளர நல்லூர் முருகனை வேண்டிநிற்கின்றோம்.

(27044)(35) - நல்லூர் முருகன் அடியார்கள்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 25 - 04 - 1920 | 22 - 12 - 2002 |



**அமரா கார்த்திகேசு ஐயாத்துரை**

திதி: 11.01.2004

ஓராண்டு மறைந்தாலும் ஆறாது எம் நெஞ்சம்
தீராத வேதனையால் துடித்தே அழுகின்றோம்
மாறாத உமது அன்பு முகத்தை எப்போது காண்போம்?
ஆத்மா சாந்திபெற ஆண்டவனை வேண்டுகின்றோம்.

தியேட்டர் லேன்,
இணுவில் கிழக்கு,
இணுவில்.

அன்பு மனைவி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(27047) (26-11-16-18)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 12 ~ 03 ~ 1932 | 22 ~ 12 ~ 2002 |



**அமரர் சின்னத்துரை பொன்னம்பலம்**

பாரினில் நாம் சிறக்க
பகலிரவாய்க் கண்விழித்து
பரமன் பாதம் தன்னை
பாங்குடனே தினம் துதித்து
கண் துஞ்சாமல் பார்த்து
கண்மணியாய் எமைக் காத்து
பார் போற்றும் உத்தமராய்
வாழ வைத்த உமை என்றுமே மறவோம்!

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

புன்னாலைக்கட்டுவன், தெற்கு.

(27945)(35-11-16-18)

## The Royal College Of Jaffna

**ஆசிரியர்கள் தேவை**

அனுபவம்மிக்க கணிதம், விஞ்ஞானம் ஆண்டு 11 இற்குக் கற்பிப்பதற்கு.
தொடர்பு: தலைமை ஆசிரியர், 426 (302), கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

(27038) (14-16-18)

## லிகிதர் தேவை

சுன்னாகத்தில் இயங்கும் தனியார் நிறுவனம் ஒன்றிற்கு ஓரளவு ஆங்கில அறிவு உள்ள பெண் லிகிதர் தேவை.

**வயதெல்லை 35~40**

அருகில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.

உங்கள் விண்ணப்பங்களை அனுப்பி வைக்க வேண்டிய முகவரி

**முகாமையாளர்,**
இல. 91, K.K.S. Road,
KOKUVIL.

(27046)(35)

## WANTED

1. Office Clerk (Full Time)
2. Lab Assistants (Ms Office, VB, C++, Java, Web Applications)

Submit your Applications.

Scc,43, Arasady Road,
Thaddatheru Junction,
Jaffna.
T.P.No.222 5170
Scc Lanka@hotmail .Com.

**CCNA & All other High Leval Cisco Courses Soon at SCC**

(C/32712)(35)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 03 - 04 - 1942 | 12 - 12 - 2003 |



**திருமதி தேவராசா குணபூசணம்**

எம்மையெல்லாம் அன்புடனும் பாசத்துடனும் வழி நடத்தி 12.12.2003 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவியின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை இன்று (11.01.2004) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும்.

இந்நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

'இராச கிரி',
இராச வீதி,
நீர்வேலி மேற்கு, நீர்வேலி.

க. தேவராசா
குடும்பத்தினர்.

(27040) (11-16-18)

## மரண அறிவித்தல்

**நாகமுத்து உலகநாதன்**

புங்குடுதீவு, 8ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் தாவடிச்சந்தியை வசிப்பிடமாகவும் கொண்ட நாகமுத்து உலகநாதன் அவர்கள் 10.01.2004 சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நாகமுத்து - செல்லமுத்து ஆகியோரின் அன்பு மகனும் காலஞ்சென்ற விஷ்வலிங்கம் - குழந்தைநாச்சி ஆகியோரின் மருமகனும் புஸ்பவதியின் அன்புக் கணவரும் சசிதரன் (பிரான்ஸ்), உருத்திரகுமார் (கொழும்பு), தில்லைநாதன் (யாழ்ப்பாணம்), ரூபகாந்தன் (வவுனியா), காலஞ்சென்ற பாலகுமார் மற்றும் தேனுகா ஆகியோரின் அன்புத் தந்தையும் கலைச்செல்வி (பிரான்ஸ்), ஜெயகதாம்பாள், லோகநாயகி, பிரேமளா, நிரஞ்சன் ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற கையிலாயநாதர், இராமலிங்கம், செல்லம்மா, கண்மணி மற்றும் பரராசசிங்கம் (சொக்கர்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (11.01.2004) ஞாயிற்றுக்கிழமை நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் 3மணியளவில் தகனக்கிரியைக்காக தாவடி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
உ.உருத்திரகுமார் *(மகன்)*
உ.தில்லைநாதன் *(மகன்)*.

*தாவடிச்சந்தி,*
*கொக்குவில்.*
*தொலைபேசி :*
*0777 242995, 077 6178194*

(27046) (26-11-16-18)

# பல் நோய்களுக்கு இலக்காவோர் எண்ணிக்கை அதிகரிக்கின்றது

வலி.கிழக்கு,ஜன11

குடாநாட்டில் பல் நோயினால் பாதிக்கப்படுவோர் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. பல்லில் சூத்தை போன்ற தாக்கம் ஏற்பட்டு கொதிவலி தோன்றிய பின்னரே பலரும் ஆஸ்பத்திரியை நாடி வருகின்றார்கள். நேர காலத்துடன் வைத்தியர்களை அணுகினால் சிகிச்சைமூலம் பயன்பெறுவது சுலபம்.

இவ்வாறு ஆலோசனை தெரிவித்தார் கோப்பாய் ஆஸ்பத்திரி பொறுப்பதிகாரியும் பல் வைத்திய அதிகாரியுமான திருமதி ரி.இராஜசேகரம்.

பல் நோய்களால் பாதிக்கப்பட்ட பெரும் எண்ணிக்கையான நோயாளர்கள் தினமும் கோப்பாய் ஆஸ்பத்திரிக்கு சிகிச்சைக்கு வருகின்றார்கள்.

எல்லோருமே பல்லின் சுகாதாரத்தைப் பேணுவதில்லை. உணவு உண்டபின் அதன் துணிக்கைகள் பல்லில் ஒட்டிக்காணப்படும். அதில் இருந்து பற்றிரியாக்கள் மூலம் பல் நோய் ஏற்படுகின்றது.

பல்லை நன்றாக சுகாதாரமுறைப்படி பேணவேண்டும். பற்களில் சூத்தை ஏற்பட்டவுடன் வைத்தியரை அணுகி உடன் அடைக்கவேண்டும். இல்லாவிடின் சூத்தை ஆழமாகி பல்லை அகற்ற வேண்டிவருகின்றது.

சூத்தை கொதித்து பல்லைப் பிடுங்கும் நிலையிலேயே பலரும் மருத்துவரை நாடுகின்றனர்.

இந்தநிலை மாறி சூத்தை ஏற்பட்டவுடன், வைத்தியரை அணுகி சிகிச்சை பெறவேண்டும். (ஐ-180)



யாழ். சைவ பரிபாலன சபையினால் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் குருபூசைத் தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட பேச்சுப்போட்டியில் மத்திய பிரிவில் இரு கண்களும் பார்வையிழந்த செல்வன் யோகலிங்கம் சுதாகர் (மாணவன் - யூனியன் கல்லூரி) இரண்டாம் இடத்தைப் பெற்றுக்கொண்டார். இவருக்கான பரிசிலினை அண்மையில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் வைத்து பிரதம விருந்தினரான கோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிபர் ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி வழங்குவதைப் படத்தில் காணலாம். (எ)

## ஒன்றுகூடல்

சங்கானை பிரதேச செயலக நலன்புரிச் சங்கத்தின் வருடாந்த ஒன்றுகூடல் நிகழ்வு நாளை காலை 9.30 மணிக்கு செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வலி.மேற்குப் பிரதேச செயலர் சி.ஏ.மோன்ராஸ் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில், அரச அதிபர் செ.பத்மநாதன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (எ-29)

## வெற்றிலைக்கேணி பாடசாலை நாளை முதல் மீண்டும் இயங்கும்

வெற்றிலைக்கேணி றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலை நாளை திங்கட்கிழமை மீண்டும் திறக்கப்படவுள்ளது.

1991ஆம் ஆண்டு வடமராட்சி கிழக்கு இடப்பெயர்வினைத் தொடர்ந்து செம்பியன்பற்றுப் பகுதியில் இடம்பெயர்ந்து இயங்கிய இப்பாடசாலை பின்னர் தற்காலிகமாக மூடப்பட்டிருந்தது. (எ-182)

## மருதடி ஆலயத்தில் பொங்கல் விழா

வலிகாமம் தெற்கு,ஜன.11

மானிப்பாய், மருதடி விநாயகர் ஆலயத்தில் இம்மாதம் 18ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை ஒன்பது மணி தொடக்கம் பொங்கல் விழா நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய தர்மகர்த்தா சபையினின் ஆதரவுடன், ஆலய அறநெறிப் பாடசாலை மாணவர்களால் பொங்கல்விழா நடத்தப்படும்.

இளைப்பாறிய அதிபர் சமூகஜோதி கா.கணேசதாசன் தலைமையில் இந்நிகழ்வுகள் நடைபெறும்.

பொங்கல்விழா நிகழ்ச்சிகளாக மாணவர்களிடையே இயல், இசை, நாடகம் மற்றும் கட்டுரைப்போட்டிகளும் கலைநிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளதோடு தர்மகர்த்தா சபைத் தலைவர் த.சிதம்பரநடராசாவின் சிறப்புச் சொற்பொழிவும் நடைபெறும். (எ-152)

## படக்காட்சி

யாழ். பல்கலைக்கழக ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி நிலையத்தினரின் ஏற்பாட்டில் பொன்வண்ணன் இயக்கத்தில் உருவான 'நதிக்கரையினிலே' என்ற தமிழ்த் திரைப்படம் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு யாழ். பல்கலைக்கழக புவியியற்றுறை மண்டபத்தில் காண்பிக்கப்படவுள்ளது.

திரைப்பட முடிவில் எழுத்தாளர் அ.யேசுராசா, க.சட்டநாதர் ஆகியோரின் நெறிப்படுத்தலில் கலந்துரையாடல் நடைபெறவுள்ளது. ஆர்வமுள்ளவர்களைக் கலந்துகொள்ளுமாறு பயிற்சி நிலையத்தின் இணைப்பாளர் பேராசிரியர் இரா.சிவச்சந்திரன் கேட்டுள்ளார். (ம-ரி)

## மூக்குக் கண்ணாடி வழங்கும் நிகழ்வு

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினால் இன்று ஞாயிற்றுக்கிழமை கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயத்தில் வைத்து மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்படவுள்ளன.

கடந்த மாதம் கொடிகாமத்தில் நடத்திய மருத்துவப் பரிசோதனை முகாமின்போது இனங்காணப்பட்ட கண் பார்வையில் பாதிப்பு உள்ள வறுமைக் கோட்டின்கீழ் உள்ள குடும்பங்களைச் சேர்ந்த 100 பேருக்கே இன்று மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்படவுள்ளன.

மூக்குக் கண்ணாடி பெறுவதற்கு சிபாரிசு செய்யப்பட்டவர்களுக்கு கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன என கழகச் செயலாளர் லயன் கா.சற்குணதேவன் தெரிவித்தார்.(எ-117)

# பாடசாலைச் சீருடைத்துணி விநியோகம் 22ஆம் திகதி கம்பஹாவில் ஆரம்பம்

கொழும்பு,ஜன.11

இந்த ஆண்டுக்கான பாடசாலைச் சீருடைத்துணி விநியோகம் எதிர்வரும் 22ஆம் திகதி ஆரம்பித்து வைகைகப்படும். இதற்கான உத்தியோகபூர்வ வைபவம் கம்பஹா மாவட்டத்தில் நடைபெறும்.

90லட்சத்து 50 ஆயிரம் சீருடைத் துணிப்பொதிகள் தயாரிக்கப்பட்டிருப்பதாகவும் சீருடைத்துணிக்கு விண்ணப்பித்த 30லட்சத்து 90ஆயிரம் மாணவர்களுக்கு சீருடைத்துணி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகவும் பாடசாலைகள் அமைச்சர் சுரனிநிமல ராஜபக்ஷ தெரிவித்திருக்கிறார்.

பாடசாலைகளில் முதலாம் தரத்துக்கு மாணவர்களை அனுமதிப்பது எதிர்வரும் 16ஆம் திகதி ஆரம்பமாகும். எனவே, அம்மாணவர்களுக்கு சீருடைத துணி பெற்றுக்கொள்ள பாடசாலை அதிபரின் சிபாரிசுடன் கிராம அதிகாரியிடம் விண்ணப்பிக்க வேண்டும்.

சீருடைத்துணி பெறுவதற்கான கூப்பன்கள் கிராமசேவை அதிகாரிகள் மூலம் வழங்கப்படும். அக்கூப்பன்களை கூட்டுறவுச் சங்கங்களிடம் கையளித்து சீருடைத்துணியைப் பெறமுடியும் என்று அமைச்சு அறிவித்துள்ளது.

பன்முகப்படுத்தப்பட்ட நிதி உதவித் திட்டத்தின் கீழ்

# வலி.கிழக்கில் கடந்த ஆண்டில் 41வேலைத்திட்டங்கள் பூர்த்தி

வலி.கிழக்கு,ஜன.11

வலிகாமம் கிழக்கு பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதிகளில் கடந்தாண்டு (2003) பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்டத்தின் கீழ் 41வேலைத் திட்டங்கள் ரூ.21 லட்சம் செலவில் பூர்த்தியாக்கப்பட்டுள்ளன என பிரதேச சபையின் செயலாளர் எஸ்.வெங்கடாசலம் தெரிவித்தார்.

மேற்படி பிரதேச சபைப் பிரிவுக்கு உட்பட்ட 6 வீதிகள், 2 மதகுகள், 5சனசமூக நிலையங்கள் இந்த நிதி மூலம் புனரமைக்கப்பட்டதுடன், 27முன பள்ளிகளுக்கு தளபாடங்கள் கொள் வனவு செய்யப்பட்டதாகவும் - அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை - கடந்த ஆண்டுக்கான பிரமாண அடிப்படையிலான நிதியுதவித் திட்டத்தின்கீழ் உரும்பிராய், விளாத்தியடி வீதி 3லட்சத்து 70 ஆயிரம் ரூபா செலவிலும் -

மாகாண சபையினால் குறித்தொதுக்கப்பட்ட நிதி மூலம் ஊரெழு, பொக்கணை வீதி 3லட்சத்து 70ஆயிரம் ரூபா செலவிலும் -

சபை நிதி மூலம் அச்செழு, குயிலன் வீதி 3லட்சத்து 80ஆயிரம் ரூபா செலவிலும் - புனரமைப்பு செயயப்பட்டுள்ளதாகவும் - அவர் மேலும் தெரிவித்தார். (எ-180)

# பாலியல் நடவடிக்கையில் மாணவரை ஈடுபடுத்தும் ஆசிரியர் மீது நடவடிக்கை

## கல்வி அமைச்சு எச்சரிக்கை

மாணவர்களைப் பாலியல் துஷ்பிரயோக நடவடிக்கைகளில் ஈடுபடுத்தும பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் சேவையிலிருந்து விலக்கப்படுவார்கள என்று கல்வியமைச்சு அறிவித்துள்ளது.

இத்தகைய குற்றத்தை இழைக்கும அதிபர்கள், ஆசிரியர்கள் ஆகியோருக்கு வழங்கப்படும் தண்டனைகள் போதுமானவையாக இல்லை என்று தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை குற்றஞ்சாட்டியிருந்தது.

இதனையடுத்தே இத்தகைய குற்றங்களை இழைப்பவர்களை சேவையிலிருந்து விலக்குவதற்கு முடிவு செய்யப்பட்டிருப்பதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

கல்வி அமைச்சினால் மேற்கொள்ளப்படும் விசாரணைகளின் சிபாரிசுகள் பொதுச்சேவை ஆணைக்குழுவின் பரிசீலனைக்காக அனுப்பிவைக்கப்படும் என்றும் -

மேற்படி ஆணைக்குழுவும் குற்றத்தை நிரூபிக்கும் பட்சத்தில் சம்பந்தப்பட்டோர் சேவையிலிருந்து விலக்கப்படுவர் என்றும்-தெரிவிக்கப்பட்டது. (எ-4)

# வாசகர் திருமுகம்

## காலம் கடந்த விவசாயக்கடன்; இறுதித்தீர்வு என்று கிடைக்கும்

பத்திரிகைகளில் பலவிதமான செய்திகள் வெளிவருகின்றன. அவற்றுள் சில எண்ணத்தைத் தூண்டுவனவாகவும், குறிப்பிடப்பட்ட விடயங்களில் ஏதோ நாமும் ஈடுபட்டு சமூகத்திற்கு எம்மால் செய்யக்கூடிய உதவிகளை நாம் செய்தால் என்ன? என்ற நிலையையும் தோற்றுவிக்கின்றன. சில பிரமுகர்களின் பேச்சுக்கள் அப்படியே வாசித்து விட்டு வாழா இருக்க வேண்டும் போல் எமது மனத்தில் ஓர் உணர்வை ஏற்படுத்துகின்றன. இங்கே நான் குறிப்பிடப்போவது குடாநாட்டு விவசாயிகள் பற்றிய செய்தியே ஆகும்.

இது பற்றி இரண்டு தடவைக்கு மேல் பத்திரிகையில் பிரஸ்தாபிக்கப்பட்டிருந்தது. முதல் முறை பிரசுரிக்கப்பட்ட பின்னரும் கூட, அந்த விவசாயிகளின் குறைபாடுகள் நீக்கப்பட்டதாகத் தெரியவில்லை. 13.12.2003 அன்றைய 'உதயன்' பத்திரிகையில் புத்தூரைச் சேர்ந்த விவசாயி ஒருவா விவசாயிகள் பற்றி மீண்டும் ஒரு கடிதத்தை எழுதி இருந்தார்.

அந்தக் கடித விடயத்தின் கருப்பொருள் விவசாயிகளின் விவசாயக் கடன் பற்றியது ஆகும். இவ்விடயத்தில், சம்பந்தப்பட்ட ப.நோ.கூட்டுறவுச்சங்கம் இவ்விடயம் பற்றி எதுவித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. இதற்கு முன்னரும் சி.கணபதிப்பிள்ளை என்பவர் இது பற்றி கருத்து தெரிவித்திருந்தார். கடன் முற்றாகச் செலுத்தியவர்கள் கூட, சம்பந்தப்பட்ட ப.நோ.கூட்டுறவுச்சங்கத்தின் அக்கறை இன்மையால் பெரிதும் பாதிக்கப்பட்டனர். இதில் இன்றும் அதிசயம் என்னவென்றால், கடந்த 25 வருடங்களாக விவசாயிகள் கடன் எடுக்க முடியாது இருப்பதே ஆகும்.

இந்த அதிசயம். யாழ்.குடாநாட்டிற்கு மாத்திரம்தான் பொருந்தும் ஒன்றாகக் காணப்படுகிறது. கூட்டுறவாளர்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் இப்படிச் செய்வார்களாயின் நாங்கள் தற்பொழுது முன்னிலைப்படுத்தி இருக்கும் தமிழர்கள் பிரச்சினை இன்றும் தீர்க்கப்படாமல் இருப்பதற்கு, நாம் எம் தவக்குறைவென்று கூறுவதல்லாமல் வேறு என்ன? இத்தகைய ப.நோ. கூட்டுறவுச் சங்கங்களுக்கு நாங்கள் தான் கிளைக் குழுக்கள் மூலம் பொதுச்சபைக்கு பிரதிநிதிகளை அனுப்பி பணிப்பாளர்களைத் தெரிவுசெய்கிறோம். அவர்கள் தான் கூட்டுறவுத் திணைக்களத்தின் அனுசரணையுடன் சங்கத்திற்கு பணிப்பாளர்களைக் தெரிகின்றனர். இந்த விதத்தில், கூட்டுறவு நிர்வாகம் செயற்படுகின்றது.

இங்கே சம்பந்தப்பட்ட பிரச்சினை என்னவென்றால் குறித்த ப.நோ. கூட்டுறவுச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் அதுவும், 4வருடத்திற்கு முன்னர் இந்த விவசாயக் கடன் பிரச்சினை ஆலோசிக்கப்பட்டு கடன் பணத்தை மட்டும் வட்டியின்றிச் செலுத்தி அதனை அழிக்க வேண்டும் என்றும்-

சம்பந்தப்பட்ட அதிகாரியுடன் சங்கம் தொடர்புகொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் ஏகமனதாக தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டிருந்தது. ஆனால், இன்றுவரை இச்சங்கம் ஒன்றையும் செய்யவில்லை. இதனால், அப்பகுதி விவசாயிகள் பெரிதும் பாதிப்பிற்குள்ளாகியுள்ளனர்.

இதற்கு தலைவர் பணிப்பாளர் சபை, பொது முகாமையாளர் மற்றும் இதனோடு தொடர்புடைய கூட்டுறவுத் திணைக்களம் ஆகியன பதில் சொல்ல கடமைப்பட்டுள்ளன. ஏழை மக்களாகிய விவசாயிகள் இவ்வளவு கஷ்டமான நிலைக்கு தள்ளப்பட்டு கடன் பெறுவதை இந்த நடவடிக்கை தடுத்துள்ளது. இது ஒரு பெரிய மனித உரிமை மீறல் போல தோன்றுகிறது. இதற்கு சம்பந்தப்பட்ட சங்கம், தான் பதில் சொல்லி ஆக வேண்டும்.

வருடாந்த கூட்டங்களின் அறிக்கைகள் கூட்டுறவுத் திணைக்களத்திற்கும் அனுப்பப்படுவது வழக்கம். இது சம்பந்தமாக, கூட்டுறவுத்திணைகளம் இந்த நான்கு வருடங்களும் பரிசுத்தமான மௌனத்தை கடைப்பிடித்திருப்பதாகத் தெரிகிறது. இதே போன்ற நிலை யாழ்ப்பாணத்தில் பொதுமக்கள் தங்கள் கடமையின் நிமித்தம் செல்லும் பொது இடங்களில் எல்லாம் நீண்டு கொண்டே போகின்றன. மேலும இந்தக் கூட்ட அறிக்கைகளை எழுதுவதற்கும் செயற்படுத்துவதற்குமாக, சங்கத்திற்கு செயலாளர்கள் நியமிக்கப்படுகின்றனர். சம்பந்தப்பட்ட செயலாளர் பணிப்பாளர், சபைக்கோ அல்லது வேறு தனது உயர் அதிகாரிகளுக்கோ இதனைக் கவனத்துக்குகொண்டு வந்தாரா? என்பதும், இது சம்பந்தாக பணிப்பாளர் சபை இந்த நான்கு வருடங்களாக என்ன செய்தது என்பதையும் கூட்டுறவாளர்கள் அறியக் கடமைப்பட்டவர்களாகின்றனர்.

இது அச்சுவேலி சங்கத்திற்கு மாத்திரம் உரியது என்றல்ல. யாழ். மாவட்டத்தில் உள்ள 23 சங்கங்களுக்கும் இது பொருந்துவதாக அமையக்கூடும். எல்லாவற்றிலும் மேலாக கூட்டுறவுச் சங்கங்களை மேற்பார்வை செய்யும் கூட்டுறவுத் திணைக்களம் இவ்விடயங்களில் மிகவும் வலுக்குறைந்த நடவடிக்கையினை மேற்கொள்வதாலும், சங்கங்கள் மேற்பார்வையை இறுக்கமாகச் செய்யாது கடமைகளை புறக்கணித்து செயற்படுவதனாலும் இது போன்ற பாரிய குறைபாடுகள் இடம்பெறுகின்றன எனக் கருதவேண்டி உள்ளது. அக்கடிதத்தில் இக்கடிதம் பற்றிய விடயம் திணைக்களத்துக்குத் தெரியும் என தெரிவிக்கப்பட்டிருந்தது.

இவ்விடயத்தில் கூட்டுறவுத் திணைக்களம் சரியான நடவடிக்கை எடுத்து சம்பந்தப்பட்டவர்கள் மேல் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படாவிடின் அல்லது பணிப்புரை வழங்கப்படாவிடின் பத்திரிகையில் வந்து கொண்டே இருக்கும். விவசாயிகளும் மனம் இன்றி தங்கள் கடமைகளைச் செய்யாது விடுவர். இதனால் பொதுமக்கள் ஆகிய நாங்கள் பாதிக்கப்படுவோம். எங்கள் பொருளாதாரம் பாதிக்கப்படும்.

எஸ்.கே.ரி.

## வங்கிகள் ஊடாக சம்பளம்: மோசடியைத் தடுக்க உதவும்

தங்கள் பத்திரிகையில் 2004.01.07ஆம் திகதி வெளியிடப்பட்ட 'அம்பாறை மாவட்டத்தில் ஆசிரியர் கொடுப்பனவில் மோசடி, அதிபர் இடைநிறுத்தப்பட்டு விசாரணை' என்ற செய்தி எமது கவனத்தையீர்த்தது. இத்தகைய செய்திகளை வெளியிடுவதன் மூலம் சமூகத்தினைத் திருத்த உதவிசெய்வதுடன் சமூகமும் விழிப்புடன் இருக்க உதவுகிறீர்கள்.

மேலை நாடுகளில் குறிப்பாக பிரித்தானியா, ஜேர்மனி, கனடா போன்ற நாடுகளில் எத்தகைய ஊதியக் கொடுப்பனவுகளும் வேலை கொள்வோரால் ஊழியர்களின் வங்கிக் கணக்குகளுக்கே நேரடியாக அனுப்பிவைக்கப்படுகின்றன. விசேடமாகப் பிரித்தானியாவிலே வாராந்த ஊதியம் கூட வங்கிக் கணக்குகளுக்கே அனுப்பி வைக்கப்படுகின்றது. இதனால், வங்கிக் கணக்கு உடையோர் வங்கியிடமிருந்து பல்வேறு வசதிகளைப் பெறுவதுடன், இத்தகைய மோசடிகளிலிருந்தும் தப்பிக்கொள்கிறார்கள். எமது நாட்டிலும் இம்முறை செயற்படுத்தப்படுமாயின் ஊழியர்கள் பெரிதும் பயன்பெறவாய்ப்புண்டு.

சி.இளம்பிறைநாதன்
விசேட நிறைவேற்று அதிகாரி
மக்கள் வங்கி.

# கடந்த ஆண்டில் உலகம் முழுவதும் 91 பத்திரிகையாளர்கள் கொல்லப்பட்டனர்

சர்வதேச பத்திரிகைச் சம்மேளனத்தின் அறிக்கையின்படி கடந்த ஆண்டில் உலகம் முழுவதிலும் 91 பத்திரிகையாளர்கள் கொல்லப்பட்டுள ளார்கள்.

ஈராக் யுத்தமே இதற்கு முக்கிய காரணமாக இருந்தது. யுத்தம் மற்றும ஊழல் தொடர்பான விவரங்களைச் சேகரித்த வேளையிலும் பலர் கொல்லப்பட்டார்கள்.

2002ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2003 இல் பத்திரிகையாளர்களின் மரணங்கள் 23 வீதத்தால் அதிகரித்துள்ளன. இந்த மரணங்கள் 25 இற்கும் அதிகமான நாடுகளில் இடம் பெற்றுள்ளன.

பத்திரிகைத் துறையிலும் செய்தி சேகரிப்பிலும் ஏற்படும் மரணங்களில் பெரும்பாலனவை யுத்தம் காரணமாகவே ஏற்படுகின்றன. ஆயினும், திட்டமிட்ட கொலைகள் மற்றும் தவறான இடத்தில் தவறான நேரத்திலிருத்தல் போன்ற காரணங்களாலும் சில மரணங்கள் சம்பவித்துள்ளன.

யுத்தத்தினாலும் செய்தி ஊடகங்கள் தொடர்பான செயற்பாடுகளில் குழப்பம் போன்ற காரணங்களாலும் 2003ஆம் ஆண்டு பத்திரிகைத்துறைக்குத் துக்ககரமான ஆண்டாக அமைந்து விட்டது. ஈராக் யுத்தம் கொலம்பியாவில் குழும்பங்கள் மற்றும் பிலிப்பைன்ஸ் வன்முறைகள் போன்றவற்றில கடந்த ஆண்டில் பல பத்திரிகையாளர்கள் கொல்லப்பட்டார்கள்.

பத்திரிகையாளர்கள் இலக்குவைக்கப்படுவதை பத்திரிகைத்துறை தொடர்பான வட்டாரங்கள் கடுமையாக எச்சரித்துள்ளன. ஈராக்கில் 18 பத்திரிகையாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர். மேலும் இரு பத்திரிகையாளர்கள காணாமற்போயுள்ளனர்.

பஸ்ராவுக்கு அருகில் கடந்த மார்ச் மாதத்தில் நடந்த யுத்தத்தில் அவர்கள் இறந்திருக்கலாம் என்று நம்பப்படுகின்றது. ஈராக்கில் நிகழ்ந்த உறுதிப்படுத்தப்பட்ட ஏழு மரணங்களுக்கு சுதந்திரமான விசாரணைகள் நடத்தப்படவேண்டுமென சர்வதேச பத்திரிகையாளர் சம்மேளனம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

யுத்தம் நடைபெறும் இடங்களில் பத்திரிகையாளர்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்பதையே இச்சம்பவங்கள் எடுத்துக்காட்டுகின்றன.

அரசியல் ஊழல்களை அம்பலப்படுத்த முயற்சிக்கும் பத்திரிகையாளர்கள் இலக்குவைத்துத் தாக்கப்படுகின்றார்கள். கொலம்பியாவில் கடந்த மார்ச் 2003 இல் ஊழல் தொடர்பான அறிக்கைகளை வெளியிட்டுவந்த ஓர் பத்திரிகையாளர் இனம்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டார். பிலிப்பைன் வானொலிச் செய்தியாளர் ஒருவர் கடந்த செப்ரெம்பரில் சுட்டுக் கொல்லப்பட்டார். கடந்த ஆண்டில் கொலம்பியாவில் 7 பத்திரிகையாளர்களும், பிலிப்பைன்ஸில் 3 பத்திரிகையாளர்களும் கொல்லப்பட்டார்கள்.

கடந்த டிசெம்பர் மாதத்தில் போரினால் பாதிக்கப்பட்ட ஆல்ச் (Aceh) மாகாணத்தில் இந்தோனேஷியாவைசேர்ந்த பத்திரிகையாளர் ஒருவர் கொல்லப்பட்டதையடுத்து இனம் தெரியாத கொலைகளுக்குச் சுதந்திரமான சர்வதேச விசாரணைகள் நடத்துவதற்கு ஆதரவளிப்பதன் மூலம் ஊடகவியலாளர்களுக்கு தக்க பாதுகாப்பு அளிக்கும்படி அரசுகளை சர்வதேச பத்திரிகையாளர் சம்மேளனம் தூண்டியுள்ளது.

ஏன் இப்படிப் பத்திரிகையாளர்கள் கொல்லப்படுகின்றார்கள் என்பதற்கு தகுந்த பதில் அளிக்கும்படி அரசுகளை வற்புறுத்தவேண்டும் என்பதற்கு இந்தோனேஷியப் பத்திரிகையாளரின் மரணமே உதாரணமாகும்.

செய்திச் சுதந்திரத்தின் ஆணிவேராக பத்திரிகைத்துறை உள்ளது. ஒவ்வொரு தடவையும் பத்திரிகையாளர்கள் இறக்கும்போதும் தகுந்த விசாரணைகள் நடைபெறுவது உறுதிசெய்யப்பட வேண்டும். நீதியும் ஜனநாயகமும் இதை வலியுறுத்துகின்றன.

பத்திரிகையாளர்களுக்கு மேலதிக பாதுகாப்பும் காப்புறுதியும் வழங்கப்பட வேண்டும் என்பதையே இந்த மரணங்கள் எடுத்துக்காட்டுகின்றன. பத்திரிகையாளர்களை இலக்கு வைப்பதையும் அவர்களது பாதுகாப்பு உதாசீனம் செய்யப்படுவதையும் தடுப்பதற்கு சர்வதேச சட்டங்கள் திருத்தம் செய்யப்பட வேண்டும்.

இவ்வாறு சர்வதேச பத்திரிகையாளர்கள் சம்மேளனம் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

## வழிகாட்டல் கருத்தரங்கு

ஜி.சீ.ஈ சாதாரண தரப் பரீட்சை எழுதிய மாணவர்கள் உயர்தரக் கல்விக்கான பாடங்களைத் தெரிவு செய்வது தொடர்பான வழிகாட்டல் கருத்தரங்கு நாளை திங்கட்கிழமை 9 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை இதனை ஏற்பாடு செய்துள்ளது. ஆர்வமுள்ள அனைத்து மாணவர்களும் இதில் கலந்து கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-150)

### கீரிமலை நகுலேஸ்வரம் உட்பட

# மூன்று இந்து ஆலயங்களின் சூழல் சிரமதானம் மூலம் துப்புரவு

தெல்லிப்பழை,ஜன.11

வலிகாமம் வடக்கு உயர் பாதுகாப்பு வலயப்பகுதிக்குள் உள்ள பழைமை வாய்ந்த மூன்று சைவ ஆலயங்களின் சுற்றுப்புறச் சூழல் பகுதிகள் சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்பட்டுள்ளன.

வலி. வடக்கு பிரதேச சபையினர் கடந்த வாரமும், இவ்வாரமும் இது தொடர்பான பணிகளை மேற்கொண்டனர் எனத்தெரிவிக்கப்பட்டது.

கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயம், மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில், கொல்லன் கலட்டி பிள்ளையார் கோவில என்பனவே சிரமதானம் மூலம் சுத்தம் செய்யப்பட்டுள்ளன.

கீரிமலை நகுலேஸ்வரர் ஆலய தீர்த்தக்கேணி, கிணறு என்பன முழுமையாகச் சுத்தம் செய்யப்பட்டதுடன், அவற்றுள் உள்ள நீர் பாவனைக்கு உகந்ததாக்கப்பட்டுள்ளது.

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில சூழலில் இருந்த பற்றை முற்றாக அகற்றப்பட்டதுடன், எதிர்வரும் தைப்பூ சத்தன்று மேற்படி ஆலயத்தில் அடிக் கல் நடுகை செய்யப்படவுள்ள புதிய அன்னதான மண்டபத்திற்கான இடமும சுத்தம் செய்யப்பட்டது.

கொல்லன் கலட்டிப் பிள்ளையார் ஆலயச் சூழல் சுத்தம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து, அங்கு தற்போது வருடாந்த மகோற்சவம் ஆரம்பமாகி நடைபெற்றுவருகின்றது.

மேற்படி ஆலயங்களுக்கு எமது மக்கள் செல்லத் தடை விதிக்கப்பட்டிருந்த போதிலும், பெரும்பான்மை இனத்தைச்சேர்ந்த மக்கள் நாள் தோறும் பெருமளவில் இங்கு வந்து செல்வதாக உள்ளூராட்சி நிறுவன அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (எ-150)

# வடக்கு முஸ்லிம்களின் அபிலாஷைகள் மாற்று யோசனைகளில் உள்ளடக்கப்படும்

## அமைச்சர் ஹக்கீம் உறுதி

கொழும்பு,ஜன.11

இனப்பிரச்சனைத் தீர்வுக்காக ஸ்ரீலங்கா முஸ்லிம்காங்கிரஸினால் முன்வைக்கப்படும் மாற்று யோசனைகளில் வடமாகாண முஸ்லிம்களின் அரசியல் அபிலாஷைகளும் சரிவர உள்ளடக்கப்பட்டு இடம்பெறச் செய்யப்படும்.

- இவ்வாறு உறுதியளித்துள்ளார் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம்.

வடமாகாண முஸ்லிம் அரசியல்வாதிகள், சமயப்பிரமுகர்கள் மற்றும் புத்திஜீவிகளுடன் நேற்று முன்தினம் இடம்பெற்ற விசேடசந்திப்பின் போதே அமைச்சர் இந்த உறுதி மொழியை வழங்கினார் என அக்கட்சி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்தச் சந்திப்பின்போது வடமாகாணத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் சுமார் 40இற்கும் மேற்பட்ட முஸ்லிம் பிரதிநிதிகள் கலந்துகொண்டு முஸ்லிம் காங்கிரஸ் முன்வைக்கும் மாற்று யோசனைகளில் வடமாகாண முஸ்லிம்களின் அரசியல் எதிர்பார்ப்புகளை பிரதிபலிக்கவேண்டும் எனக் கோரினர் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தயாரித்துள்ள மாற்று யோசனைகள் தொடர்பாக வடமாகாண முஸ்லிம்களின் கருத்துக்களைக் கேட்டறிந்து மாற்று யோசனைகளில் திருத்தங்களை மேற்கொள்வதற்காகவே இச்சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டது.

இதேவேளை, வடக்கு - கிழக்கு முஸ்லிம்களின் நலன்களைக் கருத்திற்கொண்டே முஸ்லிம்காங்கிரஸ் மாற்று யேசனைகளை அமைத்துள்ளதாகவும் வடக்கு - கிழக்கு முஸ்லிம்களின் உச்சக்கட்ட எதிர்பார்ப்புக்களை அடிப்படையாக வைத்தே கட்சி தயாரித்துள்ள மாற்று யேசனைகளுக்கு இறுதிவடிவம் கொடுக்கப்படும் எனவும் அமைச்சர் தெரிவித்ததாக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## புதிய நிர்வாகிகள்

யாழ்ப்பாணம்,ஜன.11

வண்.தென் மேற்கு அறிவொளி சனசமூக நிலையத்தின் புதிய நிர்வாகத் தெரிவு அண்மையில் இடம் பெற்றது. இதன்போது இந்த ஆண்டின புதிய தலைவராக சி.க.தம்பிராசாவும் செயலாளராக சுசுபநாதனும் பொருளாளராக வே.விவேகானந்தனும் தெரிவு செய்யப்பட்டனர். (ஒ-10)


## 14 ஆவது ஆண்டு நினைவலைகள்

தாயின் மடியில்
26 ❀ 09 ❀ 1963



தாயக மடியில்
11 ❀ 01 ❀ 1990

### மேஜர் சோதியா

(மைக்கல்பிள்ளை அமலஉற்பவவசந்தி)
(மகளிர் படையணியின் முதலாவது தளபதி)

தாண்டு போயிருந்த தமிழின உரிமைகளை
தோண்டி எடுக்க துப்பாக்கி ஏந்தியவளே!
மாண்டு மடிந்துபோனதென்ன வெஞ்சமரில்
ஏங்குகிறோம் அப்பா, அம்மா, தம்பியர்கள்
மீண்டும் நீ சோதியாய் எம்முடனே
வாழ்ந்து வர ஈழமதில் நிற்கிறதே உம்புகழ்
மகளிர் படையணியினது ஆரம்பத் தளபதியே!
அமலஉற்பவவசந்தி என பெயர் பெற்றாய் பெரும் பேறாய்.

கரவெட்டி வடக்கு. (27053) (30-14-16) -குடும்பத்தினர்.

## நன்றி நவிலல்

### அமரர் சுவாம்பிள்ளை மைக்கேல்பிள்ளை

கடந்த 08.01.2004 அன்று காலை இறையடி சேர்ந்த எமது அன்புத் தந்தையார் சுவாம்பிள்ளை மைக்கேல்பிள்ளை அவர்களது மறைவுகேட்டு உடன்வந்து உதவியோர்க்கும் இறுதிச்சடங்கின் போது ஆழ்ந்த கவலையுடன் கலந்துகொண்டோருக்கும் கண்ணீர் அஞ்சலி பிரசுரங்கள் வெளியிட்டோர், அன்னார் வைத்தியசாலையில் இருந்தவேளை இறுதிவரை பாடுபட்ட வைத்தியர்கள், தாதிமார், உத்தியோகத்தர்கள், ஆபத்து வேளையில் இரத்ததானம் வழங்கிய அன்பு உள்ளங்களுக்கும், உடனிருந்து உதவியோர்க்கும், இறுதிச்சடங்கில் மலர்வளையம் வைத்து அஞ்சலிசெலுத்தி யோர்களுக்கும், மலர்மாலைகள் அணிவித்தோருக்கும் மரணச் செய்தி கேட்டு தபால், தந்தி, தொலைபேசி மூலம் துயர்பகிர்ந்து கொண்டோருக்கும் மற்றும் பல வழிகளிலும் பேருதவி புரிந்த தமிழீழ விடுதலைப் புலிகளின் வடமராட்சி மற்றும் யாழ். மாவட்ட அரசியல் துறையினர், சோதியா படையணி போராளிகள் மற்றும் சிறப்பாக தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடத்திற்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

கரவெட்டி வடக்கு,
கரவெட்டி. (27054) (30-14-16)

தகவல்:
- குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 22-12-1949 உதிர்வு 23-12-2002

### சபாபதி சண்முகநாதன் (படையப்பா)

திதி : 11.01.2004

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அன்பு மனைவி - S.விமலாதேவி,
மகள் -மு.நிருசியா
சகோதரன் - K.கமலேந்திரன்
மைத்துனி -K.புஷ்பராணி
பெறாமக்கள் -K.சுகந்தன், K.நிரோசா, K.மாதுளா,- மருமக்கள்.

ஸ்ரீலக்ஷ்மி தொழிலகம்,
வதிரி, கரவெட்டி.

அல்வாய் வடமேற்கு, அல்வாய். (27049)

## ராஜா யாழ்ப்பாணம்

ராஜ்கிரண், ஸ்ரீ, கருணாஸ் நடித்த
கொஞ்சி பேசலாம் (ரீல்ஸ்)
காட்சிகள்
10.30,2.30,6.30,9.30 (பு.நே.)
(சி 32369) (32)

## லிபேட்டி அச்சுவேலி

சிலம்பரசன், ராஜேந்தர், சர்மி நடித்த
காதல் அழிவதில்லை (ரீல்ஸ்)
தினசரி : 2.00, 7.00.
சனி, ஞாயிறு : 11.00, 2.00,7.00 (பு.நே.)
(C-32371) (32)

## நாகம்ஸ் - சுன்னாகம்



ஷாம், அருண்குமார், குட்டி ராதிகா, செந்தில் நடித்த
இயற்கை (ரீல்ஸ்)
தினசரி காட்சி : 11.00, 3.00. (பு.நே.)
(C-31620)(32)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 7 மணி
15 ஆம் திகதி முதல் கமல், அபிராமி, நெப்போலியன், நாசர் நடித்த
விருமாண்டி (சண்டியர்)



★ இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு

## நிறைஞ்சனாஸ் சங்கானை

விஜய் ஜோதிகா நடித்த
குஷி (ரீல்ஸ்)
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி சனி ஞாயிறு
KEOMA
இரவு 8.45 இற்கு (பு.நே.)
(C-32370)

## தீவுப் பகுதி வியாபாரிகளுக்கான அறிவித்தல்

V.K.கனகலிங்கம் சுருட்டுக்களை மீண்டும் யாழ்ப்பாணத்தில் வியாபாரிகளுக்கு விசேட விலைக் கழிவில் வழங்குகின்றோம்.

தொடர்புகளுக்கு:

| யாழ். கூல்பார் | சிறீராம் |
|---|---|
| இல. 446, ஆஸ்பத்திரி வீதி (ஆஸ்பத்திரி முன்பாக), யாழ்ப்பாணம். | இல. 07, பஸ் நிலையம், யாழ்ப்பாணம். (27052) (30-14-16) |


## மரண அறிவித்தல்

### சுப்பிரமணியம் குமாரசாமி

யாழ்ப்பாணம், பெருமாள் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் கந்தர் மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் குமாரசாமி 07.01.2004 புதன்கிழமை இரவு காலமானார்.

அன்னார் கமலாம்பிகையின் அன்புக் கணவரும் ஜெயந்திமலர் (ஜேர்மனி), ஜெயக்குமார் (ஜேர்மனி), விஸ்ணுகுமார் (ஜேர்மனி), துஸ்யந்தி (யாழ்ப்பாணம்), செந்தில்குமார் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் லோகேஸ்வரன் (ஜேர்மனி), கலைச்செல்வி (ஜேர்மனி), துளசினி (ஜேர்மனி), தயாபரன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் பிரசாத், பிரவீனன், விதுஷா, அபிஷேக் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற இரத்தினசபாபதி மற்றும் பாலாம்பிகை ஆகியோரின் அன்புச சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.01.2004) ஞாயிற்றுக் கிழமை பி.ப. 3 மணியளவில் நவாலியில் உள்ள இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நவாலி ஆரியம்பிட்டி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நாச்சிமார் கோயில் வீதி,
நவாலி வடக்கு,
மானிப்பாய். (27055) (14-16)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
ச.கணநாதன் (மைத்துனர்),
-கு.பத்மநாதன் (சகலன்).

# ஜப்பானிலிருந்து இலங்கைக்கு

வாகனங்களும், இயந்திரங்களும் மற்றும் உதிரிப்பாகங்களும்
இறக்குமதி செய்வதில் முன்னணி வகிக்கும்

# அகியோ கொபயாஷி லங்கா


## பிரைவட் லிமிடட் வினால்

ஜப்பானில் உள்ள தலை முகாமிலிருந்து
இறக்குமதி செய்யப்பட்ட ஜெனரேடர், டிரக் வண்டிகள்
வேன்கள் உற்பட அனைத்து வாகனங்ளும் மற்றும்

**விஷேட பரீட்சைக்கு உற்படுத்தப்பட்டு**

இறக்குமதி செய்யப்பட்ட அனைத்து
வாகன என்ஜின்களும்

## சிக்கனமான விலையில்



**AXEL**
**DIFERENCEL**
**TEN-WHEEL**
**CABIN**
**4 TON CABIN**

War-Ads: 071- 22 99999

C240
C190
4BC1
4BD1
4BC2
4HF1
4HG1
6D10
6D14
6D15
6D16
6D22
8DC9

4D30
4D31T
4D33
4D35
4D36
8PC1
8PD1
10PC1
10PD1
12PC1
12PD1
ED33
FD35

FD42
FD46
2C
3C
2L
3L
B
1B
2B
3D
EF350
EF550
EF750

FE6
FD6
1KZ
R2
RF
RF TURBO
RE8
RF8
RE10
RF10

- *Heavy Machinery Equipments*
- *Earth moving and heavy vehicles*
- *Government Constructors*
- *Commission Agents*

AKIYO KOBAYASHI

# AKIYO KOBAYASHI LANKA

## (PRIVATE) LIMITED

பிரதான அலுவலகம் இல: 105, சிலாபம் வீதி
☎: (037)-2291182 Fax: 0094-37-2291546 ஹெட்டிபொல
E-mail: akiyokl@idmku.ccom.lk

JAPAN OFFICE: 1370, Kosugue Narita Chiba, Japan.
Tel: 0476-227772 Fax: 0081-476-227773
E-mail: naritore@hat.hi-ho.ne.jp

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

Sony(பாவித்த) T.V.கள், 20", 21", 2030, 2032, 2060, 2192-G21 என பன மலிவுவிலையில் விற்பனைகதுண்டு. தொடர்பு: R.மகேஸ்வரன் (சிறுவர் பூங்கா எதிரில்), K.K.S.வீதி, மல்லாகம். (26872)

1சிறீ தொடரிலக்கமுடைய மொறிஸ் மைனர் 1000 விற்பனைக்குண்டு. தொடர்பு: 0776199424. (26996)

தரமான புதியமொடல் Newsmate, Yamaha, Y.C.L.S. விற்பனைக்குண்டு. சனி, ஞாயிறு முழுநாளும் மற்றும் 5.00 மணிக்கு பிற்பாடும் பார்வையிடலாம். தொடர்பு: N.பத்மதேவா, சுதுமலை சந்தி, மானிப்பாய்.
T.P.: 0212223406. (27010)

## காணி விற்பனைக்கு

கஸ்தூரியார் வீதியில் ஒருபரப்பு வீடும் கண்டி வீதி, யாழ்ப்பாணம் (பெந்தேகொஸ்தே சபைக்கு பக்கத்தில்) கச்சேரியடி என்னும் இடத்தில் ¾பரப்பு காணியும் விற்பனைக்குண்டு. தொடர்பு: இல.36, பாரதி வீதி, யாழ்ப்பாணம்.T.P.:3375. (27009)

## நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

சுத்தமான Pedigreed, Doberman, Pincher, Great Dane நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: க.தனபாலசிங்கம் (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (27024)

## இறைச்சிக்கோழி விற்பனை

Prima, Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் சுகாதார முறைப்படி உடன் சுத்தஞ்செய்து தினமும் பெற்றுக்கொள்ளலாம் (Electronic நிறுவை) நல்லூர் வீடியோ சென்ரர் வளவு, இல.19, முருகேசர் ஒழுங்கை, ,முத்திரைச் சந்தையடி, நல்லூர். (26989)

## கல்பேட்ஸ விற்பனைக்கு

எம்மிடம் கல்பேட்ஸ் விற்பனைக்கு உண்டு. மொத்தமாகப் பெற்றுக் கொளளலாம். தொடர்புகளுக்கு: 0776122454. (27020)

## கோழிக்குஞ்சு விற்பனைக்கு

தரமான அதிவிசேட Prima பேடுக்குஞ்சுகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: க.தனபாலசிங்கம் (நல்லூா வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர். (27023)

## கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான Prima, Broiler குஞ்சுகள், அதிவிசேட Prima பேட்டுக்குஞ்சுகள் 19.01.2004 பிற்பகல் விநியோகிககப்படும். முன்கூட்டியே பதிவுசெய்யவும். பருத்தித்துறைக் கிளையிலும் பெற்றுக்கொள்ளலாம். (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசா ஒழுங்கை, முத்திரைச்சந்தையடி, நல்லூர். (26990)

பகிரா இனப் புறொயிலர் குஞ்சுகள 14.01.2004 மாலை விநியோகிக்கப்படும். பதிவுகளை முன்கூட்டியே பெற்றுக் கொள்ளவும். தொடர்பு: ராஜீஸ், ஆனைக்கோட்டை சந்தி. T.P.:222 3529, 222 2867. (27008)

## வீடு விற்பனைக்கு

கல்வளை வீதி, சண்டிலிப்பாயில் உள்ள 4½ பரப்புக் காணியுடன் கூடிய சகல வசதிகளையுமுடைய பெரியவீடு உடன் விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு: S.அச்சலிங்கம், கல்வளை வீதி, சண்டிலிப்பாய். (27107)

மயிலுலேன் (பேக்கரிஒழுங்கை), ஆறுகால்மடம், ஆனைக்கோட்டையில் நடுத்தர வீடு, நன்னீர்க்கிணற்றுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: திருமதி காயத்திரி மயில்வாகனம், மயிலுலேன், ஆறுகால்மடம்.(27026)

## மணமகன் தேவை

1980, B.Sc.(மாணவி), R.C. அழகிய மணமகளுக்கு உயர் உத்தியோக மணமகன் தேவை. சீதனம் உண்டு. உள்ளூர், வெளியூர் மணமக்களுக்கு தொடர்புகொள்க. துரைவிமலா, இலகு திருமணசேவை, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம். (26785)

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம், வயது 29, இத்தாலி P.R. உள்ள செவ்வாய்க்குற்றமுள்ள மணமகனுக்கும், அரச உத்தியோகம், வயது27, திருவாதிரை, தனியார்துறை (வயது 28), திருவாதிரை மணமகன்களுக்கும் மணமகள் தேவை. ஜாதகம், புகைப் படத்துடன் தொடர்புகொள்க. "புதிய பாலம்",த.பெ.இல.10, வவுனியா. (26545)

## திருமண சேவை

1973, பூரட்டாதி, செவ்வாயற்ற கிரகபாவம் குறைந்த, கௌரவ குடும்பம் அரச உத்தியோகத்தருக்கு அழகான மணப்பெண் தேவை. உள்ளூர், வெளியூர் மணமக்களுக்கும தொடர்பு கொள்க: துரைவிமலா, இலகு திருமணசேவை, நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம். (26870)

1968 ஆம் ஆண்டு பிறந்த, செவ்வாய்க் குற்றமுள்ள MBBS மணமகனுக்கு படித்த, அழகிய மணமகள் தேவை. உடன் தொடர்புகொள்ளவும். துர்க்கா திருமண சேவை, 101/1, ஓட்டுமடம் வீதி, சிவ்லிங்கப்புளியடி (K.K.S. வீதி), யாழ்ப்பாணம். (பதிவுக்கட்டணம் இலவசம்). (27022)

298, கோயில் வீதி, நல்லூரில் இயங்கிய கமலக்கண்ணன் திருமண சேவை, 361, கோயில் வீதி, நல்லூரில் இயங்குமென பழைய, புதியவர்களுக்கு அறியத்தருகின்றோம். (26953)

## ஆங்கில வகுப்புகள்

பல்கலைக்கழக, ஆண்டு 6-12 மாணவர்களுக்கு ஆங்கில வகுப்புகள திங்கட்கிழமை (12.01.2004) ஆரம்பம். வீடுகளுக்கு வருகை தந்தும் கற்பிக்கப்படும். தொடர்புகளுக்கு: திரு.க.நாகேந்திரம்,34/4, (புதியது ) 82/24), செட்டித்தெரு, நல்லூர், யாழ்ப்பாணம். (27029)

மிகவும் இலகுவான முறையில் ஆங்கிலம் அடிப்படையிலிருந்து இலக்கணத்துடன் கற்பிக்கப்படும். மற்றும் 2004ஆம் ஆண்டு G.C.E O/L English வகுப்புகள் வீடுகளுக்கு வந்தும் கற்பிக்கமுடியும். தொடர்பு: பார்த்தீபன், இல.199/5, கில்னர் லேன், கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (27037)

## தவறிவிட்டது

தை 3ஆம் திகதி இராமநாதன் என பெயரிடப்பட்ட 3V.D.O.கொப்பி கைக்கடங்கிய தொலைபேசியின் சாஜருடன் புடைவைகளும் சிலபெறுமதியான பொருள்களும் அடங்கிய கறுப்பு Traveling Bag முகமாலை சோதனைச்சாவடியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள்: S.ராஜா, "சரஸ்தன்", உடுவில் வீதி, மானிப்பாய் என்ற விலாசத்திற்கு அறியத்தரவும். T.P.: 5412. சன்மானம் வழங்கப்படும். (26999)

எனது கையடக்கத் தொலைபேசி நொக்கியா 3310 (0776007712) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கந்தர் மடத்திலுள்ள 178, பழைய அங்கர் பார்மஸியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (27035)

## சுயதொழில் விருத்திக்கு உபகரணங்கள் அன்பளிப்பு

வலிகாமம் மேற்கு, சங்கானை பிரதேச செயலர்பிரிவில் சமுர்த்திப் பயனாளிகளுக்கு சுயமுயற்சியில் ஈடுபடுவதற்கென பொருள்கள் வழங்கப் பட்டுள்ளன.

வட்டுக்கோட்டை சமுாத்தி வங்கியின் முகாமையாளர் திருமதி ச.கருணாநிதி தலைமையில் நடைபெற்ற இந்த வைபவத்தில் பத்து பயனாளிகளுக்கு வலி. மேற்கு பிரதேச செயலர், சுயமுயற்சிக்கான பொருள்களை வழங்கினார்.

நடமாடும் வியாபாரத்திற்கு ஆறு சைக்கிள்களும், பெட்டிக்கடை அமைபதற்கு நிறுத்தல் கருவி, தளபாடங்களும் வழங்கப்பட்டுள்ளன. (எ-161)

## ஆசிரியர் கருத்தரங்கு

தென்மராட்சி,ஜன.11

தென்மராட்சிக் கல்விவலயப் பாடசாலைகளில் தரம் 10,11 ஆகிய வகுப்புகளில் மனைப்பொருளியல் பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான பாடத்திட்டமும், செயல் திட்டமும் தொடர்பான செயலமர்வு நாளை காலை 8.30மணிக்கு மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. (எ-117)

## பாம்பினால் கடியுண்ட மூவர் ஆஸ்பத்திரியில்

தென்மராட்சிப் பிரதேசத்தில் வெவ்வேறு இடங்களில் கடந்த வியாழன் அன்று பாம்பினால் கடியுண்ட மூவர் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

கொடிகாமம், பாலாவி வடக்கைச சேர்ந்த சிவபாதம் தீபன்ராஜ் (வயது 18), மிருசுவில் உசனைச் சேர்ந்த பஞ்சாட்சரம் அனித்தா (வயது 11), கொடிகாமம் கச்சாய் வீதியைச் சேர்ந்த செல்வநாயகம் கோகுலநாயகி (வயது 42) ஆகியோரே பாம்பினால் கடியுண்டவர்களாவர். (எ-1117)

## அப்பள வேலைக்கு ஆள் தேவை

அப்பள வேலைகள் செய்வதற்கு ஆண், பெண் வேலையாள்கள் உடனே தேவை.
1 கிலோவுக்கு கூலி 26/=
(பக்கெற் 2/=)
தொடர்பு:
R.மகேஸ்வரன்,
கே.கே.எஸ். வீதி (சிறுவர் பூங்கா முன்பாக), மல்லாகம்.
(27030) (21-19-18-34)

## பெண் காசாளர் தேவை

புடைவை விற்பனை நிலையத்துக்கு பெண் காசாளர் தேவை. திருநெல்வேலிச் சுற்றாடலில் வசிப்பவர் விரும்பத்தக்கது. நாளை(12.01.2004) திங்கட்கிழமை காலை 10 மணிக்கு நேரில்வரவும்.

இல.169,
சோ பொன். இராமநாதன்வீதி,
பல்கலைக்கழகச் சந்தி,
திருநெல்வேலி.
(10-18-21-34) (C/32711)

## காணி விற்பனைக்கு

3ஆம் குறுக்குத் தெரு, அடைக்கல மாதா கோவில் மேற்குப் பக்கத்தில் ஆஸ்பத்திரி வீதிக்கு அருகில் கடை, வீடு கட்டக்கூடிய ஒரு பரப்புக் காணி சுற்றுமதிலுடன் (யாழ். வேம்படிமகளிர் கல்லூரி, யாழ். மத்திய கல்லூரிக்கு அண்டிய பகுதியில்) விற்பனைக்குண்டு.
தொடர்பு: K.பாலசிங்கம்,
இல.9, மூன்றாம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.
*ஞாயிற்றுக்கிழமைகளில் பி.ப. 2.00 மணி முதல் 6 மணி வரை. கிழமை நாள்களில்* க.பொன்னம்பலம், 77, வேம்படி வீதி,
யாழ்ப்பாணம்.
(21-14-19) (26995)

## வேலையாட்கள் - தேவை

**கோழிப்பண்ணை வேலைக்கும், முட்டை பறிப்பதற்கும், ஆட்கள் தேவை உணவும், நல்ல சம்பளமும், ஊக்குவிப்புப் பணமும் தரப்படும். முன்பு வந்தவர்களும் விண்ணப்பிக்கலாம்.**

தனபாலசிங்கம் (நல்லூர், விடியோ சென்ரர் வளவு)
19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தியடி,
நல்லூர்.

## வீடு விற்பனைக்கு

*திருநெல்வேலியில் முத்துத்தம்பி பாடசாலைக்குச் சமீபமாக கலாசாலை வீதிக்கு அருகிலுள்ள இரண்டு பரப்புக்காணியில் எல்லா வசதிகளும் கொண்ட நான்கு அறைகள் உள்ள வீடு விற்பனைக்குண்டு. தரகர்கள் தேவையில்லை.*

தொடர்புகளுக்கு :- திரு.நற்குணசிங்கம்
61, இராமலிங்கம் வீதி, முடமாவடி.
அல்லது
திரு. விஜயரத்தினம்,
11, 6 ஆவது ஒழுங்கை,
பலாலி வீதி, கந்தர்மடம்.
தொ. பேசி: 077-6110137
27019)(35)

## பயிலுநர் தேவை

தொழில் பேட்டைக்கு ஆள்கள் தேவை.
தொடர்பு கொள்ள வேண்டிய விலாசம்:
**K.V.S. Hardwares**
123, Stanley Road, Jaffna.
(சி-32655) (26-21-19-16)

## வரணியில் கணனிக் கற்கைகள்
# புதிய பிரிவுகள் - 2004

※ Diploma in Computer Studies
※ Diploma in MS Office XP+4

கற்கை நெறிகளுக்கான புதிய பிரிவு அநேகரின் வேண்டுகோளுக்கமைய
**16-01-2004இல் ஆரம்பமாகிறது.**
ஆர்வமுள்ளோர் தவறாது இணைந்து கொள்க.
*குறிப்பு:-* விசேட கட்டண சலுகைகள் வழங்கப்படும்.
**A2Z Com Com**
**வரணி.**
10-01-2004 (27028) (26-21-19-18)

## யாழ்ப்பாண ஐக்கிய வியாபார சங்கம்
# அறிவித்தல்

யாழ்ப்பாண ஐக்கிய வியாபார சங்கத்தின் பங்குதாரர்களின் விசேட பொதுக்கூட்டம் ஒன்று 2004ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 07 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும். கொம்பனியை மீள இயங்கப்பண்ணுவதற்கும் சில முக்கிய விடயங்களைப் பற்றியும் தீர்மானங்கள் எடுக்கப்படும்.

பங்குதாரர்களுக்கு தனிக்கடிதங்கள் பதிவுசெய்யப்பட்ட விலாசங்களுக்கு அனுப்பப்படுகின்றன. விலாசங்களில் மாற்றங்கள் இருந்தால் எனக்கு தயவுசெய்து அறிவிக்கவும்.

கலாநிதி வி.யோகநாதன்,
முன்னாள் தலைவர்,
ஐக்கிய வியாபாரச் சங்கம்,
கூட்டணி அமைப்பாளர், யாழ்ப்பாணம்.
(27033)
(34-18-19-21)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

| பிறப்பு | | இறப்பு |
|---|---|---|
| 24 | | 12 |
| - | | - |
| 02 |  | 12 |
| - | | - |
| 1948 | | 2003 |

அமரர் **சின்னத்துரை பரமநாதன்**
(உரிமையாளர், பவிராஜ் பார்மஸி, இணுவில்)

*மனிதரில் மணிக்கமாய் மாண்புடன் திகழ்ந்தீர்*
*புனிதராய் வாழ்ந்து புண்ணியர் கழல் சேர்ந்தீர்*
*இனிய உமது முகத்தை எப்போது நாம் காண்போம்?*
*கனிவான பேச்சு எம் காதுகளிலே கேட்கிறதையா!*
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

இன்று (11-01-2004) ஞாயிற்றுக்கிழமை முற்பகலில் எமது இல்லத்தில் நடைபெறுகின்ற ஆத்மசாந்திப் பிரார்த்தனை நிகழ்விலும் மற்றும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் பங்குகொள்வதோடு நண்பகல் நிகழ்கின்ற மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கோயில் வாசல், கே.கே. எஸ். வீதி,
இணுவில். (27027) (26-19-18)
**அன்பு மனைவி,**
**மக்கள், சகோதரங்கள்.**

## மரண அறிவித்தல்

### திருமதி சரஸ்வதி கணபதிப்பிள்ளை

மல்லாகம், சோளியாக்கட்டையைச் சேர்ந்தவரும், தற்போது லண்டனில் வசித்து வந்தவருமான திருமதி சரஸ்வதி கணபதிப்பிள்ளை அவர்கள் 09.01.2004 வெள்ளிக்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் இருபாலை பட்டையடியைச் சேர்ந்த காலஞ்சென்ற ஓய்வு பெற்ற ஆசிரியர் வீ.கணபதிப்பிள்ளை அவர்களின் அன்பு மனைவியும், சஸ்டிவரதன் (தென்ஆபிரிக்கா), கெங்காதரன்(லண்டன்), ஜெயந்தி, (மலேசியா), சுகுமாரன் (லண்டன்), வசந்தி(லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் கமலாம்பிகை (தென்ஆபிரிக்கா), பக்தவத்சலா (லண்டன்), இராமகிருஸ்ணன் (மலேசியா), ஜெயவதனி (லண்டன்), விஜயகுமார் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் த.நடராசா (கொழும்பு), த.செல்லத்துரை (கொழும்பு), காலஞ்சென்ற த.குணரத்தினம் (மலேசியா), அன்னலட்சுமி (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் திலகவதி (கொழும்பு), வேதவல்லி(கொழும்பு), காலஞ்சென்ற பொன்னப்பா ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-
செ.சிவபாதசுந்தரம்
(பெறாமகன்).

*சோளியாக்கட்டை,*
*மல்லாகம்.*
(27032)
(35-21-19-18)




கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் நேற்று நடைபெற்ற சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் 79ஆவது பிறந்தநாள் அறநிதிய விழாவில் மாணவி ஒருவருக்கு சிவத்தமிழ்ச்செல்வி அறக்கொடை வழங்குவதை முதலாவது படத்திலும், கிளிநொச்சி அரச அதிபர் தி.இராசநாயகம், மகாதேவ ஆச்சிரம தவத்திரு மகாதேவா கணேசானந்த சுவாமிகள், கல்விக்கழகப் பொறுப்பாளர் வே.இளங்குமரன் ஆகியோர் அமர்ந்திருப்பதை இரண்டாவது படத்திலும் காணலாம். *(படங்கள்: அலுவலகப் படப்பிடிப்பாளர்)*

# கிளிநொச்சியில் மாணவர்கள் பலர் வறுமையால் பாடசாலை செல்வதில்லை

## தங்கம்மா அப்பாக்குட்டி அறநிதிய விழாவில் அரச அதிபர் உரை

யாழ்ப்பாணம்,ஜன.11

கிளிநெச்சி மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளின் மாணவர்கள் பலர் வறுமை காரணமாக பாடசாலை செல்வதில்லை. இதனால் இம் மாணவர்களின் எதிர்காலமும் மோசமாகப் பாதிப்படையவுள்ளது.

- இவ்வாறு தெரிவித்தார் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம்.

சிவத்தமிழ்ச்செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியின் 79 ஆவது பிறந்த நாள் அறநிதிய விழா நேற்றுக் காலை 10.30 மணியளவில் கிளிநொச்சி மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது.

கிளிநொச்சி வலயக்கல்விப் பணிப்பாளர் ப.அரியரத்தினம் தலைமையில நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அரச அதிபர் இதனைத் தெரிவித்தார்.

காலை 10.30 மணிக்கு ஆரம்பமான இந்நிகழ்வில் தமிழீழ தேசியக்கொடியினை சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட கல்விக்கழகப் பொறுப்பாளா வே.இளங்குமரன் ஏற்றிவைத்தார். தொடர்ந்து மங்களவிளக்கினை கிளிநொச்சி அரச அதிபர் ஏற்றினார்.

நிகழ்வில் உரையாற்றிய அரச அதிபர் மேலும் தெரிவித்ததாவது:-

நாளையதலைவர்கள் இன்றைய மாணவர்கள். இது எந்தவிதத்திலும் பொய்ஆகாது. வறுமையான இடங்களில் உள்ள மாணவர்கள் நல்ல திறமையானவர்களாக இருந்தாலும் கூட அவர்களது வறுமைகாரணமாக அவர்களது கல்வித்திறமை வெளியுலகிற்குத் தெரியவராமலேயேபோகின்றது.

கடந்த 20 ஆண்டுகாலமாக ஈழத்தில் நடைபெற்று வரும் யுத்தத்தின் மூலம் எமது மக்கள் அனைவரும் பாதிக்கப்பட்டனர். மாணவர்களின் கல்வி முற்றாகப் பாதிக்கப்பட்டது. எமது கிளிநொச்சி மாவட்டத்தில் 85 வீதத்திற்கு மேலானோர் இடம்பெயர்ந்து பல இன்னல்களை அனுபவிததனர்.

தற்போது சமாதான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இருந்தும், இந்த இடம்பெயர்ந்த மக்களின் பொருளாதார நிலைமைகள் எவையும் மாறவில்லை. அத்துடன், அரசினால் வழங்கப்படும் நிவாரணத்திற்காக எமது மக்கள் கை ஏந்தி நிற்கவேண்டிய நிலைதான் தொடர்கிறது.

அத்துடன், எமது பகுதி மாணவர்களுக்கான போஷாக்கு உணவுகள் வழங்குவதற்கான முக்கிய பொறுப்பு அரசாங்கத்திற்கு இருக்கின்றது. அண்மையில் கிளிநொச்சி மாவட்டத்தில் கணிக்கப்பட்டதன்படி 60 வீதமான மாணவர்கள் பாடசாலை போவதில்லை என தெரியவந்துள்ளது. இதற்கு முககிய காரணம் வறுமையே.

இதனை அடிப்படையாகக் கொண்டு இந்தப் பாடசாலை மாணவர்களுடைய கல்வியை மேம்படுத்தவென கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி சில புலமைப் பரிசில் திட்டத்தினை நடைமுறைப் படுத்தியுள்ளார்.

வறுமையில் வாடும் பகுதிகளுக்கும் அவர் உதவி செய்து வருகின்றார். அவரது பணி எமது மண்ணிலும் குறிப்பாக கிளிநொச்சியில் மேம்பட வேண்டும் - என்றும் அவர் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் சிவத்தமிழ் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி நூறு மாணவர்களுக்கு புலமைப் பரிசில்களை வழங்கினார்.

(ம-6)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,ஜன.11

வதிரி, பூவற்கரைப் பிள்ளையார் ஆலயத்தில் இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 7.30 மணிமுதல் திருவாசக முற்றோதல் நடைபெறும். (ம-10)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜன.11

வடலியடைப்பு பாரந்தனை ஸ்ரீ பூர்ணாபுஷ்கலா சமேத ஸ்ரீ ஹரிஹரபுத்ர ஐயனார் ஆலயத்தில் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 7 மணிமுதல் திருவாசக முற்றோதல் நடைபெறும். (ம-10)

★ ★ ★

தென்மராட்சி,ஜன.11

சாவகச்சேரி கல்வயல் ஹரிஹரபுத்திர ஐயனார் ஆலய மண்டலாபிஷேக பூர்த்தி விழாவும் மகரஜோதிப் பெரு விழாவும் எதிர்வரும் 15ஆம் திகதி நடைபெறுமென ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (ம-117)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜன.11

பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் தேவஸ்தானத்தில் இருந்து வருடா வருடம் புறப்படும் பஜனை ஊர்வலம் இன்று நடைபெறவுள்ளது. இப்பஜனை ஊர்வலம் இன்று காலை 8 மணிக்கு ஆலயத்தில் இருந்துபுறப்பட்டு பொன்னாலை, மாவடி, வட்டுக்கோட்டை வீதியூடாக சித்தன்கேணிப பிள்ளையார் கோவிலைச் சென்றடையும். அங்கு இடம்பெறும் விசேட பூசை, ஆராதனையை அடுத்து அங்கிருந்து புறப்படும் ஊர்வலம் சித்தன் கேணி சுழிபுரம், மூளாய் வீதியூடாக சென்று மீண்டும் மாலை பொன்னாலை வரதராஜப் பெருமாள் தேவஸ்தானத்தைச் சென்றடையும். (ம-15)

★ ★ ★

குருநகர்,ஜன.11

குருநகர் கடற்கரை வீதியில் அமைந்துள்ள புனித செபஸ்தியார் ஆலய வருடாந்த திருவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 5 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. எதிர்வரும் 15ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 5 மணி தொடக்கம் தினமும் வழிபாடுகள் நடைபெறும். 19 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 5 மணிக்கு நற்கருணை ஆராதனையும் -

மறுநாள் 20ஆம் திகதி செவ்வாய்க் கிழமை காலை 7மணிக்கு திருவிழா திருப்பலியும் நடைபெறும். தொடர்ந்து அன்று பிற்பகல் 6 மணிக்கு திருச்சொரூபப் பவனியும் திருச்சொரூப ஆசீரும் இடம்பெறும். (ம-51)

# நடுவர் ஸ்ரீவ் பக்னோர் மீது சௌரவ் கங்குலி குற்றச்சாட்டு

## ஒரு பக்கச் சார்பாக நடக்கிறாராம்

மேற்கிந்தியத் தீவுகளைச் சேர்ந்த நடுவரான ஸ்ரீவ் பக்னோரின் நடுவா பணி மோசமானதாக இருந்தது என இந்திய அணித் தலைவர் சௌரவ் கங்குலி தெரிவித்துள்ளார்.

டெஸ்ட் தொடர் முடிவுற்றபின் ஐ.சி.சிக்கு அனுப்பிய அறிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மேற்படி அறிக்கையின் நடுவர்களின் செயற்பாடு குறித்த பகுதியில், பக்னோரின் செயற்பாடு மிகவும் மோசமானது என கங்குலி குறிப்பிட்டுள்ளார்.

சிட்னியில் நடைபெற்ற 4ஆவது டெஸ்டில் ஜஸ்ரின் லாங்கர், டேமியன் மார்டின் ஆகிய இருவருக்கும் வழங்க வேண்டிய 'எல்.பி.டபிள்யூகளை' பக்னோர் மறுத்தார். இதனால் அவர் மீது இந்திய அணி அதிருப்தியை வெளிப் படுத்தியுள்ளது.

அதேபோல், 'அவுட்' கேட்டு 'அப்பீல்' செய்த பார்த்தீவ் பட்டேலிடம் ஆயிரக் கணக்கான ரசிகர்கள் முன்பு பக்னோர் விரலை நீட்டி எச்சரித்ததையும் இந்திய அணி விட்டுவிடவில்லை.

சிட்னியில் மட்டுமன்றி பிரிஸ்பேன போட்டியிலும் பக்னோரின் செயற்பாடுகள் திருப்தியின்றி இருந்ததாகவும், இந்தியா தெரிவித்துள்ளது. பிரிஸ்பேனில் சச்சினுக்கு அவுட் கொடுத்த விதம் உலகம் முழுவதும் விமர்சனத்துக்குள்ளானது குறிப்பிடத்தக்கது.

# பார்த்தீவ், திராவிட்டுக்கு இயன்ஹீலி அறிவுரை

இந்திய கிரிக்கெட் அணியின் விக்கெட் காப்பாளர்களான பார்த்தீவ் பட்டேல், ராகுல் திராவிட்ஆகியோருக்கு ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் விக்கெட் காப்பாளர் இயன் ஹீலி விக்கெட் காப்பு நுணுக்கங்களைக் கற்பிததுள்ளார்.

விக்கெட்காப்பாளராக அதிக எண்ணிக்கையானோரை ஆட்டமிழக்கச் செய்து உலக சாதனையாளராகத் திகழ்பவர் இயன் ஹீலி. கடந்த வியாழக்கிழமை மெல்போர்னில் இந்திய அணி பயிற்சியில் ஈடுபட்டிருந்த போது மைதானத்திற்கு அவர்வந்து, திராவிட் பட்டேல் இருவருக்கும் சுமார் ஒரு மணித்தியாலம் விக்கெட் காப்பு நுணுக்கங்களைக் கற்பித்தார்.

கால்களின் நகர்வு, குனிதல், பந்தைக் கைப்பற்றும்போது கைகள் இருக்க வேண்டிய நிலை மற்றும் ஏனைய நுணுக்கங்களைக் ஹீலி கற்பித்தார்.

19 வயதான பார்த்தீவ் பட்டேல், டெஸ்ட் தொடரில் விக்கெட் காப்பாளராகக் கடமையாற்றினார்.

இன்று ஆரம்பமாகும் முக்கோண கிரிக்கெட் தொடருக்கான அணியிலும் அவர் இடம்பெற்றுள்ளார். எனினும், ராகுல் திராவிட்டே விக்கெட் காப்பாளராக பணியாற்றுவார் என எதிர் பார்க்கப்படுகிறது.

## கிரிக்கெட்

யாழ்ப்பாணம்,ஜன.11

கொக்குவில் வளர்மதி முன்னேற்றக் கழகமும் சனசமூக நிலையமும் இணைந்து நடத்தும் விக்ரம் ராஜன்-கங்கு ஞாபகார்த்த கிரிக்கெட் சுற்றுப் போட்டிகள் இன்று ஞாயிற்றுக் கிழமை முதல் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகின்றன.

யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கத்தின் அனுசரணையுடன் நடை பெறவுள்ள இச்சுற்றுப் போட்டிகள் யாழ். மாவட்டத்திலுள்ள முன்னணிக் கழகங்களான யாழ். பல்கலைக்கழக அணி, கொக்குவில் சி.சி.சி. விளையாட்டுக் கழக அணி, யங்ஸ்ரார் வி.கழகம் மற்றும் ஜொலிஸ்ரார் வி.கழகம் ஆகிய நான்கு அணிகள் பங்குபற்றுகின்றன.

இன்றைய ஆட்டங்களில் பங்கு பற்றும் அணிகள் விவரம் வருமாறு:-

காலை 8.30 மணிக்குயாழ் பல்கலைக் கழக அணி எதிர் கொக்குவில் கே.ஸி.ஸி.ஸி.வி.க.அணி.

பிற்பகல் 1 மணி - யங்ஸ்ரார் வி.க. அணி எதிர் ஜொலி ஸ்ரார் வி.க. அணி.

(ம-5)

# இந்திய-பாக். கிரிக்கெட் போட்டிகளுக்கு கபில்-இம்ரான் தொடரெனப் பெயரிடுக

## கிரிக்கெட் பயிற்றுநர் கோரிக்கை

இந்தியா-பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் நடைபெறவுள்ள டெஸ்ட் கிரிக்கெட் தொடருக்கு கபில் - இம்ரான் தொடர் எனப் பெயரிட வேண்டும்.

- இவ்வாறு இந்தியாவின் புகழ் பெற்ற கிரிக்கெட் பயிற்றுநரான தேஷ் பிரேம் கோரிக்கை விடுத்துள்ளார். கிரிக்கெட் பயிற்றுநர் பணிக்காக 'துரோணாச்சார்யா' விருது பெற்றவர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைத் தலைவர் ஜக் மோகன்டால் மியாவுக்கு தேஷ் பிரேம் அனுப்பியுள்ள கடிதமொன்றில்,

"இந்தியா - பாகிஸ்தான் அணிகள் நீண்ட காலத்தின் பின்னர் எதிர்வரும் மார்ச்மாதம் கிரிக்கெட உறவுகளை மீள ஆரம்பிக்கவுள்ளன. இந்தியா-பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் நடைபெறவுள்ள போட்டிகளுக்கு 'கபில் - இம்ரான் கிண்ணத் தொடர் என பெயரிடுவது பொருத்தமானது.

"இவ்விருவரும் வாழும் மேதைகளாவர். இந்திய உபகண்டத்தைச் சேர்ந்த இவ்விரு சகலதுறை வீரர்களும் இளைய தலை முறையினருக்கு உந்து சக்தியாக விளங்குகின்றனர். கபில்தேவ் இந்திய கிரிக்கெட் வரலாற்றில் சிறந்த கிரிக்கெட வீரராக விஸ்டன் சஞ்சிகையினால் தெரிவு செய்யப்பட்டுள்ள அதேவேளை, இம்ரான் கான் உலகம் முழுவதும் மதிக்கப்படும் வீரர்களில் ஒருவராக உள்ளார்.

"கபில் தேவ், இம்ரான் கான் வழங்கிய பங்களிப்பை கருத்திற்கொண்டு அவர்களின் பெயர்களில் கூட்டாக கிண்ணம் ஒன்றை அறிமுகம் செய்வது அவர்களை கௌரவிக்கும் ஒரு நடவடிக்கையாக அமையும்" என்று தெரிவித்துள்ளார்.

(ம-5)

# விளையாட்டு

## பூப்பந்தாட்ட சுற்றுப்போட்டி

யாழ்ப்பாணம்,ஜன.11

யாழ். வை.எம்.சி.ஏ.வருடாந்தம் நடத்தும் உள்ளக விளையாட்டுப் போட்டியின் பூப்பந்தாட்டச் சுற்றுப் போட்டிகள் நாளை 12ஆம் திகதி முதல் வை.எம்.சி. ஏ அரங்கில் இடம்பெறவுள்ளன. 12 வயதுப் பிரிவினருக்கான போட்டிகள் நாளை பிற்பகல் 3.30 மணிக்கும், 18வயதுப் பிரிவனருக்கான போடடிகள் 13ஆம் திகதியும்,

14ஆம் திகதி பிற்பகல் 3.30 மணிக்கு ஆண்களுக்கான திறந்த தனிநபர் போட்டிகளும், 16ஆம் திகதி பெண்களுக்கான தனிநபர் போட்டிகளும், 17ஆம்திகதி காலை 9 மணி முதல் ஆண்களுக்கான திறந்த இரட்டையர் போட்டிகள் மற்றும் திறந்த கலப்பு இரட்டையர் ஆட்டங்களும் இடம்பெறவுள்ளன. (ம-5)

## மரண அறிவித்தல்

### திருமதி ஜெயலட்சுமி சுந்தரேஸ்வரகுருக்கள்

வேவில் பிள்ளையார், வல்வெட்டியைப் பிறப்பிடமாகவும் மந்திகை அம்மன் கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஜெயலட்சுமி சுந்தரேஸ்வரகுருக்கள் அவர்கள் சிவபதம் அடைந்தார்.

அன்னார் சிவஸ்ரீ சுந்தரேஸ்வரகுருக்களின் அன்பு மனைவியும், வித்தியாபரன், துளசிகரன் ஆகியோரின் பாசமிகுதாயாரும், சிவகாமியின் மருமகளும் காலஞ்சென்ற திருச்சிற்றம்பலம் ஐயா - நாகபூசனி அம்மாவின் அன்பு மகளும், கமலநாதன் ஐயா (சுவிஸ்), விஜயலட்சுமி, விக்னேஸ்வரக்குருக்கள் (S.D.O.) ஆகியோரின் சகோதரியும் கிருஸ்ணவதனி (சுவிஸ்), மகாலிங்கசிவக்குருக்கள், திலகவதி, சரோஜினிதேவி, ரங்கேஸ்வரன் ஐயா ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

இறுதிக்கிரியைகள் இன்று 11.01.2004 பி.ப. 4 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைகளுக்காக கருகம்பன் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சிவஸ்ரீ வை. சுந்தரேஸ்வரகுருக்கள்
(கணவர்)

*மந்திகை,*
*புலோலி.* (32719) (16-17)

# நான்கு வருடங்களின் பின்னர் மீண்டும் தபால் விநியோகம்

தென்மராட்சி,ஜன.11

நான்கு வருட இடைவெளிக்குப் பின்னர் கடந்த முதலாம் திகதி தொடக்கம் எழுதுமட்டுவாழ் வடக்குப் பகுதி மக்களுக்கு தபால் விநியோகம் இடம்பெற்றுவருகிறது.

பருத்தித்துறையில் இயங்கி வந்த எழுதுமட்டுவாழ் உப அஞ்சல் அலுவலகம் கடந்த 29ஆம் திகதி தொடக்கம் கொடிகாமம் கச்சாய் வீதியில் இயங்குவதையடுத்து எழுதுமட்டுவாழ் வடக்கு பகுதிக்கான தபால் பட்டுவாடா இடம்பெற்றுவருவதாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

இதேவேளை -

தென்மராட்சி கிழக்குப் பகுதியில் தங்கியுள்ள எழுதுமட்டுவாழ் தெற்கு, கிளாலி, முகமாலை, இந்திராபுரம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மககள் தினமும் தமது கடிதங்களை உப அஞ்சல் அலுவலகத்திற்கு வந்து பெற்று வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(ம-117)

# தம்மிகவைக் கொன்ற நபருக்கு விளக்கமறியல்!

கொழும்பு,ஜன.11

பாதாள உலகக் குழுத் தலைவரான தம்மிக அமரசிங்கவைக் கொலை செய்த சந்தேக நபரை எதிர்வரும் 26 திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு நீதிவான் சியான் பிலபிட்டிய நேற்று உத்தரவிட்டார்.

பாதாள உலகக் கோஷ்டியின் தலைவர்களில் ஒருவரான தம்மிக அமரசிங்க நேற்றுமுன்தினம் கொழும்பு புதுக்கடை நீதிமன்ற வளாகத்தில் வைதது் சுட்டுக்கொல்லப்பட்டார்.

இவரைச் சுட்டவர் என்று சந்தேகிககப்படும் நபரை இராணுவ லான்ஸ் கோப்ரல் ஒருவர் பிடித்து பொலீஸாரிடம் ஒப்படைத்திருந்தார். சந்தேக நபர் நேற்று கொழும்பு நீதிவான் முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்டார். அவரை எதிர்வரும் 26 திகதிவரை விளக்கமறியலில் வைக்குமறு நீதிவான் உத்தரவிட்டார்.

சந்தேகநபர் வாக்குமூலத்தின் பிரகாரம் இச்சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் ஐந்து பேரைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று கொழும்பின் குற்றத்தடுப்பு பிரிவின் பணிப்பாளர் சரத் லூகொட தெரிவித்தார்.

இவர்களை கைது செய்வதற்காக விசேட பொலீஸ் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளதுடன், கொலைச் சம்பவத்துடன் தொடர்புடையவர் எனக் கருதப்படும் சந்தேகநபரின் வாக்குமூலத்தின் உண்மைத் தன்மை குறித்து தற்போது ஆராயப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(ம-5)

## கலைக் கற்கை நெறி

யாழ்ப்பாணம்,ஜன.11

யாழ்ப்பாணம் திருமறைக் கலாமன்றத்தின் கவின் கலைகள் பயிலகத்தில் இந்த ஆண்டுக்கான கலைக் கற்கை நெறிகளுக்கு மாணவர்கள் புதிதாக சேர்த்துக் கொள்ளப்படவிருக்கின்றனர்.

பரதம், வாய்ப்பாட்டு, ஒகன், வீணை மிருதங்கம், புல்லாங்குழல், கதகளி, வயலின், சித்திரம், கிற்றார் ஆகிய கலைகளை பயிலவிரும்புவோர் எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களை அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

இதேவேளை -

திருமறைக் கலாமன்றத்தினால் நடத்தப்படும் இலவச நாடகப் பயிற்சி, சிறுவர் கலைக் கூடம் ஆகியவற்றுக்கும் புதியவர்கள் இணைத்து கொள்ளப்பட இருக்கின்றனர்.

(ம-4)

## விபத்தில் சிறுவன் காயம்

வீதியில் சென்ற சைக்கிளுடன் விபத்துக்குள்ளான பஸ், பாதையை விடடு விலகி அருகில் இருந்த மதிலுடன் முட்டி நின்றது. தெய்வாதீனமாக பஸ்ஸில் பயணித்தவர்களுக்கு காயம் ஏதும் ஏற்படவில்லை.

யாழ்பாணம் ஓட்டுமடம் சந்தியில் நேற்றுக்காலை 7.15மணிக்கு இடம்பெற்ற இவ்விபத்தில் சைக்கிளில் சென்றவரான ஓட்டுமடத்தைச் சேர்ந்த ஜெயசிங்கம் அன்ரன் றொசான் (வயது12) என்ற சிறுவனே படுகாயமடைந்தவராவர். பஸ்வண்டியில் பயணம் செய்த பயணிகள் தெய்வாதீனமாகக் காயமின்றி தப்பித்துக் கொண்டனர்.

காரைநகரில் இருந்து காலை 6மணிக்கு முகமாலை நோக்கி புறப்பட்ட வடபிராந்திய போக்குவரத்துச் சேவை, காரைநகர் சாலையைச் சேர்ந்த பஸ்வண்டியே விபத்துக்குள்ளானது.

இதில் பயணம் செய்த சுமார் 65இற்கும் மேற்பட்ட பயணிகள் அவ்விடத்திலேயே இறங்கி தம் பயணத்தை வேறு வாகனங்கள் மூலம் மேற்கொண்டனர்.

படுகாயமடைந்த சிறுவன் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ம-15)

## ஜேர்மனிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்னாண்டோவின் அழைப்பை ஏற்று இலங்கைக்கு வரும் இவர் இலங்கை, ஜேர்மனி நாடுகளுக்கு இடையிலான தூதரக உறவின் 50 வருட நிறைவு தின நிகழ்விலும் கலந்துகொள்வார் என்று தெரிவிக்கப்படுகிறது. (ம-5)

## தமிழாராய்ச்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தவேளையில் -

புளொட் அமைப்பின் ஏற்பாட்டிலான அஞ்சலி நிகழ்வுக்காக ஒலிபெருக்கி சாதனங்களுடன் படையினர் சகிதம் அந்த அமைப்பினர் அங்கு வந்து சேர்ந்தனர்.

புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ்(வரதர் அணி), ஈ.பி.டி.பி. ஆகிய அமைப்புக்களின் பிரதிநிதிகள் வாயில் கறுப்புத் துணி கட்டிய நிலையில் அங்கு அமர்ந்திருந்தனர்.

அவர்கள் 5.30 மணிக்குத் தமது நிகழ்வை ஆரம்பித்தனர். 15 நிமிடத்தில் நிகழ்வை முடித்துவிட்டு அவ்விடத்தில் இருந்து அகன்றனர்.

இந்நிகழ்வின்போது யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழு அதிகாரியும் அங்கு பிரசன்னமாகியிருந்தார்.

(ம-3-8-30-51)

# கட்டுடையில் மத்திய மருந்தகம் அமைத்துத் தருமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஜன.11

2004ஆம் ஆண்டின் துரித அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் கட்டுடையில் மத்திய மருந்தகத்தை அமைத்துத் தருமாறு யாழ். மாவட்ட அரச அதிபருக்கு கடிதம் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

சட்டத்தரணியும் மல்லாகம் நீதிமன்ற பதில் நீதிவானுமாகிய ஆர். வசந்தசேனன் இக்கடிதத்தை அனுப்பி வைத்துள்ளார்.

கட்டுடை, டச்சு வீதியில் மத்திய மருந்தகத்தை அமைப்பதற்காக கடந்த மூன்று வருடங்களுக்கு முன்னர் காணி ஒன்று கொள்வனவு செய்யப்பட்டபோதும் இற்றைவரை மருந்தகம் அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்படவில்லை.

எனவே, இந்த ஆண்டிலாவது மருந்தகத்தை அமைத்துத் தந்து பிரதேச வளர்ச்சிக்கும் அபிவிருத்திக்கும் உதவுங்கள் என்று அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ம-10-185)

# கேணல் கிட்டு நினைவாக தெல்லிப்பழையில் சிரமதானம்

தெல்லிப்பழை,ஜன.11

எதிர்வரும் 16ஆம் திகதி நினைவு கூரப்படவுள்ள கேணல் கிட்டுவின் நினைவுநாளை முன்னிட்டு, தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைச் சூழல் சிரமதான அடிப்படையில் சுத்தம் செய்யப்படவுள்ளது.

கேணல் கிட்டுவின் நினைவு நாளை முன்னிட்டு வலி.வடக்கில் பல செயற்றிட்டங்கள் மேற்கொள்ளவுள்ளன. அதனடிப்படையில் மல்லாகம், துர்க்காபுரம் வர்த்தக சங்க உறுப்பினர்களும், வலி.வடக்கு பிரதேசசபை ஊழியர்களும், தெல்லிப்பழை வைத்தியசாலைச் சூழலை சிரமதான அடிப்படையில் சுத்தம் செய்யவுள்ளனர்.

அதேபோல் எதிர்வரும் 16ஆம் திகதி அளவெட்டி அருணோதயக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ள நினைவு நாள் நிகழ்வில் வலி.வடக்கில் இயங்கிவரும் அனைத்து முன்பள்ளிகளிலும் கற்கும் சிறார்களுக்கு இலவசமாக அப்பியாசக் கொப்பிகள், எழுதுகருவிகள் என்பன வழங்கப்படவுள்ளன.

(ம-150)






## மரண அறிவித்தல்

### இரத்தினவடிவேல் சிவபாக்கியம்

சுன்னாகம், மோட்டியன்கூடலைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினவடிவேல் சிவபாக்கியம் அவர்கள் நேற்று (10.01.2004) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை - செல்லம்மாவின் அருமை மகளும் சின்னத்தம்பி - குட்டிப்பிள்ளையின் அன்பு மருமகளும் சின்னத்தம்பி இரத்தினவடிவேலின் (முன்னாள் இ.போ.ச.சாரதி)அன்பு மனைவியும் காலஞ்சென்ற சபேசன், ஜீவா(ஹொலண்ட்), ஜீவரதி (பிரான்ஸ்), சசிக்குமார்(கண்ணன்), வாசுதேவன் மற்றும் ஜெயந்தினி(தரம் 9,யூனியன் கலலூரி மாணவி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் தயாபரன் (ஹொலண்ட்), கிருஷ்ணகரன் (பிரான்ஸ்) ஆகியோரின் மாமியாரும் தர்சிகா, சசீபன் (ஹொலண்ட்), தனுசா(பிரான்ஸ்) ஆகியோரின் அருமைப் பேர்த்தியும் நவரத்தினம், பேரின்பநாதன், சிவசோதி ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று(11.01.2004)ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி.இரத்தினவடிவேல் (கணவர்)
(முன்னாள் இ.போ.ச.சாரதி)

மோட்டியன்கூடல்,
சுன்னாகம். (32720) (14-17)


**ஆசிரியர் ஒத்துமாறல்**

யாழ். மாவட்டத்தில் இருந்து வன்னி மாவட்டத்திற்கு இடம் மாறிச் செல்ல விரும்பும் ஆசிரியர் ஒத்துமாறின் உடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு : 0777283763
திரு. சி.குகதாசன் (27034) (22-16-17)

**Lingam master - swiss**

சுவிஸ் வாழ் தமிழர்களின் முன்னணி ஆசிரியர்
Deutsch - பெரியவர்களுக்கு
Deutsch - பாடசாலை மாணவர்களுக்கு
தொடர்பு:
062 7974164 - 079 3344733,
4665 Oftringen - swiss. (26642)(36-14-16)

**விக்கி (B.Com.)**

பிரத்தியேக வகுப்புகள்
(வீட்டில் வந்தும் கற்பிக்கப்படும்)
★ A/L 2006 வர்த்தக வகுப்புகள்
★ O/L வர்த்தகமும் நிதியும்
★ 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில
தொடர்புகளுக்கு:
ஞானவைரவர் வீதி,
உரும்பிராய் கிழக்கு.
T.P. No: 077 6218306 (26643) (16-14)

**G.S.M. அன்ரனா விற்பனைக்குண்டு**

G.S.M. 3310 (நீளமானது) - 220/=
Clip மொடல் (எல்லாவற்றிற்கும் போடக்கூடியது) - 220/=
628/A/db - 210/=
கைத்தொலைபேசி சேவிஸ் - 250/=
மேசைத்தொலைபேசி சேவிஸ் - 400/=
மேசைத் தொலைபேசி மீள் மறுசீரமைப்பு - 4,000/=
(மதர் போட், யூனிட் மாற்றுதல்)
மேலதிக விவரங்களுக்கு:
சதீஸ் இலத்திரனியல்
கைதடிச் சந்தி, கைதடி. (27021)

**மூன்றாவது புதிய பிரிவு**

இக்கல்வியாண்டின் ஜனவரி மாதத்திற்கான மூன்றாவது பிரிவு ஏறகனவே அறிவித்ததன் பிரகாரம் 14.01.2004 ஆம் திகதி பகல் 10.00 மணிக்கு ஆரம்பிக்கப்படவுள்ளது.

மாணவர்களே இந்த இறுதிச் சந்தர்ப்பத்தினைப் பயன்படுத்தி உங்கள் அனுமதிக்கு முந்திக் கொள்ளுங்கள்.

இயக்குநர்:
IIS, யாழ்ப்பாணம். (சி-32653)

**O.REX பல் கட்டுமிடம்**

★ பல் கட்டுதல் (சங்குப் பல்)
★ மிதப்பு பற்களுக்கு - கிளிப் போடுதல் (வெளிநாட்டவர்களுக்கும், பிற மாவட்டத்தவர்களுக்கும், மாணவர்களுக்கும் ஏற்ற வகையில் அவர்களே சீர்செய்யக்கூடிய முறையில் கிளிப் செய்து தரப்படும்)
★ உடைந்த பல் ஒட்டுதல் ஆகிய சேவைகள் மேற்கொள்ளப்படுகின்றன.
பரமேஸ்வராச் சந்தி,
திருநெல்வேலி,
(விநாயகர் கோயிலுக்கு முன்பாக மேல்மாடி) (27030) (22-16-17)

**CHEMISTRY**

**A/L - 2006**

NEW SCIENCE CENTRE - யாழ்நகர்
NEW SCIENCE ACADEMY - நெல்லியடி
CHEMISTRY CENTRE - நல்லூர்
PERSONAL CENTRE - சுண்டுக்குளி
ஈசன் - கோண்டாவில்
ஞானோதயா - சாவகச்சேரி (சி-32631)
BY :- அன்பழகன்





இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 11.01.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# சூரியகாந்தி

உதயன்

ஞாயிறு சிறப்பம்சம்


# தலைவர்களுக்கு விளையாட்டு சமாதானத்துக்குச் சீவன்போகிறது


அன்ரன்

மீண்டும் ஒரு தடவை ஏமாற்றம்தான் மிஞ்சுமோ என்ற அச்சம் மனதில் எழுவது தவிர்க்க முடியாததாகி விட்டது.

"பாதுகாப்பு அமைச்சு உட்பட தான் கையேற்ற அமைச்சுக்களைத் தொடர்ந்து தனது பொறுப்பிலேயே வைத்துக்கொண்டு சமாதானப் பேச்சுக்களை முன்னெடுத்துச் செல்லவேண்டும் என்ற நிலைப்பாட்டில் ஜனாதிபதி இன்னும் இருப்பாரேயானால், விடுதலைப் புலிகளுடன் பேசி போர் நிறுத்த உடன்படிக்கையை மீளமைக்க அவர் நடவடிக்கை எடுக்கவேண்டும்" - என்று கடந்த புதன்கிழமை பிரதமர் அறிவித்திருக்கிறார்.

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான போர் நிறுத்த புரிந்துணர்வு உடன்படிக்கையை முன்னெடுத்துச் செல்வது இனி ஜனாதிபதியின் பொறுப்பு என்றும் அவர் கூறிவிட்டார்.





**ரணில் - சந்திரிகா விளையாட்டு**

பிரதமர் அமெரிக்காவில் இருந்த போது ஜனாதிபதி மூன்று அமைச்சுக்களின் பொறுப்புக்களைத் தன்வசம் எடுத்துக் கொண்டார். பதிலுக்கு, ஜனாதிபதி பாகிஸ்தானில் இருந்த போது தனது அரசு புலிகளுடனான உடன்படிக்கையில் இருந்து விலகுகின்றது என்று பிரதமர் அறிவித்தார்.

அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்வது தொடர்பாக ஜனாதிபதியுடன் நடத்திய பேச்சுக்கள் வெற்றி அளிக்காததனாலேயே அரசு இந்த முடிவை எடுத்தது என்பது பிரதமரின் வாதம். ஆனால், அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்வது தொடர்பாக பிரதமருக்கும் தனக்கும் இடையில் பேச்சுக்கள் முறிவடைந்துவிடவில்லை என்றும் உண்மையில் சமரசத் தீர்வு ஒன்றைக் காணமுடியும் என்ற நம்பிக்கை உண்டு என்றும் ஜனாதிபதி இஸ்லாமாபாத்தில் இருந்து தெரிவித்துள்ளார்.

தமிழர்கள் விடயத்தில் 50 ஆண்டுகளாகத் தெற்கு அரசியல் சக்திகள் எதனைச் செய்து கொண்டிருந்தனவோ அதனையே இப்போதும் செய்து கொண்டிருக்கின்றன. வடிவமும் யுக்திகளும் மட்டுமே மாறியுள்ளன. உண்மையில் - அடிப்படையில் - மாற்றங்கள் ஏதுமில்லை.

ஆட்சியில் இருக்கும் கட்சி தமிழர்களுடன் சமாதானம் பேசினால் எதிர்க்கட்சி அதனை எதிர்ப்பது என்பது இந்த நாட்டு அரசியலில் புதியதொன்றல்ல. வரலாறே அதுதான். பண்டா - செல்வா. டட்லி - செல்வா ஒப்பந்தங்களுக்கு நடந்தவைகள் உலகறிந்த விடயம்.

தெற்கு அரசியலில் இந்த நாடகமே தற்போது மீண்டும் அரங்கேறிக் கொண்டிருக்கிறது. அதன் நடிகர்கள் மட்டுமே மாறி இருக்கிறார்கள். அதன் பிரதான பாத்திரங்களை ரணிலும் சந்திரிகாவும் ஏற்றிருக்கிறார்கள்.

முன்னரைப் போன்று எதிர்ப்புக்களைக் காரணங்காட்டி இன்று ஒப்பந்தம் கிழித்தெறியப்படவில்லை. அதற்குப் பதிலாக இரு தரப்புக்களும் சேர்ந்து ஒரு நாடகத்தை நடத்திக் கொண்டிருக்கின்றன. அதிகாரப் போட்டி என்ற நாடகத்தின் மூலம் ஒப்பந்தம் செல்லாக் காசாகிக் கொண்டிருக்கிறது.

புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்ட பின்னர் பி.பி.ஸிக்குப் பேட்டியளித்த சந்திரிகா, உடன்படிக்கை சட்டவிரோதமானது என்றார். ஆனால், அரசு புலிகள் மீதான தடையை நீக்கியபோது அவர் இந்த அரசுக்கு எதிராக நடவடிக்கை எதனையும் எடுக்கவில்லை.

அதேபோன்று, தான் செய்யும் எல்லாவற்றையும் சந்திரிகா ஏற்றுக்கொள்வார் என்றோ அதற்கெல்லாம் ஆதரவாக இருப்பார் என்றோ ரணிலும் எதிர்பார்த்திருக்கமாட்டார்.

இன்றைய நிலை என்றாவது ஒரு நாள் ஏற்படும் என்று அவர் எதிர்பார்த்திருக்கமாட்டார் என்றும் சொல்வதற்கில்லை. எல்லாம் தெரிந்து கொண்டேதான் அவர் புலிகளுடன் சமாதான முயற்சியில் இறங்கினார்.

ஆனால், இப்போது ஜனாதிபதியைக் காரணங்காட்டிக்கொண்டு சமாதான முயற்சியில் இருந்து நழுவி விடுவதற்கு அவர் தயாராகிவிட்டார் போன்றே தோன்றுகின்றது.

நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலான விதத்தில் அரசு செயற்பட்டமையே தான் பாதுகாப்பு அமைச்சைப் பொறுப்பேற்றமைக்குக் காரணம் என்று சந்திரிகா தெரிவித்திருந்தார். ஆனால், சட்டவிரோதமானது என்று அவரே சொன்ன புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டபோதோ, புலிகள் மீதான தடை அகற்றப்பட்டபோதோ பாதுகாப்பு அமைச்சை மீளப்பெற ஜனாதிபதி முயலவில்லை.

அதேபோன்று குரங்குபாஞ்சானில் புலிகள் முகாம் அமைக்கிறார்கள் என்று அவரே கூறிய குற்றச்சாட்டுத் தொடர்பாக, பாதுகாப்பு அமைச்சைப் பொறுப்பேற்ற பின்னர் எந்தவித நடவடிக்கையையும் எடுக்கவில்லை. அப்படி ஒரு விவகாரம் இருப்பது போன்ற பிரதிபலிப்பையே அவர் இப்போது காட்டவில்லை. தங்கள் தங்கள் அரசியல் லாபத்துக்காக எதையாவது செய்வதற்கு ஏதாவது காரணங்களைக் கூறுவது என்ற அரசியல் சித்து விளையாட்டைத்தான் இனப் பிரச்சினைத் தீர்வு விடயத்தில் சந்திரிகா கைக்கொள்கிறார் என்பதையே இது காட்டுகிறது.

இவர்களின் இந்த விளையாட்டுக்கு மத்தியிலும் வழமைக்கு மாறாக அசாத்திய பொறுமையைக் கடைப்பிடித்து இன்னும் சமாதானம் நிலைக்கக் காரணமாக இருப்பதற்காக விடுதலைப் புலிகளுக்கு அவர்கள் இருவருமே உண்மையில் நன்றிகூறக் கடமைப்பட்டவர்கள்.

முழுமையான அதிகாரம் உள்ள தரப்பு எதுவோ அதனுடன் பேச்சு நடத்தத் தயாராக இருக்கின்றோம் என்று புலிகள் தெரிவித்துவிட்டார்கள். அதன் பின்னர் ஒரு மாதத்துக்கும் மேற்பட்ட காலம் ஓடிவிட்டது.


ஆனால், தமது அதிகாரப் போட்டி குறித்து ஒருவர் மீது ஒருவர் குற்றஞ்சாட்டுவதும் ஒருவரின் காலை மற்றவர் வாரிவிடுவதுமான அரசியல் விளையாட்டில் ஈடுபட்டிருக்கிறார்கள் சந்திரிகாவும் ரணிலும்.

பூனைக்கு விளையாட்டு சுண்டெலிக்குச் சீவன் போகிறது என்பதைப் போன்று அவர்களின் விளையாட்டில் சமாதான முயற்சிகள் திக்குத்திசை தெரியாது திணறிப் போயுள்ளன.

புலிகளைக் கையாள்வதற்காக அல்லது மிரட்டுவதற்காகப் பின்னப்பட்ட உலக நாடுகளின் வலைப் பின்னல் இப்பொழுது அவர்களுக்கு எதிராக மாறிவிட்டது. ஆனாலும் அந்த அழுத்தங்களுக்குப் பணிந்து போகப்போவதில்லை என்பதை சந்திரிகா வெளிப்படுத்தி விட்டார்.

அதிகாரப் போட்டியை விரைவில் முடிவுக்குக் கொண்டுவாருங்கள் என்று அமெரிக்காவும் இந்தியாவும் என்னதான் காட்டுக் கத்தல் கத்தினாலும் தமது நாடகத்தை முடித்துக்கொள்ள இரு தலைவர்களும் தயாராக இல்லை. முடித்துக் கொண்டால் விடுதலைப் புலிகளின் இடைக்கால நிர்வாக வரைவுக்குப் பதில் சொல்லியாகவேண்டுமே.

இரு தலைவர்களுமே உண்மையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணவேண்டும் என்று விரும்புகிறார்களா? அல்லது போர் அற்ற ஒரு நிலையைப் பயன்படுத்தி தெற்கில் தமது அரசியலை நடத்திக் கொண்டு போனால் போதும் என்று கருதுகிறார்களா? என்கிற சந்தேகம் தவிர்க்க முடியாததாகிவிட்டது. இன்னொரு போரை இந்த நாடு தாங்காது என்பது சாதாரணமாக எல்லோருக்குமே தெரிந்த விடயம். ஆனால், இதனை அரசியல்வாதிகள் மட்டும் புரிந்துகொள்ளாதது ஏன் என்பதுதான் தெரியவில்லை.



அடேங்கப்பா இதுவுமா கதவு...

# குடாநாட்டை ஆக்கிரமிக்கும் கதவுக் கலாசாரம் .....!

யாழ்ப்பாணத்தவர்கள் எப்போதுமே விடாமுயற்சி உடையவர்கள். இதனாலேயே சில வேளைகளில் ஜப்பானியர்களுடனும் அமெரிக்கர்களுடனும் ஒப்பிடப்படுபவர்கள். நீண்ட போரின் பின்னர் இப்போதும் தமது வாழ்க்கையைக் கட்டியெழுப்பும் விடாப்பிடியான முயற்சியில் அவர்கள் இறங்கிவிட்டார்கள்.

எனக்குத் தெரிந்து 1990களின் பின்னர் யாழ். நகரின் மையப் பகுதி தொடர்ச்சியாகக் களையிழந்து வந்துள்ளது. இப்போது கடந்த 2 வருடங்களில் அது மீண்டும் தனது சோபையைப் பெற்றுள்ளது. நெருக்கடி நிறைந்த இடமாக, நடமாட்டம் கூடிய இடமாக மனதுக்கு மகிழ்ச்சிதரும் வகையில் மாறிவிட்டது.

எந்த நிலைமைகளுக்கும் இலகுவில் இசைவடைந்து வாழப் பழகிவிட்டவர்கள் யாழ். மக்கள். இப்போதும் சமாதானம் பற்றிய நிச்சயமற்ற தன்மைகளுக்கு மத்தியிலும் தமது மீள்கட்டுமானப் பணிகளில் அவர்கள் ஆர்வம் காட்டுகின்றனர். இதில் நல்லதும் கெட்டதும் எனப் பலதும் நடக்கின்றன.

இந்த மீள்கட்டுமானத்தில் சில கண்ணைப் பறிக்கும் (உறுத்தும்) விதத்திலும் அமைந்துள்ளன. சில மாதங்களுக்கு முன்னர் குடாநாட்டு மக்களின் வீட்டு வாசல்களில் பல்வேறு இடங்களிலும் ஒருவித மஞ்சள் பூச்செடிகள் வளர்க்கப்படலாயின. அதற்கென இரும்புக் கம்பிகளிலான ஒரு பந்தல் அமைக்கப்பட்டது. செழிப்பான இலைகளைக் கொண்ட அந்தச் செடிகள் பார்வைக்கு அழகைக் கொடுத்ததுடன் வீட்டுக்காரர்களுக்கும் ஒருவித பெருமையைக் கொடுத்தன.

அது ஒருவித நாகரிகமாக மாறிவிட அநேக வீடுகளின் வாயில்களை அலங்கரிக்க ஆரம்பித்தது. அதன் ஆக்கிரமிப்பு குறைந்துபோக இப்போது மீண்டும் இதே போன்றதொரு நாகரிகம் பரவ ஆரம்பித்துவிட்டது.


இது அநேகமாக தமிழ் சினிமாவின் பாதிப்பில் இருந்து வந்ததாக இருக்கலாம். நீங்கள் நகரில் பிரதான வீதிகளில் செல்லும்போது இதனை அவதானித்திருப்பீர்கள். ஒரு தடவைக்கு இரு தடவைகள் உங்களை உற்றுப் பார்க்க வைத்திருக்கும் அது. நானும் அதற்கு விதிவிலக்கல்லன்.

வளவுகளின் வாயில்களில் பொருத்தப்பட்டுவரும் தற்போதைய கதவுகள் பற்றித்தான் சொல்கிறேன். அழகாக - நேர்த்தியாக - அற்புதமாகவே இவை வடிவமைக்கப்பட்டிருக்கின்றன. அநேகமாக இந்திய சினிமாவில் வரும் பணக்காரர்களின் அரண்மனை (பங்களா) கதவுகளை இவை ஒத்திருக்கின்றன. இடையிடையே கோயில்களின் உள்ளே காணப்படும் வடிவமைப்பைக் கூடப் பார்க்க முடிகிறது. "இப்போதெல்லாம் இந்த வகைக் கதவுகளைத்தான் செய்து தருமாறு மக்கள் விரும்பிக் கேட்கிறார்கள்" என்று சொன்னார் இரும்பு ஒட்டும் தொழில் நிலைய உரிமையாளர் ஒருவர். அவருக்கு இந்தக் கதவுகளால் நல்ல வருமானமும் வருகின்றது.

குடாநாட்டு வாயில்களை ஆக்கிரமிக்க ஆரம்பித்திருக்கும் இந்தக் கதவுகள் உண்மையில் பார்ப்பதற்கு அழகானவைதான். பணக்காரக்களையைக்கூடத் தருகின்றன. ஆனால், ஏற்கனவே நன்றாக இருந்த பலமான கதவுகளை எடுத்துவிட்டு இந்த வகைக கதவுகளைப் பொருத்த என்ன அவசியம் வந்தது என்று ஒரு நெருடல் மனதில் வருவதை ஏனோ என்னால் தடுக்க முடிந்ததில்லை. இதனை வெளியே சொன்னால் சிலவேளைகளில் பொறாமை பிடித்தவன் என்று நினைத்துவிடுவார்களோ என்ற பயம் கூட இருக்கிறது. சில இடங்களில் வீடே இல்லாத வெறும் காணிகளில்கூட இந்தக் கதவு போடப்பட்டுள்ளது. சும்மா சொல்லக் கூடாது. அந்தக் காணிக்கு ஒரு மதிப்பையும் மரியாதையையும் கொடுப்பதே இந்தக்கதவுதான்.

என்ன நான் சொல்வது? உங்களுக்கு அப்படித் தோன்றியதில்லையா?

- கனிமொழி



வீடுதான் பழசு கதவு புதுசு...

# விடுதலையின் விலை:
## அஸாமிய மொழியில் ஓர் அழகிய படைப்பு

இந்தியாவில் ஆங்கிலேயர் ஆட்சி நடைபெற்றகாலம் 1942 ஆம் ஆண்டு காலப்பகுதி. மகாத்மா காந்தியின் அஹிம்சா வழிப்போராட்டம் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. அஸாம மாநிலத்தில் இயங்குகின்ற காங்கிரஸ் கட்சியினர் காந்திஜியின் செய் அல்லது செத்துப்போ (Do & Die) என்னும் போதனையைத் தாரக மந்திரமாய் ஏற்று மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகள் குறித்துக் கலந்துரையாடும் பொருட்டு ரகசியமாகக் கூடுகின்றனர். இவர்களின் தலைவராக இருக்கும் அஹிம்சாவாதி. இவர்களின் ஆலோசனையாகத் தெரிவிக்கப்பட்ட ஆயுதம் ஏற்றி வருகின்ற புகையிரதம் செல்ல இருக்கும் தண்டவாளத்தைப் பெயர்க்கும் நடவடிக்கையை அங்கீகரிக்க மறுக்கிறார். எப்படியோ அதுவன்முறை சார்ந்த செயற்பாடு தான் எனவும். அஹிம்சா வழிப்போராளிகள் அங்ஙனம் தொழிற்படுவது பொருந்தாது எனவும் வாதிடுகிறார். அவர்கள் இவருடன் ஒத்துப்போக மறுக்கிறார்கள். இவர்களின் கருத்தோடு ஒத்துப்போக முடியாது எனக் கூறித்தலைவராகிய இவர் வெளியேறிச் சென்ற பிறகு தங்களின் அந்த நடவடிக்கையை மேற்கொண்டே தீருவது என அவர்கள் முடிவெடுக்கிறார்கள். அதன்படி செயற்படுகிறார்கள்.

திரைப்படம் – குக்ஹல் (GUKHAL)
நெறியாள்கை – ஜக்னூ பருபா
இந்திய பிராந்திய மொழித் திரைப்படம் – அஸாம்

சம்பந்தப்பட்டவர்களைத் தேடிப் பொலீஸார் வலைவிரிக்கிறார்கள். பல சுதந்திரப் போராட்ட உறுப்பினர்கள் (அந்த நடவடிககையில் ஈடுபட்டவர்கள்) கைது செய்யப்படுகிறார்கள். சித்திரவதை செய்யப்படுகிறார்கள். தலைவரும் கைது செய்யப்படலாம் எனக் கருதி அவரைத் தலைமறைவாகி விடுமாறு வெளியிலிருந்த காங்கிரஸ் உறுப்பினர்கள் கேட்டுக் கொள்கிறார்கள். அந்தக் காரியத்துக்கும் தனக்கும் தொடர்பு இல்லை என்பதால் தான் ஏன் அஞ்ச வேண்டும் என்று கேட்கும் அவா இறுதியில் தலைமறைவாகிவிடத் தீர்மானிக்கிறார்.

கைதான உறுப்பினர்களில் ஒருவரைக் கடுமையான சித்திரவதைகளுக்கு உட்படுத்தி அரசு தரப்புச் சாட்சியாக மாறிவிட்ட நிலையில் பல உண்மைகள் வெளியாகின்றன. வெளியேறும் எண்ணத்தோடு இன்னுமொரு தொண்டனோடு சென்று கொண்டிருந்த தலைவரும் தொண்டனும் பொலீஸாரால் கைது செய்யப்படுகிறார்கள். இவர்கள் மீது வழக்குத் தொடரப்படுகிறது. தலைவர் என்கிற வகையில் இவரே அனைத்துத் தொழிற்பாடுகளுக்கும் வழிகாட்டியிருக்கிறார் எனக்குற்றம் சுமத்துகிறார்கள்.

### திரைக் கலை விமர்சனம்

-தரிசனன்

தனது நியாயத்தை இவர் எவ்விதமாக நிருபிக்க முயன்றும். இவரை திட்டமிட்டு வஞ்சகமாகக் குற்றவாளியாக்குகிறது சட்டம். மனிதாபிமானத்தோடு இவர் மீது அபிமானம் கொண்ட சட்டத்தரணி எத்தனையோ முயற்சிகள் மேற்கொண்டும் கூட திட்டமிட்டு உருவாக்கப்பட்ட குற்றச்சாட்டு இவரை ஒரு ராஜத்துரோகி எனத் தீர்பளிக்க வழி செய்கிறது.

ராஜத்துரோக நடவடிக்கைக்கான அதிகபட்ச தண்டனையாகிய மரணதண்டனை விதிக்கப்படுகிறது. குறிக்கப்பட்ட தினத்தின் ஒரு காலைப் பொழுதில் இவருக்கான மரண தண்டனை நிறைவேற்றப்படுகிறது.

ஆங்கிலேயரின் அடிவருடிகளாகி நன்மை பெற முனையும் இந்தியக் கூலிஉத்தியோகத்தர்களின் கீழ்மைத் தனத்தினால் நிரபராதியாகிய ஒரு சாத்விகவாதி. அஹிம்சா வழியில் உறுதியாக வாழும் ஒருவர். அநியாயமாக உயிரிழக்க நேர்ந்த ஓர் உண்மைச் சம்பவத்தினை மையமாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட இந்தப்படைப்பில் நெஞ்சைத் தொடும்விதத்திலான கலைத்துவம் மிகுந்த கட்டடங்கள் மிக அருமையாகப் படமாக்கப்பட்டுள்ளன.

இதில் வருகின்ற எல்லாப் பாத்திரங்களுமே தமது பங்கினை உணர்ந்து அருமையாக நடித்துள்ளனர். உரையாடலின் ஊடாக உணர்த்தப்பட வேண்டியிருந்த பகுதிகள் ஆரம்பத்தில் அதிகமாக இருந்தமையால் இலேசான சலிப்புட்டும் தன்மை தென்பட்டபோதும் ஒட்டுமொத்தமாகப் பார்க்கும் போது மிகவும் சிறந்த படைப்பாய் மிளிர்கிறது இந்தப்படம்.

ஒரு நிரபராதி அநியாயமாகத் தண்டிக்கப்படப் போகிறார் என்பதை உணர்ந்துகொள்ளும் அந்த இளம் சட்டத்தரணி. மரண தண்டனைக்காக அவரை அழைத்துப்போகவந்து. அவரது காலில் விழுந்து கதறி அழும் அந்தச் சிறைக் காவலாளி - அஹிம்சையும் சத்தியமும் தர்மமும் வஞ்சனையாற் தோற்கடிக்கப்பட்டு அநியாயமாக இறக்கப்போகும் தன் கணவனுக்காகக் கதறி அழும் மனைவி. - ஓர் இந்தியனுக்கு எதிராக. ஆங்கில ஆட்சியாளரைத் திருப்திப்படுத்த வேண்டி வஞ்சனைபுரியும் இந்தியர்களுக்கெதிரான மனஉணர்வு தூண்டப் பெற்றும். நிர்ப்பந்தத்துக்கு இரையாகி ஒரு கொடுமையான தீர்ப்பை எழுத வேண்டியிருக்கின்றமைக்காக மன உறுத்தலுக்கும் குழப்பத்துக்கும் உள்ளாகும் வெள்ளைக்கார நீதிபதி என வருகின்றபாத்திரங்கள் அற்புதமாகவும் இயல்பாகவும் தமது உணர்வுகளை வெளிக்காட்டுவது அதிலுள்ள நுட்பமான பாங்கு. ஆர்ப்பாட்டமோ கோஷமோ இல்லாத கலைத்துவம் இவையனைத்தும் படத்தின் மிகச் சிறந்த பண்புகளாக எடுத்துக்கொள்ளப்பட வேண்டியவை.

படத்தின் முடிவில் இடம்பெற்ற உரையாடலின்போது கலையின் சூசனை வெளிப்பாடு எனக் கூறப்படும் பண்பு இக்காட்சிகளில் காணப்படுவதாக அ.யேசுராசா அவர்கள் சுட்டிக்காட்டினார்.

எதையுமே பட்டென்று போட்டுடைத்து காட்சியின் அவல உணர்வைப் பார்வையாளனிடத்தில் தொற்றவைக்கும் மிகை இயல்பினைத் திரைப்படங்களில் கண்டு கொண்டாடிவரும் ரசிகர்கள் ஒரு நல்ல கலைப்படைப்பில் எவ்விதமாக அத்தகைய இடங்கள் கையாளப்படவேண்டும் என்பதை இப்படத்தின் மூலம் துல்லியமாக உணர்ந்து கொள்ளமுடியும்.

பொதுவாக நமது தமிழரசனை ஒரு பார்வையாளனைப் பிரமிப்பில் ஆழ்த்துவதை அல்லது திகிலூட்டிப் பரபரப்புக்குள்ளாக்குவதை அல்லது ஒருமாயை மயக்கு நிலையில் ஆழ்த்துவதை ஆழ்ந்த சோகத்திற்குள்ளாக்கி அழுகைவரப் பண்ணுவதை ஒரு படத்தின் நல்லம்சமாகக் கொள்ளுமாறு வழிப்படுத்தப்பட்டு வந்துள்ளது.

ஒரு தரமான கலைப்படைப்பானது பார்வையாளனுக்குப் பல விடயங்களை உள்ளுறை நிலையில் சூசகமாக உணர்த்துவதை ஒரு பண்பாக கொண்டிருக்கும். பார்வையாளனது ரசனை. அறிவு. உளவளம் குறித்த ஒரு விடயம் பற்றிய பார்வைத் தெளிவு இவற்றையெல்லாம் மனதில் வைத்துக் கொண்டுதான் ஒரு கலைஞன் படைப்பொன்றைத் தருகிறான். அது கவிதையானாலும் சரி. ஓவியமானாலும் சரி. திரைப்படமானாலும் சரி. அந்தப் படைப்பை ரசிக்கும் கணங்களைத் தாண்டிப்போன பிறகும் அதன் அதிர்வுகள் நெடுநேரம் அந்த ரசிகன் அல்லது பார்வையாளனிடம் இருக்கும். இத்தகைய படைப்புகள் தான் அமரத்துவத்தைத் தமது இயல்பென வரித்துக்கொள்கின்றன.

இத்திரைப்படத்தின் கமெரா மற்றும் காட்சியமைப்பின் சிறப்புகளும் உரையாடலில் எடுத்துப் பேசப்பட்டன.

பல புதிய முகங்களும் பார்வையாளராக வந்திருந்தமையை அவதானிக்க முடிந்தது.

---

## அசோக ஹந்தகமவின் இவ்வழியால் வாருங்கள்

'**தனி** தடுவென் பியாம்பன்ன' (தனிச்சிறகால் பற). 'மே மகே சந்த' (இது எனது நிலவு) போன்ற திரைப்படங்களையும் 'துன்கிந்த அத்தற' (துன்கிந்த அருகில்). 'தியகட பகன' (பனிக்கட்டி விளக்கு). 'சிந்தடிக் சிகின' (சிந்தடிக் கனவு) போன்ற தொலைக்காட்சி நாடகங்களையும் இயக்கிய தென்னிலங்கையின் பிரபல திரைப்பட. தொலைக்காட்சி நாடக இயக்குநர்களில் ஒருவரான அசோகா ஹந்தகம நீண்டகால இடைவெளியின் பின்னர் மீண்டும் தொலைக்காட்சி நாடகப் பக்கமாக தனது பார்வையை செலுத்தி இவரது காத்திரமான இப்படைப்புக்கள் சில சமயங்களில் மிகுந்த சர்ச்சைகளையும் உருவாக்கிவிட்டுச் சென்றிருக்கின்றன. நீண்டகால கருத்தரிப்பின் பின்னர் இலங்கையின் சமூக. அரசியல் ஓட்டங்களை அலசிக்கொண்டு 'இவ்வழியில் வாருங்கள்' எனும் தொலைக்காட்சி நாடகத்துடன் உங்களை சந்திக்க விருக்கின்றார் இயக்குநர் அசோகா ஹந்தகம.

"இவ்வழியில் வாருங்கள்" தொலைக்காட்சி நாடகத்தொடர் இம்மாதம் 17ஆம் திகதி முதல்பிரதி சனிக்கிழமைகள் தோறும் ரூபவாஹினி 'ஐ' அலைவரிசையில் இரவு 8.30 மணிக்கும். அதன் மீள்ஒளிபரப்பு இம்மாதம் 18ஆம் திகதி முதல் பிரதி ஞாயிற்றுக்கிழமைகள் தோறும் பிற்பகல் 3.00மணிக்கு தேசிய ரூபவாஹினியிலும் ஒளிபரப்பாக இருக்கின்றது.

"இவ்வழியில் வாருங்கள்" நாடகம் ஒரு காலத்தின் பதிவாகும். யாழ்.கண்டி வீதி திறக்கப்பட்டது. பாதையில் பல சம்பவங்கள்.... மக்களின் பயணங்கள்.... பல குடும்பங்களின் கதை. யுத்தம். சமாதானம். வாழ்க்கை. மரணம். காதல். வெறுப்பு என மக்களின் பல வாழ்வியல் பக்கங்களை வருடிச்செல்கிறது.

இலாப நோக்கங்களை அதிகமாகக் கொண்டு வெளிவருகின்ற தொலைக்காட்சி நாடகங்களின் மத்தியில் "இவ்வழியில் வாருங்கள்" முற்றிலும் மாறுபட்டு நுணுக்கமான கலையனுபவங்களை அணுகுவதாக காணப்படுகின்றது. இதனை தயாரித்து வழங்கிய 'யங் ஏசியா டெலிவிஷன்.' நீண்டகாலமாக சமாதானம். கல்வி. மனிதஉரிமை போன்ற விடயங்களில் விழிப்புணர்வை உருவாக்கும் விவரணப்படங்களையும் மற்றும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளையும் தயாரித்து வழங்கிவருகின்றது. 'யங் ஏசியா டெலிவிஷன்' முதல் முறையாக தயாரித்து வழங்கும் இந்த தொலைக்காட்சி தொடர் நாடகத்தில் யங் ஏசியா டெலிவிஷனின் தேர்ச்சியுள்ள இளம் கலைஞர்கள் அதிக பங்களிப்பினை வழங்கியுள்ளனர்.

றஞ்சித் அமரசேகர. ராஜா கணேசன். ஏ.எம்.எம்.மன்சூர். எல்.தர்ஷன். பி.கலிஸ், தரிந்தி பொன்சேகா. ஆர்.ராஜேஸ்வரி. கமலா மோகன்குமார. நேரகிம் ஷஹீட். பி.ஜீவிதா போன்றோர் பிரதான பாத்திரங்களை ஏற்று நடிக்கின்றனர்.

### தொலைக்காட்சித் தொடர்

*கலை இயக்கம்:* பற்றிக் டேவிட்.
*படத்தொகுப்பு:* எம்.யோகேந்திர.
*ஒளிப்பதிவு:* சன்னதேசப்பிரிய.
*இசை:* கபில புகலராச்சி. *திரைக்கதை - காட்சியமைப்பு -இயக்கம்:* அசோக்க ஹந்தகம

இலங்கையிலுள்ள அனைத்து மொழி மக்களும் புரிந்துகொள்ளும் வகையில் தமிழ். சிங்கள உபதலைப்புக்களுடன் தொலைக்காட்சி நாடகம் தொகுக்கப்பட்டுள்ளது.

---

## கவிதைக் கனவுகள்

### ஆத்மாவின் ஏக்கம்

என் இதயத்தின் இனியவனே!
உந்தன்
நினைவுகளைப் புரட்டிப் புரட்டி
சோர்ந்தே போனேன்
கணவன் - மனைவி - குடும்பம் என்று
எத்தனை எத்தனை
இனிய கனவுகளை
சிறுக சிறுக சேகரித்து
வெண்ணெய் திரளும் வேளையில்
தாழி உடைந்த கதைபோல்
ஆனதேன் என் வாழ்வு
வாழ்வு என்பது
எனக்கோர் சாபமானதேன்?
எத்தனை நாள்கள் - நான்
உந்தன் நினைவுகளோடு போராடுவது?
என் இதயத்தையே கருக்கும்
இடியாக நீ மாறிய போதும்
என் அன்பே!
நான் உன்னை நேசிக்கிறேன்
உந்தன்
ஒரு வார்த்தைக்காக
தினமும் தினமும்
ஏங்கித் தவிக்கிறேன்
நீ
என் கழுத்தில் இட்டது
மாலையா? மந்திரக்கோலா என்று கூட
எனக்குப் புரியவில்லை
ஊரும் உலகமும் அறிய
நான் உந்தன் மனைவி
ஆனால் - உண்மை
எனக்கல்லவா தெரியும்
எந்தன் இன்ப உறவே!
உன் வாழ்வையும் அழித்து
என் வாழ்வையும் அழித்து
என் வாழ்வையும் சிதைக்காதே
உன் மனம் திறந்து
என்னுடன் பேசு
நீ மௌனமாய் இருப்பதால்
ஏது பயன்?
என் இதயத்தின் ஒளி விளக்கே!
என் வாழ்வில்
நீ ஒளியேற்றவில்லை என்றால்
நான் என்றும்
வெளுக்காத கிழக்குத்தான்.

இ.ஜெனீத்ரா.

### என் மௌனத்திரை கிழித்து...

இளநீல விரைவுடன் வானம்
மென் காற்று செஞ்சூரியனென
வர்ணக் கலவையின்
தூறலுடன்....
என் உலகம்
ஒளிரவுடன் சுழன்றபோது
நீ வந்தாய்,
வந்தபின்....
அலையோசை ஆரவாரிப்பின்றி
கனவுக் குமிழ்களுடன்
காத்துக் கிடக்கிறது
அகக்குளம் ~ நீ
கல்லெறிந்த பின்னும்
உன் சொல்லுக்காய்
ஒரு தென்றலின் தொடர்வாக
பழகிய நினைவுகள்
மனம் வருட
இதயமோ சிலுவையில்
மரணம் நோக்கி
முகம்!
வெளியே புன்னகை பூசியபடி
நீயெறிந்த குறுவாள்
தன்னைத் துண்டாட வில்லையென
போலிச் சந்தோசம்
நிறுவிக் கொண்டு
புதுக்கவியாய் நீ பூக்க
உன் புன்னகை ~ அதில்
நான் தேட
காலம்....
நிறமிழந்து சருகாய் உதிர
நீயும் நானும்
தனித் தனிப் பாதைகளில்
சேரிடம் கல்லறைதானோ?
அன்பனே!
பதில் கூறு!

த.துகி

யாழ்ப்பாணம்



# முரண்பாடு

அர்த்தங்கள் நிறைந்த சந்தோசமான அகில வாழ்க்கையில் எத்தனையோ பிரச்சினைகள் எத்தனையோ முரண்பாடுகள் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டு செல்கின்றது. இந்த முரண்பாடுகளும் பிரச்சினைகளும் எத்தனையோ மனித உறவுகளைப் பிரித்து விபரீதமான விளைவுகளுக்கு இட்டுச் செல்கின்றன. ஆகவே. இம்முரண்பாடுகள் பற்றி தெளிவாக வேண்டிய தேவை மனித வர்க்கத்திற்கும் இன்றியஅமையாத ஒன்றாகி விட்டது.

முரண்பாடு என்றால் என்ன? இதற்கு அடிப்படை என்ன? முரண்பாட்டிற்கும் பிரச்சினைக்கும் இடையிலான வேறுபாடு என்ன? இது இருவருக்கிடையில் மட்டுமா உருவாக்கப்படும்? முரண்பாடு ஏன் தீர்க்கப்பட வேண்டும்? இதைத் தீர்ப்பதற்கான வழிகள் என்ன என்பது பற்றியெல்லாம் கொஞ்ச நேரம் சிந்திக்கலாம்.

## எது முரண்பாடு

முதலில் நாம் முரண்பாடு என்றால் என்ன? என்பது பற்றி நோக்குவோம்.

முரண்பாடு என்பது ஒரு துறைசார்ந்த விடயம் பற்றி வெவ்வேறு வடிவங்களுக்கு ஊடான எதிர்மறையான கருத்துக்கள் சரியான நியாயங்களுடன் முன்வைக்கப்படுதலே ஆகும்.

ஒரு விடயம் பற்றி ஒருவருக்கிடையிலோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவர்களுக்கிடையிலோ வெவ்வேறு கருத்துக்கள் சரியான காரணங்களுடன் நியாயப்படுத்தப்படும் பட்சத்தில் அதையே நாம் முரண்பாடு என்கிறோம்.

இந்த முரண்பாடானது உருவாக்கப்படுவதற்கு அடிப்படை என்ன?

ஒருவரின் நடத்தை என்பது ஒருவருக்கு தனித்துவமானது. அவற்றைப் பொருததமானவை என்றும் பொருத்தமற்றவை என்றும் வகைப்படுத்தலாம். குறிப்பிட்ட இடத்திற்கும். சூழலிற்கும். பொருத்தமற்ற நடத்தைகளே முரண்பாடுகளுக்கு அடிப்படையாக அமையலாம். (தோற்றுவிக்கும்)

நடத்தைகள் மாற்றப்படக்கூடியவை. உலகம் முழுவதும் உள்ள மனிதர்கள் அனைவருக்கும் ஒரே மாதிரியான தேவைகள் உள்ளன. அத்தேவைகள் நிறைவு செய்யப்படாத போது மறைவான உணர்வுகள் தோன்றுகின்றன. அவற்றின் விளைவாக முரண்பாடுகள் தோன்றலாம். ஆகவே முரண்பாடுகள் அடிப்படையில் இரு வேறு துருவங்களுக்கூடாக உருவாகும் என்பதை முதலில் நாம் தெளிவாக்கிக்கொள்ளவேண்டும்.

தனி ஒருவருக்கிடையிலும் ஏற்படுகின்ற முரண்பாடுகளும் உண்டு. அதைத் தான் தனிமனித முரண்பாடு என்பர். இது பெரும்பாலும் தனது நடத்தைக் கோலங்கள் தனது வெளி உணர்வுகள் பற்றியே உருவாகும்.

அதாவது தனது ஆளுமை விருத்திக்கு ஏற்ப உருவாக்கப்பட்ட தனது தனித்துவத்திற்கும். சமூக எதிர்பார்ப்பிற்கும் இடையில் மாறுதல்கள் ஏற்படுகின்ற போது தனிமனித முரண்பாடுகள் ஏற்படலாம். இதில் இரு துருவங்களுக்கிடையில் உள்ள (மனம்-சமூக எதிர்பார்ப்பு) சரியான நியாயங்களே தனிமனித முரண்பாட்டினை வலுப்படுத்துகின்றது. இதைவிட இரு நபர்களுக்கிடையிலோ அல்லது இரண்டிற்கும் மேற்பட்ட நபர்களுக்கிடைலோ இது ஏற்படலாம். அதாவது ஒரு விடயம் பற்றிய வெவ்வேறு கருத்துக்கள் எத்தனை பேரிடத்தில் இருக்குதோ. அத்தனை பேர் அம்முரண்பாட்டின் ஆளணிகள் ஆகலாம்.

முரண்பாட்டிற்கும் பிரச்சினைக்கும் இடையில் வேறுபாடுகள் உண்டு. முரண்பாட்டிற்கு குறைந்தது இரு பக்கங்கள் இருக்கும். ஆனால். பிரச்சினைக்கு பக்கங்கள் இல்லாதும் இருக்கலாம். முரண்பாட்டில் உள்ளடக்கப்படும் இரண்டு பக்கங்களிற்கும் சரியான சமனான நியாயங்கள் இருக்கும். ஆனால். பிரச்சினையில் ஒரு பக்கத்தில் மாத்திரம் சரியான நியாயங்கள் தலை தூக்கும். சுருக்கமாகக் சொன்னால் பிரச்சினையை விட முரண்பாட்டைத் தான் தீர்ப்பது மிகக் கடினம்.

## தீர்வு

முரண்பாடுகள் ஏன் தீர்க்கப்பட வேண்டும்?

இந்த மனிதப் பிறப்பின் வெற்றி என்று எதைக் கருதுகிறீர்கள்? நான்கு மனிதர்களுடன் சந்தோசமாக வாழ்ந்த்துதான் எமக்குக் கிடைக்கும் இறுதி வெற்றியாகும். புகழ். பணம். அந்தஸ்து இவையெல்லாம் சுமூகமான உளநிலைக்கு வித்திடாது. எந்தச் சந்தர்ப்பத்திலும் சந்தோசமாக இருக்கப் பழக வேண்டும். வாழ்க்கையின் பெரும் சொத்து எது தெரியுமா? அதுதான் மனிதர்கள் என்கின்ற சொத்து. இது மிகவும் பாதுகாக்கப்பட வேண்டிய கிடைக்காத ஒரு சொத்து ஒரு மனிதரின் நட்பை சம்பாதிப்பது மிகவும் கஷ்டமான விடயம். ஆனால். அதை உடைத்து விடுவது மிகவும் இலகு. பிறந்தோம். வாழ்ந்தோம். இறந்தோம். இதில் எதைக் கண்டோம்? எமது மனித சமூகத்தோடு சந்தோசமாக இருந்ததைக்தான் கண்டோம் ஆகவே இந்த மனித உறவுகள் உடையக் கூடாது.

முரண்பாடுகள். பிரச்சினைகள். வாழ்வின் இயல்பான பகுதிகள் இவை எல்லாம் சண்டையில் முடிவடைவதுமில்லை. முடிவடையத் தேவையுமில்லை. இந்த மனித சொத்துக்களை சேர்க்கவேண்டும் எனில் சில முரண்பாடுகள் அவ்வப்போது தீர்க்கப்பட வேண்டும். இல்லையேல் வாழ்வில கிடைக்காத செல்வம் எனப் போற்றப்படும் மனித உறவுகளை இழக்க நேரிடும்.

முரண்பாடுகள் வராமல் ஒருவன் வாழ முடியாது. ஏனெனில் பல எண்ணங்கள் பரிமாறப்படும் பாரம் நிறைந்த புமி இது. ஆகையால் இம் முரண்பாடுகளை அவ்வப்போது தீர்த்துக் கொள்வதே ஆரோக்கியமானதாகும். ஆரோக்கியமான உளம் உடைய ஒருவர் முரண்பாடுகளை பேசித் தீர்த்துக் கொள்ளமுயல்வர். வெளிப்படையாகப் பேசுதல் என்பது பல வகையான முரண்பாடுகளுக்கு தீர்வைக் கொடுக்கும்.

முரண்பாட்டுக்குத் தீர்வு மிக அவதானமாக செயற்படுத்தப்பட வேண்டிய தொன்று முரண்பாடுகளும் பிரச்சினைகளும் சில சமயங்களில் நன்மை தருவனவாக அமைந்தாலும் கூட. அவை பெரிதாகும் போது பெரிய அழிவையே ஏற்படுத்தும். ஆகவே முரண்பாட்டைத் தீர்க்கும் போது அவதானம் மிக அவசியம்.


முதலில் முரண்பாட்டில் சம்பந்தப்பட்ட நபர்கள் அனைவரும் தீர்வினை வழங்க வருகின்ற நபரை ஏற்றுக்கொள்ளவேண்டும். அடுத்து பிரச்சினைகளை தீர்ப்பவர் மனச்சாட்சி புர்வமாக மிக நேர்மையாக தொழிற்பட வேண்டும். இரு பக்கங்களுக்கும் உரிய நியாயங்களை முன்வைத்தலுக்கு சமனான சந்தர்ப்பங்கள் வழங்க வேண்டும். அத்தோடு முரண்பாட்டைத் தீர்க்கும் போது யாரையும் புண்படுத்தாது தண்டிக்காது அச்சுறுத்தாது இருக்க வேண்டும். ஏனெனில் அது விபரீதமான உளநிலைக்கு வித்திட்டு விடும். உளவியலில் முரண்பாட்டுத் தீர்விற்கான மூன்று நிலைகள் உண்டு.

01. தாழ்வுப் போக்கான வெளிப்பாடு
02. உறுதியான வெளிப்பாடு
03. ஆக்ரோக வெளிப்பாடு

இதில் உறுதியான வெளிப்பாடே தீர்விற்கு சிறந்தது என உளவியலாளர்கள் கூறுகின்றனர். இம் முரண்பாடுகளை நல்ல முறையில் தீர்ப்பதற்கு ஆழ்ந்த பயிற்சியும். நல்ல திறனும் தேவை. இம் முரண்பாட்டை தீர்க்கும் உத்திகளை உளவியலாளர்க்ள் பல கட்டமைப்புகளுக்கு ஊடாக ஆராய்கின்றனர்.

உளவியலாளர்களின் தீர்வுக் கட்டமைப்பிற்கு ஏற்ற வகையிலும். அந்சந்தர்ப்பத்தில் ஏற்படும் எமது ஆளுமை மாண்பிற்கு ஏற்ற வகையிலும் மிகவும் அவதானமாக தீர்வினை வழங்கவேண்டும். முரண்பாட்டைக்கொண்டு வந்தவர்கள் தீர்வினைப் பெற்று வெளியேறும் போது எந்த விதமான மனக் கோணல்களும் இன்றி நிரந்தரமான நியாயமான. எதிர்காலத்தில் பொய்ப்பிக்கப்படமுடியாது. தனித்தனியாக உளநிறைபெற்ற தீர்வோடு வெளியேற வேண்டும். இவ்வாறு இருந்தால் தான் சரியான முரண்பாட்டைத் தீர்வாக அமையும்.

*- மேனன்.*



# யார் இந்தச் சிங்களவர்?

தென்னிந்தியாவில் சமணம். புத்தம் ஆகிய மதங்கள் ஓங்கி இருந்தகாலத்தில் அப்பர். சம்பந்தர் அவதரித்தார்கள். (2ஆம் .3ஆம் நூற்றாண்டளவில்) இவர்கள் காலத்திலிருந்து இவ்விரு சமயங்களும் நிலைகுலையத் தொடங்கிவிட்டன. சைவம் பழைய நிலைக்குத் திரும்பிக் கொண்டிருந்தது. சமணகுருமார்களும் புத்தகுருமார்களும் இடம்பெயரவேண்டிய நிலை உண்டாகியது.

இலங்கைக்கு பெருமளவில் புத்தகுருமார்கள் வந்தனர். இந்த காலகட்டத்தில் தான் "மகா வம்சம்" எழுத ஆரம்பிக்கப்பட்டது. புத்த குருமார்களுக்குத் தெரிந்த முக்கிய மொழி பாளி. மற்றது தமிழ்.

பாளி சாமானியர்களுக்குத் தெரியாது. அவர்கள் பேசிய மொழி தமிழ். தமிழ் கலந்த வழக்கிலுள்ள கிராமிய மொழி. இந்தக்கிராமிய மொழிகள் இடத்துக்கிடம் வித்தியாசமாக இருந்தன. எழுத்துவடிவம் பெறவில்லை.

சிங்களம் என்ற மொழி இருக்கவில்லை. இந்தத் தீவுக்கு சிங்களம். சிகளம். சீலம். ஈழம் என்ற பெயர்களும் வழக்கில் இருந்தன. ஆனால். அது மொழியையோ. சாதியையோ கொண்ட காரணத்தினால் அல்ல. (Ancient Jaffna by Mudaliyar Rasanayagam)

சிங்களம் என்ற மொழி எழுத்து வடிவம் பெற்றது 13ஆம் நூற்றாண்டில்தான். சேர நாட்டில் எப்படி மலையாள மொழி வந்ததோ அப்படித்தான் இங்கும் சிங்களம் வந்தது. தமிழ். பாளி. சமஸ்கிருதம் வழங்கிலிருந்த கிராமியப் பாஷையும் சேர்ந்து சிங்களம் உருவானது.

இலங்கையில் சிங்கள மன்னர்கள் எவரும் இருக்கவில்லை. பாராக்கிரமபாகு முதலியோர் சிங்களவர் அல்லர். பராக்கிரமபாகு புநூல் அணிந்தவர். அவர் யாழ்ப்பாண அரசவம்சத்தைச் சேர்ந்தவர். இவர்களை சிங்களவர்களாக ஆக்கிக் கொண்டார்கள்.

இலங்கை முழுவதும் ஒரே மக்கள்தான் பெரும்பாலும் வாழ்ந்தார்கள். ஆனால். இடத்துக்கிடம் பேசப்பட்ட மொழியில் சிறு சிறு வித்தியாசங்கள் இருந்தன. அடித்தளம் தமிழ் மொழிதான். ஆள்களின் பெயர்கள் எல்லாம் ஒரேமாதிரியானவை. உச்சரிப்பு மாத்திரம் பாளியில் பராக்கிரமவாகு என்றும் இங்கு பராக்கிரமபாகு கூறப்பட்டது. புளியங்குளம் இப்போது புளியங்குளம. தேவ நம்பிய தீசனின் தகப்பன் பெயர் மூத்தசிவம். ஆனால். இன்றைக்கு அந்தப் பெயர் மூத்தசிவ என்று பள்ளிக் கூடப் புத்தகங்களில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

சிறி விக்கிரமராசசிங்க இலங்கையர் அல்லர். இந்தியத் தமிழன். ஆங்கிலேயர் கண்டி இராச்சியத்தைப் பிடித்தபோது ஒரு ஒப்பந்தம் எழுதப்பட்டது. (Kandyan conucntion) இதிலே கையொப்பமிட்டவர்கள் இராசசியத்தை சேர்ந்த முகாமையாளர் (Chiefs - Kandyan Chief Who were against the King) இவர்கள் எல்லோரும் கையொப்பம் இட்டது தமிழில்.

இரண்டொருவரைத் தவிர ஏனையோர் நல்ல வடிவான ஏழுத்தில் எழுதியிருக்கிறார்கள். இதில் இருந்து என்ன புரிகின்றது. இவர்கள் தமிழர். தமிழ் படித்தவர்கள்.

இப்போது சிங்களவர் தாங்கள் சுத்த சிங்களவர் என்று சொல்லிக்கொள்ளுகிறார்கள்; சிங்களவர் என்று ஒரு சாதியர் இருக்கவில்லை.

நாகர்கள். தமிழர்கள். தமிழ்ச்சங்கங்களில் நாகப் புலவர்கள் அநேகமானோர் குறிப்பிடப்பட்டுள்ளனர். காவேரிப் பும்பட்டினத்தில் வாழ்ந்தவர்கள் நாகர்கள் என்று சிலப்பதிகாரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இயக்கரும் பேசிய மொழி தமிழை அடித்தளமாகக் கொண்டதே.

1950ஆம் ஆண்டு செல்வக்கதிர்காமத்தில் ஒரு வேடுவரைச் சந்தித்தேன். அவன் பேசியது சுத்தமான தமிழ். இந்த Kandyan con-ucntion மூலப்பிரதி British meuseim யத்தில் இருக்க வேண்டும். ஒரு வெள்ளைக்கார அரச அதிபர் கண்டியில் இருந்தவர் என்று நினைக்கிறேன். தமிழ் பகுதியைப் பிரித்து நிர்வாகம் செய்வது நல்லது என்று சிபாரிசு செய்திருந்தார்.

மகாவம்சத்தில் சொல்லப்பட்ட கதைகளும் விவரங்களும் விசித்திரமானவையும் நம்பத்த காதவையும் ஆகும். விசயனும் தோழர்களும் 3 கப்பலில் வந்தார்கள். ஒரு கப்பலில் ஆண்கள். ஒன்றில் பெண்கள் ஒன்றில் பிள்ளைகள் இது சாத்தியமா. Dr.அதிகாரம் இந்த மகாவம்சத்தை எரிக்கவேண்டும் என்று சொல்லியிருக்கிறார்.

விசயனுக்கும் சிங்களவர்களுக்கும் எந்த விதமான தொடர்புமில்லை. விசயன் வந்தது தற்போதைய Orissa (கலிங்க நாடு). சிங்க என்ற பெயர்கள் எல்லாம் அந்த நாட்டுடன் தொடர்புபட்டவை. சிங்கப்புரும் அப்படித்தான். வல்லிபுரக்குறிச்சியில் இருந்த சிங்க நகரும் அப்படித்தான் கலிங்க நாட்டோடு குறையத் தொடர்பு அவற்றுக்கு இருந்தது.

துட்டகெமுனு ஒரு நாகன். நாகர் தமிழ் மொழி பேசியவர்கள். மலைப்பிரதேசங்களை விட ஏனைய பிரதேசங்களில் நாகர்கள்தான் வசித்தார்கள். தேவநம்பியதீசன் அநுராதபுரத்தில் அரசாண்டான். இவனுடைய அண்ணன் மகாநாகன் (மாகம) திசமாகரகமாவில் அரசாண்டான். களனி. திருகோணமலை பகுதிகளிலும் நாகர்கள்தான் அரசாண்டார்கள். காக்கவண்ணதீசன் களனி ராசகுமாரத்தி விகாரமகாதேவியை மணம் முடிததான். அப்படியானால் துட்டகெமுனு எப்படி சிங்களவனாக முடியும்?

சிங்களவர்கள் என்ற சாதியர் எப்ப வந்தவர்கள். துட்டகெமுனு காலத்தில் சிங்களச்சாதியர் இருக்கவில்லை. மொழியும் இருக்கவில்லை. 'சூளவம்சம்' மாகாவம்சத்திற்கு முந்தியது. இதன் ஒரு பிரதி பர்மாவில் இருந்தாக கல்விமான் குலசேகரம் தன்னுடைய Ham Book 1+2 வில் குறிப்பிட்டிருக்கிறார். அந்தப்பிரதியில் எல்லாளனுக்கும் துட்டகெமுனுவுக்கும் சண்டை நடந்ததாகக் குறிப்பிட்டிருக்கவில்லை. என்று கூறுகின்றார். இரண்டு இராசாக்களையும் குறிப்பிட்டிருக்கு. சண்டையை குறிப்பிடவில்லை. *(தொடரும்)*

*- த.மகேந்திரன்.*



# சாதனை நாயகன் ஸ்ரீவ் வோ

தொகுப்பு: தாரணி

**இக்கட்டான நேரங்களில் சவால்களுக்கு முகம் கொடுத்துத் தனது அணியைத் தோல்வியின் விளிம்பிலிருந்து காப்பாற்றியதில் அல்லது வெற்றிப் பாதைக்கு அழைத்துச் சென்றதில் கட்டியெழுப்பப்பட்டது தான் ஸ்ரீவ் வோவின் கிரிக்கெட் வாழ்க்கை.**

கிரிக்கெட! பலரைத் தனது மந்திரசக்தியால் கட்டிப்போட்ட ஒரு விளையாட்டு. உலகின் பிரதான ஐந்து கண்டங்களிலும் குறிப்பாக ஆசியாக் கண்டத்திலிருக்கும் இலங்கை. இந்தியா. பாகிஸ்தான். பங்களாதேஷ் ஆகிய நாடுகளின் பட்டிதொட்டிகளெங்கும் வேர்விட்டு கிளை பரப்பி எட்டுவயதுச் சிறுவர் முதல் எண்பது வயதுக் கிழவர்வரை அனைவரையும் கொள்ளை கொண்ட ஒரு விளையாட்டு கிரிக்கெட்.

அதில் எதிர்க்கருத்துக்கு இடமில்லை. கிரிக்கெட் விளையாட்டு ஆங்கிலேயர்களால் உலகில் அறிமுகப்படுத்தப்பட்டது. முதலாவது டெஸ்ட கிரிக்கெட் போட்டி ஆஸ்திரேலியாவுக்கும் இங்கிலாந்துக்குமிடையில் 19ஆம் நூற்றாண்டின் இறுதியில் நடைபெற்றது. அன்றிலிருந்து இன்று வரை இவ்விளையாட்டில் தனக்கென ஒரு முத்திரையை ஆஸ்திரேலிய அணி பதித்து வருகின்றது. 1987. 1999. 2003 ஆம் ஆண்டுகளில் கிரிக்கெட் உலகக்கோப்பையைக் கைப்பற்றி. உலகக்கோப்பையை மூன்று முறை கைப பற்றிய ஒரே அணி என்ற பெருமையையும் ஆஸ்திரேலியா தனதாக்கிக் கொண்டது.

கிரிக்கெட் அணியின் வெற்றி தோல்விகளுக்கு அதனைத் தலைமையேற்று வழி நடத்தும் அணித்தலைவரின் பங்கு மிக முக்கியமானது. தனது அணி வீரர்களின் தனித்துவமான திறமைகளை இனங்கண்டு. அவற்றை உரிய முறையில் பயன்படுத்துதல். எதிரணித் துடுப்பாட்ட வீரர்களை ஆட்டமிழக்கச் செய்வதற்கேற்ற சிறந்த வியூகங்களை அமைத்தல். தனது அணி இக்கட்டை எதிர்நோக்கும் போது மனம் தளராது சூழ்நிலைக்கேற்றவாறு சிறந்த முடிவுகளை எடுத்தல் போன்ற திறன்களே ஒரு சிறந்த கிரிக்கெட் அணித்தலைவரை ஏனையவர்களிடமிருந்து வேறுபடுத்திக்காட்டுகின்றன.

அந்த வகையில் கிரிக்கெட் அணித் தலைவர்களில் ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் தலைவர் ஸ்ரீவ் வோ மிகவும் முக்கியமான ஒருவராகக் கிரிக்கெட் அவதானிகளால் கணிக்கப்படுகிறார்.

அன்று நவம்பர் 26-2003 இடம் ஆஸ்திரேலியாவின் புகழ்மிக்க சிட்னி கிரிக்கெட் மைதானம். நேரம் காலை 10.30 மணி. ஆஸ்திரேலியாவின் புகழ்மிக்க கிரிக்கெட் மைந்தர்களில் ஒருவரும் ஆஸ்திரேலியக் கிரிக்கெட் அணியைப் புகழின் உச்சிக்கு அழைத்துச் சென்றவருமான ஸ்ரீவ் வோ மிக முக்கியமான அறிக்கையொன்றை செய்தியாளர்கள் முன்னிலையில் வாசிக்கவிருக்கின்றார். அவர் என்ன சொல்லப்போகின்றார்? என்பதை அறியப் பத்திரிகையாளர்களும் அவரைப் புகைப்படம் பிடிக்கப் புகைப்படக் கலைஞர்களும் ஆவலுடன் காத்திருக்கிறார்கள்.

ஸ்ரீவ் வோ என்ன சொன்னார்? என்பதை அறியமுன் (S)ஸ்ரீபன் (R)றொட்ஜர்வோ என்ற மாபெரும் கிரிக்கெட் புத்தகத்தின் சில பக்கங்களை நாமும் புரட்டிப்பார்ப்போமா?....

1965ஆம் ஆண்டு ஜூன் மாதம் 2ஆம் நாளைக் கிரிக்கெட் வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் குறிக்கவேண்டும். அன்றைய தினத்தில்தான் கிரிக்கெட் சரித்ததிரத்திலேயே தலை சிறந்த டெஸ்ட் கப்டன் என வர்ணிக்கப்படும் ஸ்ரீவ் வோ. தனது இரட்டைச் சகோதரர் மார்க் வோவுடன் ஆஸ்திரேலியாவின் நியுசவுத்வேல்ஸ் மாகாணத்தின் கன்ரபறி என்ற இடத்தில் பிறந்தார். பிறப்பின் போது சில நிமிடங்கள் முந்தியதால் மார்க்கிற்கு அண்ணனான ஸ்ரீவ். கிரிக்கெட் விளையாட்டிலும் தனது இரட்டைச் சகோதரனை முந்திவிட்டார்.

துடுப்பெடுத்தாடுகையில் மிக அழகாக கலைநயத்துடன் ஆட வல்லவர் என மார்க் வோவை கிரிக்கெட் வர்ணனையாளர்கள் முன்பு வர்ணித்திருந்தார்கள். ஆனால். கிரிக்கெட்டில் அழகாக ஆடுவது அவசியமல்ல ஓட்டங்கள்தான் முக்கியம் எனக் கருதிய ஸ்ரீவ் வோ அதிரடியாக ஆடிச் சர்வதேசக் கிரிக்கெட் போட்டிகளில் 18.496 ஓட்டங்களை மலை போல் குவித்து வைத்துள்ளார். உலகில் பல நாடுகளிலும் பல கிரிக்கெட் சகோதரர்கள் விளையாடியுள்ளார்கள். விளையாடிக் கொண்டிருக்கிறார்கள் (கென்ய அணி) அவர்களில் எல்லாம் வோ சகோதரர்கள் மிகவும் புகழ்மிக்கவர்கள். உலகின் புகழ் மிக்க முதலாவது கிரிக்கெட் இரட்டையர்கள் என வோ இரட்டையர்களைக் கருதவும் இடமுண்டு.

கிரிக்கெட் டெஸ்ட் வரலாற்றில் இது வரை ஆடிய அணிகளில் குறிப்பிட்ட சில அணிகளை கிரிக்கெட் சரித்திரத்திலேயே அதிசிறந்த அணிகளாகக் கிரிக்கெட் வல்லுநர்கள் பட்டியலிட்டுள்ளார்கள். அவற்றில் 1970 களின் இறுதியிலிருந்து 1980 களின் ஆரம்பம் வரை. கிளைவ் லொயிட் தலைமையில் ஆடிய மேற்கிந்தியத்தீவுகள் அணி முதன்மையானது. பல வெற்றிகளைக் குவித்து எதிரணியினருக்குச சிம்மசொப்பனமாகத் திகழ்நதது அவ்வணி.

அக் காலப்பகுதியில் நேரடித் தொலைக்காட்சி ஒளிபரப்பு போன்ற மீடியா வசதிகள் - தற்போதுள்ளது போல் - உலகெங்கும் பரநது விரிந்து அசுர வளர்ச்சி பெற்றிருக்கவில்லை. விண்ணில் வலம்வரப் போகும் ஒரு விண்வெளிவீரனைப் போல் கவச உடையணிந்து பலத்த பாதுகாப்பு முன்னேற்பாடுகளுடன் வேகப்பந்து வீச்சாளர்களை எதிர்



கொள்ளத் தயாராகும் தற்போதைய துடுப்பாட்ட வீரர்களுக்கிருக்கும் அனைத்துப் பாதுகாப்பு முன்னேற்பாடுகளும் மேற்கிந்தியத் தீவுகளின் கிரிக்கெட் பொற்காலம் எனப்போற்றப்பட்ட அக் காலப்பகுதியில் சிறப்பாக இருக்கவில்லை. விண்வெளி வீரனைப்போல் உடையணிந்த தற்காலத்துடுப்பாட்ட வீரர்களே. அதிவேகப் பந்து வீச்சாளர்களின் இடிமுழக்கப்பந்துவீச்சில் பலத்த காயங்களடையும் போது அக்காலத் துடுப்பாட்ட வீரர்களின் நிலையைப் பற்றி சொல்ல வேண்டியதில்லை.

இயற்கையாகவே விளையாட்டு வீரர்களுக்குரிய உடல்வாகைப் பெற்றிருந்த மேற்கிந்தியத் தீவினர் அள்ள அள்ளக் குறையாத அட்சய பாத்திரம் போல் ஏராளமான வேகப் பந்து வீச்சாளர்களை அக்காலகட்டத்தில் உருவாக்கிக் கொண்டிருந்தார்கள். நான்கிற்கும் அதிகமான வேகப்பந்துவீச்சாளர்களைத் தன்னகத்தே கொண்டு எதிரணியினரைத் துவம்சம் செய்தது. கிளைவ் லொயிட் தலைமையிலான மேற்கிந்தியத் தீவுகள் அணி. 1970களின் நடுப்பகுதியில். டென்னிஸ் லில்லி மற்றும் ஜெவ் தொம்ஸன் போன்ற ஆஸ்திரேலிய பந்துவீச்சாளர்களின் அதிவேகப்பந்து வீச்சில் (பாகிஸ்தானின் சொய்ப் அக்தருக்கு முன்னர் உலகிலேயே அதிவேகமாகக் கிரிக்கெட் பந்தை வீசிக் கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் இடம்பெற்றவர் இந்த ஜெவ் தொம்ஸன் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது) நிலைகுலைந்தது மேற்கிந்தியத்தீவுகள் அணி. ஆஸ்திரேலியாவிடம் பலத்த தோல்விகளைச் சந்தித்து டெஸ்ட் தொடரையே இழந்தது.

அத்தோல்வி கற்றுத்தந்த பாடத்தால். பல புதிய வேகப்பந்து வீச்சாளர்களை உருவாக்கிய மேற்கிந்தியத்தீவுகள் அணி கிரிக்கெட் உலகையே கலங்கடித்தது.

தாம் நாளை எதிர்கொள்ளப்போகும் மேற்கிந்தியத்தீவுகள் அணியின் வேகப்பந்து வீச்சைப் பற்றிச் சிந்தித்தே. அந்நாள் இரவைத் தூங்காமல் கழித்த துடுப்பாட்ட வீரர்களும் அக்காலத்திலிருந்திருக்கின்றார்கள். அவ்வளவு மூர்க்கமாகப் பந்துவீசி. எதிரணி வீரர்களைக் கதிகலங்கச் செய்து. குறைந்த ஓட்ட எண்ணிக்கையில் ஆட்டமிழக்கச் செய்ததின் மூலம் எதிரணியின் ஓட்ட எண்ணிக்கையை வேகப் பந்து வீச்சாளர்கள் கட்டுப்படுத்தினார்கள். அந்த எளிதான இலக்கை. சேர்வியன் றிச்சாட்ஸ் போன்ற திறமையான துடுப்பாட்ட வீரர்கள் மிக இலகுவாக எட்டியதின் மூலம் எதிரணியினரிடமிருந்து வெற்றிக்கனியைத் தட்டிப்பறித்தது மேற்கிந்தியத் தீவுகள் அணி.

அவ்வாறான தந்திரத்தைக் கையாண்டதின் மூலம் பல வெற்றிகளைப் பெற்ற கிளைவ் லொயிட் தலைமையிலான மேற்கிந்தியத் தீவுகள் அணி கிரிக்கெட் உலகின் முடிசூடாமன்னாகத் திகழ்ந்தது.

இதற்கு நேர்மாறாக. முதல் இன்னிங்சில் அதிரடிவேகத்தில் மலைபோல் குவிக்கப்பட்ட ஓட்டங்களைக் கண்டு மிரண்டு போன எதிரணியினைச் சிறப்பான பந்துவீச்சாலும் களத்தடுப்பாலும் கட்டுப்படுத்தி கிளைவ் லொயிட்டின் மேற்கிந்தியத் தீவுகள் அணியையே தூக்கிச் சாப்பிடும் அளவிற்குத் தொடர்ச்சியாக 17 டெஸ்ட வெற்றிகளைப் பெற்று ஸ்ரீவ் வோ தலைமையிலான ஆஸ்திரேலிய அணி சாதனை புரிந்தது.

இரண்டாம் உலகப் போரின் பின்னர் உருவான கிரிக்கெட் டெஸ்ட் அணிகளில் மிகச் சிறந்தவையெனக் கருதப்படுபவை கிளைவ் லொயிட்டின் மேற்கிந்தியத் தீவுகள் அணியும் ஸ்ரீவ் வோவின் ஆஸ்திரேலிய அணியுமே. இவ்விரண்டு அணிகளில் எது சிறந்தது என்பது பற்றிக் கிரிக்கெட் வல்லுநர்களிடையே ஒரு பெரிய சர்ச்சையே உள்ளது.

பொதுவாக இரு வேறுபட்ட காலங்களைச் சேர்ந்த அணிகளை ஒப்பிடுவது அவ்வளவு உகந்த செயல் அல்ல. ஏனெனில் அந்தந்தக் காலங்களையொட்டிய விளையாடும் சூழ்நிலைகள் மாறுபட்டவை. இருப்பினும் இரு அணிகளிற்கிடையேயும் பல ஒற்றுமைகள் காணப்படுகின்றன. கிளைவ் லொயிட்டும் ஸ்ரீவ் வோவும் தத்தமது காலங்களின் மிகச்சிறந்த டெஸ்ட் கப்டன்களாகக் கருதப்படக்கூடியவர்கள். வெற்றி பெறுவது ஒன்றே தமது இலக்கு எனக்கருதி பல வெற்றிகளை அள்ளிக் குவித்தவர்கள்.

இருவரும். சிறந்த துடுப்பாட்ட வீரர்களையும் பந்து வீச்சாளர்களையும் கொண்ட சிறந்த அணிகளை வழிநடத்தியவர்கள். கோடன் கிறினிஜ். டெஸ்மண்ட் ஹெயின்ஸ். விவியன் றிச்சாட்ஸ் போன்ற சிறந்த துடுப்பாட்ட வீரர்கள் கிளைவ் லொயிட்டிற்காக ஓட்டங்களைக் குவிக்கக் காத்திருந்தார்கள். இதற்குப் பதிலளிக்க. ஸ்ரீவ் வோவின் பக்கம் இருந்தவர்களோ மத்யூ ஹைடன். ஜஸ்டின் லாங்கர். றிக்கி பொன்டிங் போன்ற துடுப்பாட்ட நட்சத்திரங்கள்.

அனல்பறக்கும் வேகத்தில் பந்துகளை வீசி. எதிரணியின் விக்கட்டுக்களைச் சாய்க்க. லொயிட பயன்படுத்திய ஆயுதங்கள். மைக்கல் ஹோல்டிங். அன்டிறொபட்ஸ். மல்கம் மார்ஷல் மற்றும் ஜோயில் கார்னர் போன்ற வேகப்புயல்கள். வேகத்திற்கு வேகம் துல்லியத்திற்கு துல்லியம் என ஸ்ரீவ் வோவிடம் இருந்தவர்கள் கிளன் மக்ராத். டேமியன்பிளமிங். ஜேஸன் கிலெஸ்பி. பிரட்லீ போன்றவர்கள்.

ஆனால். போட்டி முடிவுகளைத் தீர்மானிக்கும் சக்தி வாய்ந்த. மெதுவான ஆடுகளங்களுக்கு ஏற்ற கிளைவ் லொயிட்டிடம் இல்லாத மிக முக்கியமான ஓர் ஆயுதம் ஸ்ரிவ் வோவிடம் இருந்தது. அதுதான் ஷேன் வோன். ஆம். அக்காலத்தில் லொயிட்டிடம் சிறந்த சுழல் பந்து வீச்சாளர்கள் இருக்கவில்லை. எனவே. சமநிலை பொருந்திய சிறந்த பந்துவீச்சு அணி எனும் போது ஸ்ரீவ் வோவின் அணி முதன்மை பெறுகின்றது. மேலும் களத்தடுப்பில் இரு அணிகளுமே சிறந்து விளங்கினாலும் தற்காலத்தில் களத்தடுப்பில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களைக் கருதுமிடத்து. ஸ்ரீவ் வோவின் அணி ஒருபடி மேலே நிற்கின்றது என்றால் மிகையல்ல. அந்த தந்தக் காலங்களிலிருந்து எதிரணிகளின் பலத்தைக் கொண்டே சிறந்த அணி எதுவென்பதைத் தீர்மானிக்க முடியும் என்ற ஒரு கருத்தும் உள்ளது. அவ்வாறாயின் கிளைவ் லொயிட்டிற்கே முதலிடம் என்று ஒரு சாரார் வாதிடுகின்றனர். எது எப்படியோ குவித்த வெற்றிகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் ஸ்ரீவ் வோ மிகவும் வெற்றிகரமான டெஸ்ட் கப்டனாக உயர்ந்து நிற்கின்றார்.

1985 - 86 காலப்பகுதியில் மெல்போர்னில் நடைபெற்ற இந்தியாவுக்கெதிரான 2ஆவது போட்டியில் தனது டெஸ்ட் வாழ்வைத் தொடங்கிய ஸ்ரீவ் வோ. ஏறக்குறைய இரண்டு தசாப்தங்களாகக் டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகள் விளையாடுவதற்கெனத் தனது வாழ்வை அர்ப்பணித்துள்ளார். உலகிலேயே அதிக டெஸ்ட் போட்டிகளில் விளையாடியவர் என்ற பெருமையும் ஸ்ரீவ் வோவையே சேரும். டெஸ்ட் போட்டிகளுடன் மட்டும் நின்றுவிடாமல் சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளிலும் ஸ்ரீவ் வோ தனது முத்திரையைப் பதிக்கத் தவறவில்லை.

1985 - 86 காலப்பகுதியில் நியுஸிலாந்திற்கெதிரான. போட்டியொன்றில் சர்வதேச ஒருநாள் போட்டிகளில் தனது முதலடியை எடுத்து வைத்த ஸ்ரீவ். 1987ஆம் ஆண்டில் ஆஸ்திரேலிய அணி உலகக் கோப்பை வெல்லத்தனது பங்களிப்பைச் செய்யத் தவறவில்லை.

ஸ்ரீவின் சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் என்ற வெற்றிக்கிரீடத்தில் வைரம் பதித்தது போன்று அமைந்த நிகழ்ச்சிதான். 1999ஆம் ஆண்டில் ஆஸ்திரேலியா உலகக் கோப்பையைக் கைப்பறி



யது தமது திறமையான அணுகுமுறையாலும் வழி நடத்தலாலும். அன்று கோப்பையை வெல்லும் என்று எதிர்பார்க்கப்பட்ட பலம் பொருந்திய அணிகளையெல்லாம் பின்தள்ளி விட்டு. ஆஸ்திரேலிய அணி உலகக்கோப்பையைச் கைப்பற்ற ஸ்ரீவ் வோ மகத்தான தனது பங்களிப்பைச் செய்திருந்தார்.

உலகக் கோப்பையைக் கைப்பற்றிய ஸ்ரீவ் தலைமையிலான ஆஸ்திரேலிய அணி அதன் பின் உலகின் பல பகுதிகளிலும் நடைபெற்ற சர்வதேச ஒருநாள் போட்டிகளில் மகத்தான பல வெற்றிகளையீட்டி ஏராளமான வெற்றிக் கோப்பைகளைச் சுவீகரித்துள்ளது. 2003ஆம் ஆண்டில் றிக்கிபொன்டிங் தலைமையில் ஆஸ்திரேலிய அணி மீண்டும் உலகக் கோப்பையைக் கைப்பறியபோது. அவ்வணியில் ஸ்ரீவ் வோ இடம்பெறாமல் போனது துரதிர்ஷ்டமே.

இக்கட்டான நேரங்களில் சவால்களுக்கு முகம் கொடுத்துத் தனது அணியைத் தோல்வியின் விளிம்பிலிருந்து காப்பாற்றியதில் அல்லது வெற்றிப் பாதைக்கு அழைத்துச் சென்றதில் கட்டியெழுப்பப்பட்டதுதான் ஸ்ரீவ் வோவின் கிரிக்கெட் வாழ்க்கை.

1994 - 95 இல் மேற்கிந்தியத் தீவுகளின் கிங்ஸடன் கிரிக்கெட் மைதானத்தில் ஆஸ்திரேலியர்களுக்கும் மேற்கிந்தியத் தீவினரிற்குமிடையில் போட்டி பரபரப்பாக. நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. நான்கு போட்டிகள் கொண்ட தொடரில். ஏற்கனவே இரு அணிகளும் தலா ஒவ்வொரு போட்டிகளில் வெற்றிபெற்றிருந்ததால் தொடரை யார் வெல்லுவது என்பதைத் தீர்மானிக்கும் மிக முக்கியமான போட்டி அது. பதினைந்து வருடங்களாக ஒரு டெஸ்ட் போட்டித் தொடரையும் இழக்கவில்லை என்ற மமதையில் மேற்கிந்தியத் தீவுகள் அணி.

அவர்களுக்குச் சரியான பாடம் கற்பிக்க வேண்டும் என்ற துடிப்பில் ஆஸ்திரேலிய அணி. ஆக மொத்தில்தில் இரு அணிகளுக்குமிடையே அங்கே ஜீவமரணப் போராட்டமே நடைபெற்றக் கொண்டிருந்தது.

இரசிகர்களை இருக்கையின் விளிம்பிற்கே அழைத்துச் செல்லக்கூடிய அந்தப் பரபரப்பான சூழ்நிலையிலும் பதற்றமடையாமல். பனைபோல் நெடுநெடுவென வளர்ந்திருந்த மேற்கிந்தியத் தீவுப் பந்து வீச்சாளர்களின் எகிறிவரும் வேகப் பந்துகளுக்குத் துணிவுடன் முகம்கொடுத்தார் ஸ்ரீவ் வோ.

*(சாதனை தொடரும்....)*